**தலைப்பு 103 - பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சு மற்றும் அந்த அமைச்சின் கீழுள்ள திணைக்களங்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை – 2013 ஆம் ஆண்டு**

---

## 1 ஆம் பகுதி

**பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள திணைக்களங்களின் கணக்குகள் மீதான சுருக்கமான அறிக்கை**

---

**1. அமைச்சின் கீழுள்ள திணைக்களங்கள்**

| செலவுத் தலைப்பு | திணைக்களத்தின் பெயர் |
|---|---|
| 222 | இலங்கை தரைப்படை |
| 223 | இலங்கை கடற்படை |
| 224 | இலங்கை வான்படை |
| 225 | பொலிஸ் திணைக்களம் |
| 226 | குடிவரவு குடியகல்வுத் திணைக்களம் |
| 227 | ஆட்பதிவுத் திணைக்களம் |
| 291 | கரையோரம் பேணல் திணைக்களம் |
| 320 | சிவில் பாதுகாப்புத் திணைக்களம் |
| 325 | இலங்கை கடற்கரை பாதுகாப்புத் திணைக்களம் |

**2. கணக்குகள்**

**2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு**

**(அ) மொத்த ஏற்பாடும் செலவும்**

அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள 09 திணைக்களங்களிற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மொத்த தேறிய நிதி ஏற்பாடு ரூபா 297,727,997,200 ஆக இருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதிவரை இதில் ரூபா 274,104,266,569 பயன்படுத்தப்பட்டிருந்தது. அதற்கிணங்க அமைச்சு மற்றும் ஒவ்வொரு திணைக்களத்தின் நிதி ஏற்பாடுகளிலிருந்தான தேறிய சேமிப்புக்கள் ரூபா 1,969,242 இற்கும் ரூபா 10,678,833,793 இற்கும் இடைப்பட்ட வீச்சில் பல்வேறு அளவில் அல்லது மொத்த தேறிய நிதி ஏற்பாட்டில் 0.02 சதவீத்திற்கும் 59.06 சதவீதத்திற்கும் இடைப்பட்ட வீச்சில் காணப்பட்டன. விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| தலைப்பு | 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | | தேறிய ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்புக்கள் |
|---|---|---|---|---|
| | நிதியேற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | |
| | ரூபா | ரூபா | ரூபா | |
| 103 | 29,592,257,000 | 21,677,488,000 | 7,914,769,000 | 26.75 |
| 222 | 122,630,339,000 | 122,529,907,571 | 100,431,429 | 0.08 |
| 223 | 43,334,528,000 | 39,941,655,324 | 3,392,872,676 | 7.83 |
| 224 | 44,897,590,000 | 34,218,756,207 | 10,678,833,793 | 23.78 |
| 225 | 42,799,193,000 | 42,580,150,102 | 219,042,898 | 0.51 |
| 226 | 1,618,384,200 | 1,351,635,493 | 266,748,700 | 16.48 |
| 227 | 330,066,000 | 298,087,732 | 31,978,268 | 9.69 |
| 291 | 1,678,810,000 | 687,366,079 | 991,443,921 | 59.06 |
| 320 | 10,753,030,000 | 10,751,060,758 | 1,969,242 | 0.02 |
| 325 | 93,800,000 | 68,159,303 | 25,640,697 | 27.33 |
| **மொத்தம்** | **297,727,997,200** | **274,104,266,569** | **23,623,730,624** | |

**(ஆ) ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களினால் வழங்கப்பட்ட நிதி ஏற்பாட்டினைப் பயன்படுத்தல்**

பல்வேறு கருமங்களுக்காக ஏனைய அமைச்சுக்கள் திணைக்களங்களினால் ரூபா 5,283,570,884 கூட்டுமொத்தமான நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்ததுடன் அவற்றின் பயன்பாடு தொடர்பான விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| வழங்கிய அமைச்சு /திணைக்களம் | பெற்றுக்கொண்ட அமைச்சு /திணைக்களம் | 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | | ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்புக்கள் |
|---|---|---|---|---|---|
| | | ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்புக்கள் | |
| | | ரூபா | ரூபா | ரூபா | |
| பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சு | இலங்கை விமானப் படை | 425,814,225 | 363,762,393 | 62,051,832 | 14.57 |
| ஓய்வூதியத் திணைக்களம் | இலங்கை விமானப் படை | 368,571,777 | 366,699,042 | 1,872,735 | 0.51 |
| போக்குவரத்து அமைச்சு | இலங்கை விமானப் படை | 84,000,000 | 83,292,407 | 707,593 | 0.84 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பொருளாதார அபிவிருத்தி அமைச்சு | இலங்கை விமானப் படை | 35,856,356 | 23,372,461 | 12,483,895 | 34.82 |
| சனாதிபதி செயலகம் | இலங்கை விமானப் படை | 170,000,000 | 133,974,580 | 36,025,420 | 21.19 |
| திறைசேரிச் செயற்பாடுகள் திணைக்களம் | இலங்கை விமானப் படை | 3,235,555,000 | 3,232,962,149 | 2,592,851 | 0.08 |
| சிவில் விமானச் சேவைகள் அமைச்சு | இலங்கை விமானப் படை | 15,000,000 | 6,977,688 | 8,022,312 | 53.48 |
| பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சு | இலங்கை கடற் படை | 233,627,247 | 185,838,491 | 47,788,756 | 20.46 |
| இலங்கை கரையோர பாதுகாப்பு திணைக்களம் | இலங்கை கடற் படை | 3,270,381 | 515,409 | 2,754,972 | 84.24 |
| பொருளாதார அபிவிருத்தி அமைச்சு | இலங்கை கடற் படை | 16,969,423 | 1,963,055 | 15,006,368 | 88.43 |
| இலங்கை விமானப் படை | இலங்கை கடற் படை | 521,086 | - | 521,086 | 100.00 |
| சனாதிபதி செயலகம் | இலங்கை கடற் படை | 605,471,338 | 304,298,456 | 301,172,882 | 49.74 |
| உள்நாட்டு மருத்தவ அமைச்சு | இலங்கை கடற் படை | 949,545 | 680,244 | 269,301 | 28.36 |
| புத்தசாசன அமைச்சு | இலங்கை கடற் படை | 18,874,616 | 3,443,389 | 15,431,227 | 81.76 |
| இலங்கை போக்குவரத்துச் சபை | இலங்கை கடற் படை | 15,000,000 | 5,161,283 | 9,838,717 | 65.59 |
| வனப் பாதுகாப்புத் திணைக்களம் | சிவில் பாதுகாப்புத் திணைக்களம் | 54,089,890 | 7,737,986 | 46,351,904 | 85.69 |
| மொத்தம் | | **5,283,570,884** | **4,720,679,033** | **562,891,851** | |

## 2.2 வருமானக் கணக்கு

### மதிப்பீடு செய்யப்பட்ட மற்றும் உள்ளபடியான வருமானம்

அமைச்சு மற்றும் அமைச்சுக்கு கீழுள்ள 03 திணைக்களங்களினால் 2013 ஆம் ஆண்டில் 04 வருமான குறியீடுகளிற்காக ரூபா 6,314,750,000 மொத்தமான வருமானங்கள் மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டில் ரூபா 7,834,093,568 மொத்தமான வருமானம் சேகரிக்கப்பட்டிருந்தது. அதற்கமைய மதிப்பீடு செய்யப்பட்ட வருமானத்தில் 97 சதவீதத்திற்கும்

125 சதவீதத்திற்கும் இடைப்பட்ட வருமானங்கள் சேகரித்துக் கொள்ளப்பட்டிருந்தன. விபரம் கீழே தரப்பட்டுள்ளது.

| வருமானக் குறியீடு | 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானத்தின் சதவீதமாக சேகரிக்கப்பட்ட வருமானம் |
|---|---|---|---|---|
| | மதிப்பிடப்பட்ட வருமானம் | உள்ளபடியான வருமானம் | மிகை / (பற்றாக்குறை) | |
| | ரூபா | ரூபா | ரூபா | % |
| 10.03.07.05 | 12,250,000 | 11,871,917 | (378,083) | 97 |
| 20.03.02.16 | 180,000,000 | 202,791,651 | 22,791,651 | 113 |
| 20.03.02.07 | 6,040,000,000 | 7,529,000,000 | 1,489,000,000 | 125 |
| 20.03.02.03 | 82,500,000 | 90,430,000 | 7,930,000 | 110 |
| **மொத்தம்** | **6,314,750,000** | **7,834,093,568** | **1,519,343,568** | **124** |

## 2.3 முற்பணக் கணக்குகள்

### 2.3.1 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள்

**பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்**

அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள 08 திணைக்களகங்களிற்காக அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பாக பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்ட எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

| விடய இல. | செலவினம் | | பெறுவனவு | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|---|
| | அதிகூடிய எல்லை | உள்ளபடியானவை | ஆகக்குறைந்த எல்லை | உள்ளபடியானவை | அதிகூடிய எல்லை | உள்ளபடியானவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| 10301 | 200,000,000 | 99,284,696 | 110,000,000 | 140,270,439 | 5,000,000,000 | 332,606,220 |
| 22201 | 2,450,000,000 | 1,467,986,142 | 1,600,000,000 | 1,734,192,796 | 4,600,000,000 | 2,388,084,427 |
| 22301 | 500,000,000 | 324,324,176 | 280,000,000 | 393,257,937 | 1,000,000,000 | 481,189,081 |
| 22401 | 510,000,000 | 224,908,300 | 370,000,000 | 377,120,448 | 1,739,000,000 | 576,211,703 |
| 22501 | 1,580,000,000 | 882,620,143 | 1,200,000,000 | 1,265,151,467 | 5,120,000,000 | 2,391,830,785 |
| 22601 | 29,000,000 | 26,548,106 | 21,000,000 | 28,054,748 | 154,000,000 | 126,459,768 |
| 22701 | 21,000,000 | 19,396,062 | 12,000,000 | 18,811,626 | 95,000,000 | 43,637,245 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 29101 | 14,000,000 | 8,261,589 | 7,000,000 | 12,952,277 | 59,000,000 | 35,094,208 |
| 32001 | 175,000,000 | 156,977,380 | 160,000,000 | 155,444,169 | 75,000,000 | 7,599,074 |

### 2.3.2 வர்த்தக முற்பணக் கணக்கு

அமைச்சின் கீழுள்ள ஒரு திணைக்களத்தினால் வர்த்தக முற்பணக் கணக்கொன்று பேணிவரப்பட்டிருந்தது.

#### (அ) பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்

வர்த்தக முற்பணக் கணக்கு நடவடிக்கைக்காக பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

| விடய இல. | செலவினம் | | பெறுவனவு | | வரவு மீதி | | பொறுப்பு மீதி | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | அதிகூடிய எல்லை | உள்ளபடி யானவை | ஆகக்குறைந்த எல்லை | உள்ளபடி யானவை | அதிகூடிய எல்லை | உள்ளபடி யானவை | அதிகூடிய எல்லை | உள்ளபடி யானவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| 22302 | 535,000,000 | 305,776,657 | 540,000,000 | 597,423,117 | 450,000,000 | 691,413 | - | - |

#### (ஆ) நிதி விளைவுகள்

வர்த்தக முற்பணக் கணக்கின் நிதி விளைவுகள் பின்வருமாறாகும்.

| விடய இல. | முற்பணக் கணக்கு நடவடிக்கை | நிதி விளைவுகள் | | | |
|---|---|---|---|---|---|
| | | 2013 | | 2012 | |
| | | கருதுகோள் கட்டணம் நீங்கலாக இலாபம் | கருதுகோள் கட்டணம் அடங்கலாக இலாபம் | கருதுகோள் கட்டணம் நீங்கலாக இலாபம் | கருதுகோள் கட்டணம் அடங்கலாக இலாபம் |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| 22302 | களஞ்சிய முற்பணங்கள் (வெடி பொருட்கள்) | 97,316,232 | 79,320,690 | 124,278,407 | 100,441,226 |

## 2.4 கட்டுநிதி மற்றும் பொதுவைப்புக் கணக்குகள்

### 2.4.1 கட்டுநிதிக் கணக்கு

அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள 08 திணைக்களங்களில் 2013 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் கட்டுநிதிக் கணக்குகளில் காணப்பட்ட மீதி ரூபா 18,728,699,352 கூட்டுத்தொகையாக இருந்தது. விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| அமைச்சு/ திணைக்களம் | கட்டுநிதிக் கணக்கு இலக்கம் | 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி |
|---|---|---|
| | | ரூபா |
| பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சு | 7002/0000/00/0027/0013/000 | 17,343,327,720 |
| இலங்கை தரைப்படை | 7002/0000/00/0028/0013/000 | 584,204,663 |
| இலங்கை கடற்படை | 7002/0000/00/0029/0013/000 | 634,121,615 |
| இலங்கை வான்படை | 7002/0000/00/0030/0013/000 | 2,062,817 |
| பொலிஸ் திணைக்களம் | 7002/0000/00/0031/0013/000 | 137,026,985 |
| குடிவரவு மற்றும் குடியகழ்வுத் திணைக்களம் | 7002/0000/00/0032/0013/000 | 223,725 |
| கரையோரம் பேணல் திணைக்களம் | 7002/0000/00/0091/0013/000 | 14,668 |
| சிவில் பாதுகாப்புத் திணைக்களம் | 7002/0000/00/0396/0013/000 | 27,605,719 |
| இலங்கை கடற்கரை பாதுகாப்புத் திணைக்களம் | 7002/0000/00/0409/0013/000 | 111,440 |
| மொத்தம் | | **18,728,699,352** |

### 2.4.2 பொது வைப்புக் கணக்கு

அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள 09 திணைக்களங்களில் 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு பொது வைப்புக் கணக்குகளிலுள்ள மீதிகள் ரூபா 3,694,939,976 கூட்டுமொத்தமாக இருந்தது. அது தொடர்பான விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| அமைச்சு/ திணைக்களம் | கணக்கு இல. | 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி |
|---|---|---|
| | | ரூபா |
| பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சு | 6000/0000/00/0015/0017/000 | 2,522,992,623 |
| இலங்கை தரைப்படை | 6000/0000/00/0015/0103/000 | 301,553,412 |
| இலங்கை கடற்படை | 6000/0000/00/0015/0104/000 | 321,171,273 |
| இலங்கை வான்படை | 6000/0000/00/0015/0105/000 | 27,844,731 |
| பொலிஸ் திணைக்களம் | 6000/0000/00/0015/0106/000 | 237,991,086 |
| குடிவரவு குடியகல்வுத் திணைக்களம் | 6000/0000/00/0015//0107/000 | 743,147 |
| ஆட்பதிவுத் திணைக்களம் | 6000/0000/00/0015/0108/000 | 3,332,826 |
| கரையோரம் பேணல் திணைக்களம் | 6000/0000/00/0015/0146/000 | 16,772,351 |
| | 6000/0000/00/0001/0024/000 | 10,924,792 |
| சிவில் பாதுகாப்புத் திணைக்களம் | 6000/0000/00/0015/0166/000 | 150,238,327 |
| | 6000/0000/00/0015/0196/000 | 101,187,156 |
| இலங்கை கடற்கரை பாதுகாப்புத் திணைக்களம் | 6000/0000/00/0015/0171/000 | 188,252 |
| மொத்தம் | | **3,694,939,976** |

## பகுதி 2

## ஒவ்வொரு தலைப்பு தொடர்பான விபரமான அறிக்கை

### 1. தலைப்பு 103 – பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சு

### 1.1 கணக்காய்வின் நோக்கெல்லை

பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சின் 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், இணக்கக் கூற்றுக்கள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு, வருமானக் கணக்கு என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2014 திசெம்பர் 12 ஆந் திகதி அமைச்சின் செயலாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல் மாதிரிகள் மீதான தெரிவுச் செவ்வை பார்த்தல் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அம் மீளாய்வினதும் செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லை, பரப்பு என்பன எனக்கு கிடைக்கப்பெற்றுள்ள பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வினை மேற்கொள்ளக் கூடிய வகையில் தயாரிக்கப்பட்டதாகும்.

### 1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

ஒதுக்கீட்டுக் கணக்கு, வருமானக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பவற்றை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், பொது நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல், நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகளையும் இணக்கக் கூற்றுக்களையும் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், அமுலாக்குதல், செயற்படுத்துதல் என்பன இந்த பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

### 1.3 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் பிரகாரம் பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சின் ஒதுக்கீட்டுக் கணக்கு, வருமானக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பன இவ்வறிக்கையின் (அ) தொடக்கம் (ஊ) வரையான

பொது அவதானிப்புக்கள் மற்றும் 1.4 இலிருந்து 1.9 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புக்களைத் தவிர்த்து திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது அவதானிக்கப்பட்டது.

**(அ) பதிவேடுகள் மற்றும் புத்தகங்களைப் பேணாமை**

பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சினால் கீழே காட்டப்பட்டள்ள பதிவேடுகள் பேணப்பட்டிருக்காமை தெரிவுப் பரிசோதனைகளில் அவதானிக்கப்பட்டது.

| **பதிவேட்டின் வகை** | **தொடர்புடைய பிரமாணம்** |
|---|---|
| நிலையான சொத்துக்கள் பதிவேடு | 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை |
| இருப்புக்கள் பதிவேடு | நிதிப்பிரமாணம் 715 (உ) |

**(ஆ) பாதீட்டு முரண்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 10 செலவின விடயங்களிற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 2,320,000 மொத்தத் தேறிய ஏற்பாடு முழுவதும் சேமிக்கப்பட்டிருந்தது.

(ii) 112 செலவின விடயங்களிற்காக மிகை ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தமையால் ஏற்பாடுகளைப் பயன்படுத்திய பின்னரான சேமிப்பு அச் செலவின விடயங்களிற்குரிய தேறிய ஏற்பாடுகளில் 10 சதவீதத்திற்கும் 99 சதவீதத்திற்கும் இடைப்பட்ட வீச்சில் காணப்பட்டன.

**(இ) கட்டுநிதிக் கணக்கு**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) உப கட்டுநிதிகளை தீர்ப்பனவு செய்தல்

கணக்காய்வுத் தெரிவுப் பரிசோதனைகளில் வெளிப்படுத்தப்பட்ட ஒருசில குறைபாடுகள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

- நிதிப்பிரமாணம் 371 இன் பிரகாரம் கருமம் நிறைவேற்றப்பட்டவுடன் பெற்றுக்கொள்ளப்பட்ட உப கட்டுநிதிகள் தீர்க்கப்பட வேண்டிய போதிலும்,

50 சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்ட ரூபா 1,753,177 உப கட்டுநிதிகள் குறித்த கருமங்கள் முடிவுற்று 1 மாதத்திற்கும் 5 மாதங்களிற்கும் இடைப்பட்ட காலவீச்சிலமைந்த தாமதத்தின் பின்னர் தீர்க்கப்பட்டிருந்தன. 02 சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்டிருந்த ரூபா 13,000 கூட்டுத்தொகையான குறித்த நோக்க உப கட்டுநிதிகள் குறித்த கருமங்களிற்காக பயன்படுத்தப்படாது முறையே 07 நாட்கள் மற்றும் 38 நாட்கள் வைத்திருக்கப்பட்டு முழுமையான உப கட்டுநிதித் தொகையும் மீண்டும் தீர்க்கப்பட்டிருந்தன.

- உத்தியோகத்தர்களால் உப கட்டுநிதிகளைப் பெற்றுக்கொள்கையில் குறித்த கருமத்திற்குத் தேவையான தொகையினை மிகையாக மதிப்பிட்டு 05 சந்தர்ப்பங்களில் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்ததுடன் குறித்த நோக்கங்களிற்காக செலவிடப்பட்ட பின்னர் எஞ்சிய தொகைகள் 08 நாட்களிற்கும் 2 மாதங்களிற்கும் இடைப்பட்ட காலவீச்சில் வைத்திருக்கப்பட்ட பின்னர் தீர்க்கப்பட்டிருந்தன. மீண்டும் தீர்க்கப்பட்டிருந்த தொகைகள் பெற்றுக்கொள்ளப்பட்ட உப கட்டுநிதிகளின் 21 சதவீதத்திற்கும் 64 சதவீதத்திற்கும் இடைப்பட்ட வீச்சில் அமைந்திருந்தன.

(ii) சர்ச்சைக்குரிய விதத்தில் கட்டுநிதிகளை வழங்குதல்

---

ஹொட்டல் தொழிலின் அபிவிருத்திக்காக இலங்கை தரைப்படையின் தலைமையகம் அமைந்துள்ள காணியினை இரண்டு கம்பனிகளுக்கு விற்பனை செய்திருந்தமையால் கிடைத்திருந்த ரூபா 19,817,306,000 தொகை, இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 149 ஆம் உறுப்புரைக்கு முரணாக திறைசேரியினால் 2011 ஏப்ரல் 05 ஆந் திகதி ரூபா 5,000,000,000 தொகை, 2011 ஏப்ரல் 06 ஆந் திகதி ரூபா 8,820,250,000 மற்றும் 2011 ஏப்ரல் 21 ஆந் திகதி ரூபா 5,997,056,0000 தொகை என அமைச்சின் செயலாளருக்கு வழங்கப்பட்டிருந்தது. அத் தொகை வங்கி நடைமுறைக் கணக்கில் வைத்திருக்கப்பட்டு அதன் பின்னர் திறைசேரி உண்டியல்கள் மற்றும் நிலையான வைப்புக்களில் முதலீடு செய்யப்பட்டு உழைக்கப்பட்ட வட்டி அகுரேகொட பாதுகாப்புப் படையின் தலைமையகத்தை நிர்மாணிப்பதற்காக செலவிடப்பட்டிருந்தது. விபரம் கீழே காட்டப்பட்டுள்ளது.

| ஆண்டு | உழைக்கப்பட்ட வட்டி வருமானம் | பாதுகாப்புத் தலைமையகத்தை நிர்மாணிப்பதற்காக செலவிடப்பட்ட தொகை | ஆண்டின் இறுதியில் வைத்திருக்கப்பட்ட தொகை |
|---|---|---|---|
| --------------- | ------------------------- | -------------------- | ------------------------ |
| | ரூபா | ரூபா | ரூபா |
| 2011 | 894,171,277 | 336,525,195 | 20,280,812,776 |
| 2012 | 2,008,077,222 | 1,866,056,958 | 20,517,173,852 |
| 2013 | 1,683,933,947 | 4,860,260,731 | 17,343,327,719 |

**(ஈ) பொது வைப்புக் கணக்கு**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) ஏனைய அமைச்சொன்றினாலும் திணைக்களம் ஒன்றினாலும் பல்வேறு பணிகளிற்காக வழங்கப்பட்டிருந்த ரூபா 345,025 குறித்த பணிகளை நிறைவேற்றாது பொது வைப்புக் கணக்கில் வைக்கப்பட்டிருந்தது.

(ii) அமைச்சுக்குரிய பணிகளை நிறைவேற்றிக் கொள்வதற்காக பல்வேறுபட்ட தனியார் நிறுவனங்களிலிருந்து கிடைத்திருந்த ரூபா 12,788,490 அக் குறித்த பணிகளை நிறைவேற்றுவதற்காக பயன்படுத்தப்படாது வங்கி நடைமுறைக் கணக்கொன்றில் 1 ஆண்டு முதல் 2 ஆண்டுகள் வரையான காலவீச்சில் விளைவற்று வைக்கப்பட்டிருந்தது.

**(உ) வருமானக் கணக்குகள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) ஆண்டு 1 இற்கும் 4 இற்கும் இடைப்பட்ட கால வீச்சில் நிலுவையாக காணப்பட்ட ரூபா 1,268,650 வருமானத்தினை அறவிட்டுக் கொள்வதன் மீதான பின்தொடர் நடவடிக்கைகள் பலவீனமான நிலையில் இருந்தன.

(ii) 2002 யூலை 17 ஆந் திகதிய 01/2002 ஆம் இலக்க அராங்க நிதிக் கொள்கை, பொருளாதார அலுவல்கள் சுற்றறிக்கையின் 4 (4) ஆம் பந்தியின் பிரகாரம் ஒவ்வொரு வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தரினாலும் நிலுவை வருமானங்கள் தொடர்ந்தும் சேர்வதனை தடுப்பதற்காக உரிய கவனம் செலுத்துதல் வேண்டுமென்றும் நிதிப்பிரமாணம் 127(6) இன் படி வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தரினால் அரசாங்கத்திற்கு கிடைக்கவேண்டிய கட்டணங்களை சேகரித்தல் நடவடிக்கை தொடர்பில் மிக உண்ணிப்பாக இருந்து அப் பணியினை அமைச்சின் பரிசோதனைக்கு உட்படுத்துதல்

வேண்டுமென்றும் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், சுடு கலன்களிற்காக உரிய வேளையில் அனுமதிப்பத்திரங்களை புதுப்பித்தல், நிலுவை அனுமதிப்பத்திர கட்டணங்களை அறவிடுதல் மற்றும் பின்தொடர் நடவடிக்கைகள் மூலம் அனுமதிப்பத்திரமற்ற சுடு கலன்கள் வைத்திருப்பதனைக் குறைப்பதற்காக அமைச்சினால் போதியளவு வேலைத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப் பட்டிருக்கவில்லை.

(iii) மேற்படி (ii) இல் குறிப்பிடப்பட்ட சுற்றறிக்கையின் 5 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டுள்ளதன் பிரகாரம் பொருளாதார நிலையின் மாற்றங்களைக் கருத்திற்கொண்டு பல்வேறுபட்ட சேவைகளிற்காகவும் அறவிடப்படுகின்ற கட்டணங்களை காலத்திற்கேற்ற விதத்தில் திருத்தவேண்டிய போதிலும், 1996 இன் 22 ஆம் இலக்க துப்பாக்கிகள் (திருத்திய) அதிகாரச்சட்டத்தின் கீழ் அறவிடப்படுகின்ற துப்பாக்கி அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் மற்றும் வெடி பொருட்கள் அதிகாரச்சட்டத்தின் கீழ் அறவிடப்படுகின்ற வெடி பொருட்களிற்கான அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் என்பன 1996 மற்றும் 2000 ஆகிய வருடங்களின் பின்னர் திருத்தப்பட்டிருக்கவில்லை. அதற்கமைய தற்போது அறவிடப்படுகின்ற கட்டணங்கள் முறையே 17 ஆண்டுகள் மற்றும் 13 ஆண்டுகளிற்கு முன்னர் தீர்மானிக்கப்பட்ட கட்டணங்களாக இருப்பதுடன் அவற்றை திருத்துதல் தொடர்பில் அமைச்சு கவனம் செலுத்தியிருக்கவில்லை.

(iv) ஆண்டின் தேறிய வருமானத்தை அமைச்சின் புத்தகங்களில் காண்பிக்கையில் ஒவ்வொரு ஆண்டிற்குமான வருமானங்களையும் அதற்கு முன்னைய ஆண்டுகளில் நிலுவையாக காணப்பட்ட வருமானத்திலிருந்து அறவிடப்பட்ட வருமானங்களையும் தனித்தனியே காண்பிக்கும் விதத்தில் அறிக்கைகள் பேணப்பட்டிருக்கவில்லை. அதன் காரணமாக வருடாந்த வருமானச் சேகரிப்பின் செயன்முன்னேற்றத்தையும் நிலுவை வருமானச் சேகரிப்பின் செயன்முன்னேற்றத்தையும் மீளாய்வு செய்வதற்கு முடியவில்லை.

**(ஊ) அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக் கூற்று**

---

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(i) 10301 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக் கூற்றின் பிரகாரம் 2013 திசெம்பர் 31 இல் அறவீடு நிலுவையாகக் காணப்பட்ட மீதிகள் ரூபா 18,462,440 கூட்டுமொத்தமாக இருந்ததுடன் அந் நிலுவையினை அறவிடுதற்கு அமைச்சு தவறியிருந்தது.

(ii) 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அமைச்சினால் தயாரிக்கப்பட்டிருந்த கட்டுப்பாட்டுக் கணக்கில் காண்பிக்கப்பட்டிருந்த மீதிக்கும் தனிப்பட்டோர் பட்டியலில் காண்பிக்கப்பட்டிருந்த மீதிக்கும் இடையே ரூபா 475,136 வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

(iii) 2004 நவம்பர் 01 ஆந் திகதி முதல் நடைமுறையிலுள்ள 2004 ஒக்தோபர் 11 ஆந் திகதிய 118 ஆம் இலக்க பாதீட்டுச் சுற்றறிக்கையின் பிரகாரம் உத்தியோகத்தர் ஒருவர் சேவைநிலைய இடமாற்றம் பெற்றுச் சென்ற திகதியிலிருந்து 03 மாதத்திற்குள் மாதாந்த கணக்குப் பொழிப்பினூடாக அவ் உத்தியோகத்தரின் கடன் மீதி அறவிடப்பட வேண்டிய போதிலும், 2005 முதல் 2013 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் சேவைநிலைய இடமாற்றம் பெற்றுச் சென்ற 15 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 686,835 மொத்தமான கடன் மீதியினை அவ்வாறு அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iv) 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 12,358,659 ஆன 511 நிலுவையாகவுள்ள கடன் மீதிகள் காணப்பட்டதுடன் அவற்றில் ரூபா 7,571,873 மொத்தமான 366 கடன் மீதிகள் 05 ஆண்டுகளிற்கு மேலாக காணப்பட்டு வருகின்ற மீதிகளாகும்.

## 1.4 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

### வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்

2010 மார்ச் 10 ஆந் திகதிய பீஎப்/ஆர்/2/2/3/5(4) ஆம் இலக்க அரசாங்க நிதிப் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் 1.4.1 ஆம் பந்தியின் பிரகாரம் அமைச்சினால் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டமொன்று 2013 திசெம்பர் 31 வரை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 1.5 இணக்கமின்மைகள்

### சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மை

கணக்காய்வுத் தெரிவுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றின் ஏற்பாடுகளுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து காண்பிக்கப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றிற்கான தொடர்பு | பெறுமதி | இணக்கமின்மை |
|---|---|---|
| | ரூபா | |
| **இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணங்கள் கோவை** | | |
| (i) நிதிப்பிரமாணம் 210(1) | 88,711 | கழிவினைப் பெற்றுக்கொள்ளக்கூடிய எல்லாச் சந்தர்ப்பங்களிலும் கழிவைப் பெற்றுக்கொள்ளக் கூடிய விதத்தில் காலம் தாழ்த்தாது கொடுப்பனவை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டிய போதிலும், அமைச்சினால் நீர் பட்டியல்கள் அவ்வாறு தீர்க்கப்பட்டிருக்காமை காரணமாக கழிவு இழக்கப்பட்டிருந்தது. |
| (ii) நிதிப்பிரமாணம் 218(2) | 2,061,338 | ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ள சந்தர்ப்பங்கள் தவிர்ந்த ஏனைய எல்லாச் சந்தர்ப்பங்களிலும் நிதியாண்டின் போதான உரித்துக்கோரல்கள் அந்த ஆண்டிலேயே செலுத்தி தீர்க்கப்பட்டிராமையால் நிலுவை மின்சார பட்டியல்களிற்காக மின்சார சபைக்கு வட்டி செலுத்தப்பட்டிருந்தது. |
| (iii) நிதிப்பிரமாணம் 211 (1) மற்றும் 115 | 184,283 | 2012 யூலை, ஆகஸ்ட் மற்றும் செப்தெம்பர் மாதங்களிற்கான அதிகமான பட்டியல்களை அந்த ஆண்டிலேயே செலுத்தி முடிக்காமையால் மீளாய்வாண்டில் அக் கொடுப்பனவுகள் தீர்க்கப்பட்டிருந்தன. அதற்காக நிதிப்பிரமாணம் 115 இன் பிரகாரம் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (iii) நிதிப்பிரமாணம் 137 (6) | 64,463 | அமைச்சினால் மின்சார பட்டியல்களைச் செலுத்துகையில் குறித்த மாதத்தின் பட்டியல் பெறுமதிக்கு மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்த 80 சந்தர்ப்பங்கள் காணப்பட்டன. |

## 1.6 முறையற்ற கொடுக்கல்வாங்கல்கள்

பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சினால் மேற்கொள்ளப்பட்டிருந்த சில கொடுக்கல்வாங்கல்கள் முறையற்றதாக காணப்பட்டன. அவ்வாறான சில சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

(அ) அரசாங்க கொள்வனவு வழிகாட்டல்கள் கோவையிலுள்ள 3.6.1 (இ) வழிகாட்டலின் பிரகாரம் மறு கட்டளையின் மூலம் கொள்வனவு செய்கையில் அவ்வாறு கொள்வனவு செய்யப்படுகின்ற பெறுமதி ஆரம்ப ஒப்பந்தப் பெறுமதியில் 50 சதவீதத்தை விஞ்சாதிருக்க வேண்டிய போதிலும், ரூபா 384,000 செலவில் மறு கட்டளை இடுவதன் மூலம் 4 கணனிகளைக் கொள்வனவு செய்கையில் மறு கட்டளை பெறுமதி ஆரம்ப ஒப்பந்தப் பெறுமதியில் 50 சதவீதத்தை விஞ்சியிருந்தது.

(ஆ) அரசாங்க கொள்வனவுகள் வழிகாட்டல்கள் கோவையின் 6.2.2 ஆம் வழிகாட்டலின் பிரகாரம் சந்தை விலை ஒப்பீட்டு முறையின் கீழ் விலை மனுக்களைக் கோருகையில் வழங்குனருக்கு விலை மனுக்களைச் சமர்ப்பிப்பதற்காக குறைந்த பட்சம் 07 நாட்கள் வழங்கப்பட வேண்டும். பாதுகாப்புச் சேவைகள் கல்லூரிக்கு பூச்சு வேலைகளைச் செய்வதற்குத் தேவையான பொருட்களைக் கொள்வனவு செய்வதற்கு விலை மனுக்களைக் கோருகையில் வழங்குனர்களால் விலை மனுக்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டிய இறுதித் தினம் குறிப்பிடப்படாது விலை மனுக்களை கூடிய விரைவில் சமர்ப்பிக்குமாறு அறிவிக்கப்பட்டிருந்தது. இதன் படி வழங்குனருக்கு நியாயமான காலமொன்று வழங்கப்பட்டு ஒப்பந்தம் கையளிக்கப்பட்டிருந்தமை கணக்காய்வில் உறுதிப்படுத்தப்படவில்லை.

## 1.7 சிக்கனமற்ற கொடுக்கல்வாங்கல்கள்

பொது நலவாய நாடுகளின் தலைவர்களது மாநாட்டுக்காக 2013 நவம்பர் 01 ஆந் திகதி 400 பிடவைகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் அதில் ரூபா 217,800 பெறுமதியான 44 பிடவைகள் பயன்படுத்தப்படாது களஞ்சியத்தில் விளைவற்று வைக்கப்பட்டிருந்தன.

## 1.8 முகாமைத்துவ பலவீனங்கள்

கணக்காய்வுத் தெரிவுப் பரிசோதனைகளில் பின்வரும் பலவீனங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) அமைச்சின் சம்பளத் தயாரிப்பினதும் கொடுப்பனவினதும் உள்ளகக் கட்டுப்பாடு பலவீனமானதாக காணப்பட்டமையால் அரசாங்க உளவுச் சேவையின் சம்பளங்களைத் தயாரித்திருந்த உத்தியோகத்தரினால் ரூபா 580,891 தொகை 03 மாதங்களில் மோசடி செய்யப்பட்டிருந்தது.

(ஆ) அமைச்சின் களஞ்சியத்தில் காணப்பட்ட ரூபா 57,181 பெறுமதியான வர்ணப்பூச்சு இருப்பு காலம் கடந்திருந்தது.

(இ) பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சின் 2013 ஆம் ஆண்டிற்கான நிதி அதிகாரங்களை ஒப்படைத்தலின் கீழ் தேசிய மாணவர் படையணியின் பணிப்பாளருக்கு கொடுப்பனவை அங்கீகரிப்பதற்காக ரூபா 100,000 எல்லைக்கு அதிகாரம் வழங்கப்பட்டிருந்தது. அந்த எல்லையினை மீறுகின்ற சில கொடுக்கல்வாங்கல்கள் அண்மித்த திகதிகளில் பகுதி பகுதியாக மேற்கொள்ளப்பட்டு ஒருசில பட்டியல்களினூடாக கொடுப்பனவுகள் செய்யப்பட்டிருந்தன. அதன் படி ரூபா

1,887,799 மொத்தப் பெறுமதியுடைய பொறியியல் பொருட்கள், எழுதுகருவிகள், மற்றும் பீங்கான்கள் போன்றன கொள்வனவு செய்யப்பட்டிருந்த அவ்வாறான 10 சந்தர்ப்பங்கள் கணக்காய்வு தெரிவுப் பரிசோதனைகளில் அவதானிக்கப்பட்டன. இவ்வாறு ஒரே வகையான பொருட்கள் பகுதிபகுதியாக கொள்வனவு செய்யப்பட்டிருந்தமையால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த வியாபாரக் கழிவு இழக்கப்பட்டிருந்தமையும் அதே பொருளை ஒரே விலையில் கொள்வனவு செய்வதற்காக அடிக்கடி விலை மனுக்கள் கோரப்பட்டிருந்தமையால் குறித்த ஆவணமாக்கல் நடவடிக்கைளிற்காக தேவையற்ற செலவினத்தை செய்யவேண்டியிருந்தமையும் அவதானிக்கப்பட்டது. .

(ஈ) பொது நலவாய நாடுகளின் தலைவர்களது மாநாட்டுக்கான செலவினங்களை செய்வதற்காக ரூபா 234,000,000 குறைநிரப்பு மதிப்பீட்டு ஒதுக்கீடுகள் பொதுத் திறைசேரியினால் வழங்கப்பட்டிருந்ததுடன் அந்த ஏற்பாடுகளை அங்கீகரிக்கப்பட்ட பணிகளிற்காக மாத்திரம் பயன்படுத்துதல் வேண்டுமென ஏற்பாடுகள் வழங்கப்பட்ட கடிதங்களில் குறிப்பிடப்பட்டிருந்தது. இருப்பினும், பொது நலவாய நாடுகளின் தலைவர்களது மாநாட்டுக்கான தேவையெனக் குறிப்பிட்டு தெரிவுசெய்யப்பட்ட வழங்குனர்களிற்கு கட்டளைகள் சமர்ப்பிக்கப்பட்டிருந்த ரூபா 1,342,207 இற்கான பொருட்கள் பாதுகாப்பு பதவிநிலை தலைவரின் அலுவலகத்திற்கு மாநாடு முடிவடைந்த பின்னர் கிடைத்திருந்ததுடன் அப் பொருட்கள் மாநாட்டின் தேவைக்காக பயனபடுத்தப்பட்டிருக்கவில்லை.

(உ) பாதுகாப்பு பதவிநிலைத் தலைவர் அலுவலகத்தின் இலச்சினையைக் கொண்ட 15 கொடிகள் முறையற்ற விதத்தில் ரூபா 137,500 இற்கு கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. அந்த முறையற்ற தன்மையினை ஆவணங்களின் மூலம் உறுதிப்படுத்த முடியாதவாறு குறித்த ஆவணங்கள் தயாரிக்கப்பட்டு கோவையில் உள்ளடக்கப்பட்டிருந்தன.

(ஊ) பாதுகாப்பு பதவிநிலைத் தலைவர் அலுவலகத்தினால் பொது நலவாய நாடுகளின் தலைவர்களது மாநாட்டுக்காக ரூபா 204,075 பெறுமதியான தளபாடங்களும் அலுவலக உபகரணங்களும் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. அக் கொள்வனவிற்கான விலைகோரல் கடிதங்களின் திகதிகள் மாற்றம் செய்யப்பட்டிருந்தமையால் அந்த விலைமனுக்கள் பின்னர் பெற்றுக்கொள்ளப்பட்டவை என்பது உறுதியாகியது.

(எ) அரசாங்க நிதிப் பணிப்பாளர் நாயகத்தினால் பாதுகாப்பு, பொதுப் பாதுகாப்பு, சட்டம் மற்றும் ஒழுங்கு தொடர்பான அமைச்சின் செயலாளருக்கு முகவரியிடப்பட்ட 2008 யூன் 23 ஆந் திகதிய பீஎவ்/எவ்எஸ்/01 ஆம் இலக்க கடிதத்தினால் முப்படைகள் மற்றும் பொலிஸாரினால் வெளித்தப்பினர்களிற்காக வழங்கப்படுகின்ற சேவைகளின் மூலம் ஈட்டப்படுகின்ற வருமானங்களை திரட்டிய நிதியத்திற்குச் செலவு வைக்குமாறு அறிவிக்கப்பட்டிருந்த போதிலும், குறித்த நிறுவனங்கள் அதற்கமைய நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## 1.9 மனிதவள முகாமைத்துவம்

### (அ) அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| **ஊழியர் வகை** | **அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர்** | **உள்ளபடியான பதவியணியினர்** | **வெற்றிடங்களின் எண்ணிக்கை** | **மேலதிக எண்ணிக்கை** |
|---|---|---|---|---|
| சிரேஷ்ட மட்டம் | 61 | 44 | 17 | - |
| மூன்றாம் மட்டம் | 11 | 07 | 04 | - |
| இரண்டாம் மட்டம் | 270 | 209 | 61 | - |
| ஆரம்ப மட்டம் | 151 | 136 | 15 | - |
| ஏனையோர் (அமைய/தற்காலிக/ ஒப்பந்த அடிப்படை) | - | 08 | - | 08 |
| மொத்தம் | 493 | 404 | 97 | 08 |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) மீளாய்வாண்டின இறுதியளவில் 97 வெற்றிடங்களை நிரப்புவதற்கு அமைச்சு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ii) சேர்த்துக்கொள்ளப்பட்டிருந்த மேலதிக ஊழியர்களின் எண்ணிக்கை தொடர்பில் முறைப்படியான அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்கு அமைச்சு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**(ஆ) ஏனைய தரப்பினரிடமிருந்து பெற்றுகட்கொள்ளப்பட்ட மனித வளங்கள்**

அமைச்சினால் ஏனைய தரப்பினர்களிடமிருந்து மனித வளங்கள் தொடர்பில் வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

| ஊழியர் வகை | எண்ணிக்கை | ஏனைய தரப்பு | காலப்பகுதி |
|---|---|---|---|
| ஆரம்ப மட்டம் | 29 | இலங்கை தரைப்படை | 2012 ஆம் ஆண்டிலிருந்து இது வரை |
| ஆரம்ப மட்டம் | 01 | இலங்கை தேசிய நீரியல் தாவர அபிவிருத்தி அதிகாரசபை | 2005 ஆம் ஆண்டிலிருந்து இது வரை |

மேற்படி மனித வளங்களிற்கான சம்பளங்களும் வேதனங்களும் அவர்களது நிறுவனங்களால் செலுத்தப்பட்டிருந்த போதிலும், சேவைகள் அமைச்சினால் பெறப்பட்டிருந்தது.

## 2. தலைப்பு 222 - இலங்கைத் தரைப்படை

### 2.1 கணக்காய்வின் நோக்கெல்லை

இலங்கைத் தரைப்படையின் 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், இணக்கக் கூற்றுக்கள், ஏடுகள், பதிவேடுகள், ஏனைய அறிக்கைகள் என்பவற்றினை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2014 ஒக்டோபர் 09 ஆந் திகதி இராணுவத் தளபதிக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் மீதான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் மீதான மீளாய்வினதும் கொடுக்கல் வாங்கல் மாதிரிகளின் செவ்வை பார்த்தலினதும் அடிப்படையில் எழுந்தனவாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் அளவும் எனக்கு கிடைக்கப் பெற்ற பதவியணியினர், ஏனைய வளங்கள், நேரம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவு விரிவானதொரு கணக்காய்வினை மேற்கொள்ளக்கூடிய வகையில் தயாரிக்கப்பட்டிருந்தன.

### 2.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

ஒதுக்கீட்டுக் கணக்கை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல், நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமாகச் சமர்ப்பித்தல் தொடர்பான உள்ளகக் கட்டுப்பாட்டிணைத் திட்டமிடல், அமுல்ப்படுத்துதல், பேணுதல் என்பன இந்த பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 2.3 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் பிரகாரம் இலங்கைத் தரைப்படையின் ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் இங்கே (அ) மற்றும் (ஆ) பந்தி வரையான பொது அவதானிப்புக்கள் மற்றும் கீழே 2.4 இலிருந்து 2.9 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புக்களைத் தவிர்த்து திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது அவதானிக்கப்படுகின்றது.

### (அ) கட்டு நிதிக் கணக்குகள்

2014 ஏப்ரல் 30 ஆம் திகதி வரையில் இலங்கைத் தரைப்படையால் தீர்க்கப்பட்டிராத கட்டுநிதி மீதி ரூபா 100,593,624 ஆகக் காணப்பட்டது.

### (ஆ) அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக்கூற்று

22201 ஆம் விடய இலக்க முற்பணக் கணக்கு தொடர்பாக 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இணக்கக் கூற்றின் பிரகாரம் அத்திகதியில் உள்ளவாறு அறவீடுகள் நிலுவையாகக் காணப்பட்ட மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 297,447,366 ஆகக் காணப்பட்டதுடன் அந் நிலுவை மீதிகள் அறவிடப்படுவதில் பின்தொடர் நடவடிக்கைகள் நலிவான நிலையில் காணப்பட்டது.

## 2.4 சொத்து முகாமைத்துவம்

### விளைவற்றதும் குறைவான பயன்பாடுடையதுமான சொத்துக்கள்

கீழே வகைப்படுத்தப்பட்டவாறு சில சொத்துக்கள் விளைவற்ற அல்லது குறைவான பயன்பாடுடைய நிலையில் காணப்பட்டமை தெரிவுக் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| | சொத்து வகை | அலகுகளின் எண்ணிக்கை | விளைவற்ற அல்லது குறைவான பயன்பாடுடைய சொத்துக்கள் |
|---|---|---|---|
| (i) | கட்டிடம் | 05 | காலப்பகுதி குறிப்பிடப்பட்டிருக்கவில்லை |
| (ii) | மோட்டார் வாகனம் | 365 | மேற்படி |
| (iii) | இயந்திர உபகரணம் | 05 | மேற்படி |
| (iv) | டயர் | 1,389 | 05 ஆண்டுகளுக்கு மேல் |

| | | | |
|---|---|---|---|
| (v) | ரியூப் | 4,170 | 05 ஆண்டுகளுக்கு மேல் |
| (vi) | பற்றரி | 287 | 05 ஆண்டுகளுக்கு மேல் |

## 2.5 இணக்கமின்மைகள்

### (அ) சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மை

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றிலுள்ள ஏற்பாடுகளுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் பகுப்பாய்வு செய்து கீழே தரப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | | பெறுமதி | இணக்கமின்மை |
|---|---|---|---|
| | | ரூபா | |
| **இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம்** | | | |
| (i) | நிதிப்பிரமாணம் 94 | 2,051,103,987 | ஏற்பாடு செய்யப்பட்டிருந்த யுத்த ஏற்பாடுகளில் பயன்படுத்தப்பட்டதை அடுத்து சேமிப்புகள் மீறப்பட்டு பொறுப்புகள் ஏற்பட்டிருந்தன. |
| (ii) | நிதிப்பிரமாணம் 104(1) | 3,103,554,519 | 164 நட்டங்களுக்கு உரித்தான பெறுமதி கணிப்பிடப்பட்டு பொறுப்புக்கூற வேண்டிய தரப்பினரிடமிருந்து அறவிடப்படுவதற்கு 2013 திசெம்பர் 31 வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

**(ஆ) வரித் தேவைப்பாட்டிற்கு இணங்காமை**

இலங்கைத் தரைப்படையால் 2011 ஆம் ஆண்டின் போது ஏ4 வகையிலான போட்டோ பிரதி கடதாசிகளும் Lexmark வகையிலான கணனி ரிபன்களும் கொள்வனவு செய்யப்படுவதற்காக பெறுமதி சேர் வரி கொடுப்பனவு செய்யப்படுவதற்காக பதிவு செய்யப்படாத வழங்குனருக்கு ரூபா 1,091,250 தொகையான பெறுமதி சேர் வரியாகச் செலுத்தப்பட்டிருந்தது. அத் தொகை வழங்குனரால் மோசடியான முறையில் வைத்துக்கொள்ளப்பட்டிருந்தமை கண்டறியப்பட்டது.

## 2.6 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல்வாங்கல்கள்

2011 திசெம்பர் 03 ஆம் திகதியும் 06 ஆம் திகதியும் களஞ்சியத்திற்குக் கிடைக்கப்பெற்றதாகக் குறிப்பிடப்பட்ட ஏ4 வகையிலான 11,750 கடதாசிப் பக்கற்களின் இருப்பு களஞ்சியத்திற்குக் கிடைக்கப்பெற்றதாக களஞ்சியப் பேரேட்டின் படி உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 2.7 முறையற்ற கொடுக்கல்வாங்கல்கள்

**அரசாங்கக் கொள்வனவு நடைமுறை வழிகாட்டிக் கோவை மீறப்படல்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) அரசாங்கக் கொள்வனவு நடைமுறை வழிகாட்டிக் கோவையின் 7.8.4 (ஊ) இன் பிரகாரம் விலை மனுக்கள் சமர்ப்பித்தலின் குறித்த பதிவேட்டில் வழங்குனரால் விலை மனு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் ஏ4 வகையிலான போட்டோ பிரதி கடதாசி கொள்வனவு செய்யப்படுவதற்காக விலைமனுக்கள் கோரப்படுகையில் மனுக்கள் சமர்ப்பிக்கும் குறித்த பதிவேட்டில் விலைமனு சமர்ப்பிக்கப்படாது விலை மனுதாரர்களிடமிருந்து ரூபா 8,400,000 பெறுமதியான 20,000 கடதாசிப் பக்கற்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன.

(ii) மேற்குறித்த விலை மனுதாரர் கொள்வனவுப் பத்திரத்துடன் வியாபாரப் பெயரைப் பதிவு செய்யும் சான்றிதழின் ஓர் பிரதியை சமர்ப்பித்திராத போதிலும் அவ் விலை மனுதாரருக்கு ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்தது.

(iii) 2011 ஆம் ஆண்டின் வருடாந்த கொள்வனவுத் திட்டத்தின் படி, ஏ4 வகையிலான கடதாசித் தேவைப்பாடு 30,000 பக்கற்களான போதிலும் அந்த அளவிற்கும் மேலாக 21,500 கடதாசிப் பக்கற்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன.

## 2.8 முகாமைத்துவ நலிவுகள்

---

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் நலிவுகள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) இலங்கை இராணுவத்தின் யுத்த உபகரணப் படைப்பிரிவின் பனாகொடை இல. 02 டயர் மற்றும் ரியூப் களஞ்சியத்தில் மேற்கொள்ளப்பட்ட பௌதீக மெய்மையாய்வின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(i) 11 வகையான டயர்களின் பற்றாக்குறையும் 27 வகையான டயர்களின் மிகையும் காணப்பட்டன. அவற்றின் பெறுமதி முறையே ரூபா 4,754,170 தொகையாகவும் ரூபா 2,272,619 தொகையாகவும் காணப்பட்டது.

(ii) களஞ்சியத்தின் சகல டயர்கள் உள்ளடங்கிய இருப்புப் புத்தகம் பேணப்பட்டிராததுடன் ரூபா 1,543,536 பெறுமதியான 216 டயர்களுக்காக களஞ்சியத்தில் பின் அட்டைகள் பேணப்பட்டிருக்கவில்லை.

(iii) ரூபா 1,175,515 பெறுமதியான 1,040 ரியூப்களின் பற்றாக்குறையும் ரூபா 1,784,769 பெறுமதியான 1,583 ரியூப்களின் மிகையும் காணப்பட்டன.

(iv) களஞ்சியக் கட்டுப்பாடு மற்றும் கண்காணிப்பு மிகவும் நலிவான நிலையில் காணப்பட்டது.

(ஆ) மருதானை அடிப்படை யுத்த உபகரணக் களஞ்சியத்தில் மேற்கொள்ளப்பட்ட பௌதீக மெய்மையாய்வின் போது ரூபா 1,972,331 பெறுமதியான 194 டயர்களின் மிகையும் ரூபா 153,568 பெறுமதியான 15 டயர்களின் பற்றாக்குறையும் காணப்பட்டன.

(இ) 2011 ஆம் ஆண்டின் மே 27 ஆம் திகதி நடாத்தப்பட்ட வெற்றி விழா அணிவகுப்பிற்காக அவசரத் தேவைப்பாடாகக் கருதி இலங்கை தேசிய பாதுகாப்பு படையணியால் இசை வாத்தியக் கருவிகள் கொள்வனவு செய்யப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்த போதிலும் வழங்குனர் அப் பொருட்களை அவ்

அணிவகுப்பு இடம்பெற்ற தினத்திற்கு பின்னைய நாளான 2011 செப்தெம்பர் 09 ஆம் திகதியே வழங்கியிருந்தார்.

## 2.9 மனித வள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறாகும்.

(அ) சிவில் பதவியணி

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மிகையான எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 10 | 10 | - | - |
| (ii) | மூன்றாம் நிலை | 06 | 02 | 04 | - |
| (iii) | இரண்டாம் நிலை | 198 | 133 | 65 | - |
| (iv) | ஆரம்ப நிலை | 6,387 | 7,008 | - | 621 |
| (v) | ஏனையவை (ஒப்பந்த அடிப்படை) | 4,537 | 3,652 | 885 | - |
| | மொத்தம் | 11,138 | 10,805 | 954 | 621 |

(ஆ) சீருடைப் பதவியணி

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 8,019 | 7,946 | 73 |
| (ii) | மூன்றாம் நிலை | 92,023 | 91,875 | 148 |
| (iii) | இரண்டாம் நிலை | 100,305 | 84,135 | 16,170 |
| | மொத்தம் | 200,347 | 183,956 | 16,391 |

## 3. தலைப்பு 223 – இலங்கை கடற்படை

### 3.1 கணக்காய்வின் நோக்கெல்லை

இலங்கை கடற்படையின் 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், இணக்கக் கூற்றுக்கள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2014 திசெம்பர் 12 ஆந் திகதி கடற்படைத் தளபதிக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல் மாதிரிகள் மீதான தெரிவுச் செவ்வை பார்த்தல் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அம் மீளாய்வினதும் செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லை, பரப்பு என்பன எனக்கு கிடைக்கப்பெற்றுள்ள பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வினை மேற்கொள்ளக் கூடிய வகையில் தயாரிக்கப்பட்டதாகும்.

### 3.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்

ஒதுக்கீட்டுக் கணக்கு, இணக்கக் கூற்றுக்கள் என்பவற்றை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், பொது நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல், நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகளையும் இணக்கக் கூற்றுக்களையும் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், அமுலாக்குதல், செயற்படுத்துதல் என்பன இந்த பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

### 3.3 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் பிரகாரம் இலங்கை கடற்படையின் ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்று இவ்வறிக்கையின் (அ) தொடக்கம் (எ) வரையான பொது அவதானிப்புக்கள் மற்றும் 3.4 இலிருந்து 3.09 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புக்களைத் தவிர்த்து திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது அவதானிக்கப்பட்டது.

#### (அ) பதிவேடுகள் மற்றும் புத்தகங்களைப் பேணாமை

இலங்கை கடற் படையினால் கீழே காட்டப்பட்டள்ள பதிவேடுகள் பேணப்பட்டிருக்காமை தெரிவுப் பரிசோதனைகளில் அவதானிக்கப்பட்டது.

| பதிவேட்டின் வகை | தொடர்புடைய பிரமாணம் |
| --- | --- |
| நிலையான சொத்துக்கள் பதிவேடு | 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை |
| கணனிகள், துணைப்பாகங்கள் மற்றும் மென்பாகங்கள் தொடர்பான நிலையான சொத்துக்கள் பதிவேடு | 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை |

**(ஆ) கணக்காய்விற்கான சான்றின்மை**

**கணக்காய்வு ஐயவினாக்களிற்கு பதிலளித்தல்**

வெளித்தரப்பினர்களிற்கு சேவைகளை வழங்குவதன் மூலம் ஈட்டப்பட்ட வருமானங்கள் திரட்டிய நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்டிருக்காமை தொடர்பில் 2014 ஒக்தோபர் 29 ஆந் திகதி வழங்கப்பட்ட கணக்காய்வு ஐய வினாவுக்கு 2015 சனவரி 31 ஆந் திகதி வரை பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை.

**(இ) பாதீட்டு முரண்**

33 செலவின விடயங்களிற்காக மிகை ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தமையால் ஏற்பாடுகளைப் பயன்படுத்திய பின்னரான சேமிப்பு அச் செலவின விடயங்களிற்குரிய தேறிய ஏற்பாடுகளில் 20 சதவீதத்திற்கும் 99 சதவீதத்திற்கும் இடைப்பட்ட வீச்சில் காணப்பட்டன.

**(ஈ) கட்டுநிதிக் கணக்கு**

நிதிப்பிரமாணம் 371 இன் பிரகாரம் கருமம் முடிவுற்றவுடன் குறித்த நோக்க உப கட்டுநிதிகள் தீர்க்கப்பட வேண்டிய போதிலும், 20 சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்டிருந்த குறித்த நோக்க உப கட்டுநிதிகள் கருமம் முடிவுற்று 03 மாதங்கள் முதல் 09 மாதங்கள் வரையான கால தாமதத்தின் பின்னர் தீர்க்கப்பட்டிருந்தன.

**(உ) பொது வைப்புக் கணக்கு**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) நிதிப்பிரமாணம் 571(அ) இன் பிரகாரம் ஒவ்வொரு அரையாண்டின் முடிவிலும் காலம் கடந்த வைப்புக்கள் தொடர்பான பட்டியலொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) ஒப்பந்தங்கள் தொடர்பில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த ரூபா 449,861 கூட்டுத் தொகையான வைப்புக்கள் காலம் கடந்திருந்த போதிலும், அந்த வைப்புக்கள் தொடர்பில் நிதிப்பிரமாணம் 571(3) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) செயற்திட்ட நிதியத்திற்கான ரூபா 293,700 கூட்டுத்தொகையான வைப்புக்கள் நிதிப்பிரமாணம் 570 இன் பிரகாரம் செயற்திட்டம் முடிவடைந்து 2 ஆண்டுகள் கடந்த பின்னரும் அரசாங்க வருமானத்திற்குச் செலவு வைக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஊ) அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக் கூற்று**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 22301 ஆம் விடய இலக்க முற்பணக் கணக்கு தொடர்பான 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இணக்கக் கூற்றின் பிரகாரம் அறவீடு நிலுவையாகக் காணப்பட்ட மீதிகள் ரூபா 18,098,810 கூட்டுமொத்தமாக இருந்ததுடன் அந்த நிலுவை கடன் மீதிகளில் ரூபா 13,744,349 கடன் மீதியினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்த போதிலும், ரூபா 4,354,462 கடன் மீதியினை அறவிடுவதற்குத் தேவையான தகவல்கள் எதுவும் இலங்கை கடற் படையிடம் காணப்படவில்லை.

(ii) இலங்கை கடற் படையினால் அரசாங்க உத்தியோகத்தர் முற்பணக் கணக்கு நடவடிக்கைகளிற்காக பேணிவரப்படுகின்ற புத்தகங்களிற்கும் அவற்றுடன் நேரொத்ததாக திறைசேரியினால் பேணி வரப்படுகின்ற புத்தகங்களிற்கும் இடையே ரூபா 20,711 ஆன இனங்காணப்படாத வேறுபாடு 13 ஆண்டு காலமாக முன்னெடுத்து வரப்பட்டிருந்தது.

(iii) சமர்ப்பிக்கப்பட்ட கணக்கிணக்கக் கூற்றில் காண்பிக்கப்பட்டவாறு 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கட்டுப்பாட்டுக் கணக்கின் மீதிக்கும் தனிப்பட்டோர் வகைப்படுத்தல் பொழிப்பின் மொத்தத்திற்கும் இடையே ரூபா 44,143,740 வேறுபாடு காணப்பட்டது. முன்னைய ஆண்டுகளிலும் இவ்வாறான வேறுபாடுகள் வெளிப்படுத்தப்பட்டிருந்தன.

**(எ) வர்த்தக முற்பணக் கணக்கு**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2012 ஆம் ஆண்டில் விற்பனை முற்பணமாக இரண்டு சந்தர்ப்பங்களில் கிடைத்திருந்த ரூபா 32,987 தொகை தொடர்பில் 2013 ஆம் ஆண்டில் இரண்டு

கட்டளைகளின் மூலம் பொருட்கள் விற்பனை செய்யப்பட்டிருந்த போதிலும், அவை விற்பனையாக கணக்கீடு செய்யப்படாது விற்பனைக்காக கிடைத்திருந்த முற்பணமாக தொடர்ந்தும் கணக்கீடு செய்யப்பட்டிருந்தமை காரணமாக மீளாய்வாண்டிற்கான விற்பனைகள் ரூபா 32,987 குறைத்தும் நானாவித கடன்கொடுத்தோர் அத் தொகையால் அதிகரித்தும் காட்டப்பட்டிருந்தன.

(ii) வர்த்தக முற்பணக் கணக்கு தொடர்பில் 2013 ஆம் ஆண்டில் பெறப்பட்டிருந்த சேவைகளிற்காக செலுத்தப்பட வேண்டிய ரூபா 988,855 ஆன செலவினம் அட்டுறு அடிப்படையில் கணக்கீடு செய்யப்பட்டிருக்காமை காரணமாக மீளாய்வாண்டிற்கான இலாபம் அத் தொகையால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(iii) தேசத்தைக் கட்டியெழுப்பும் வரியாக 2013 ஆம் ஆண்டின் இறுதிக் காலாண்டிற்காக ரூபா 1,255,340 செலுத்தப்பட்டிருந்த போதிலும், அந்த வரித் தொகை ரூபா 1,405,981 என கணக்கீடு செய்யப்பட்டிருந்தமையால் மீளாய்வாண்டிற்கான இலாபம் ரூபா 150,641 தொகையால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(iv) மீளாய்வாண்டில் செலுத்தப்பட்டிருந்த 2011 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளிற்குரிய ரூபா 9,325,091 ஆன தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி மீளாய்வாண்டின் செலவினமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தமையால் மீளாய்வாண்டிற்கான இலாபம் ரூபா 9,325,091 தொகையால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(v) 2013 திசெம்பர் 27 ஆந் திகதி பொற்றாசியம் குளோரைட் இருப்பு களஞ்சியத்திற்கு கிடைத்திருந்தது. அந்த இருப்பு முழுவதனையும் கொள்வனவாக கணக்கீடு செய்யாது அதற்காக நாணயக் கடிதத்தின் மூலம் செலுத்தப்பட்டிருந்த ரூபா 16,073,958 தொகை மாத்திரம் கொள்வனவாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. இறுதி இருப்பினை மதிப்பீடு செய்கையில் களஞ்சியத்திற்குக் கிடைத்திருந்த இருப்பு முழுவதும் கருத்திற் கொள்ளப்பட்டிருந்தமை காரணமாக மீளாய்வாண்டிற்கான இலாபம் ரூபா 10,710,617 தொகையால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(vi) 1996 ஆம் ஆண்டிலிருந்து 2006 ஆம் ஆண்டு வரை தீர்க்கப்படாதிருந்த ரூபா 99,789,112 தொகையான கடன்கொடுத்தோர் மீதி 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகையில் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், இந்த

கடன்கொடுத்தோர் மீதியினை உறுதிப்படுத்தவதற்குத் தேவையான மூல ஆவணங்கள் எதுவும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(vii) வர்த்தக முற்பணக் கணக்கின் நாளாந்த விற்பனைகளுக்குரிய சகல பணத் தொகைகளும் இலங்கை கடற்படையால் சேகரிக்கப்பட்ட திகதியிலேயே அனுப்பி வைக்கப்பட்டிருந்த போதிலும், 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 1,202,449 தெகை இலங்கை கடற் படையால் செலுத்தப்பட வேண்டியுள்ளதாக ஐந்தொகையில் காண்பிக்கப்பட்டிருந்தது. அப் பொறுப்பினை உறுதிப்படுத்துவதற்குரிய எழுத்து மூலச் சான்றுகள் எவையும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(viii) நிதிப்பிரமாணம் 504 இன் பிரகாரம் வர்த்தக முற்பணக் கணக்கொன்று தொடர்பில் ஒவ்வொரு அரையாண்டின் இறுதியிலும் பின்வரும் கூற்றுக்களும் அறிக்கைகளும் தயாரிக்கப்பட்டு அக் காலாண்டுகளின் பின்னர் தொடர்ந்து வருகின்ற மாதத்தின் 15 ஆந் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கான பிரதியுடன் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(i) வியாபாரக் கடன்கொடுத்தோர் கூற்று

(ii) இருப்புக்கள் மற்றும் பொருட்கள் தொடர்பான மாதாந்த பரிசோதனை அறிக்கை

(iii) முற்பணக் கணக்குகளிற்கான குறித்த எல்லைகளை காண்பிக்கின்ற கூற்று

(iv) காலரீதியான இலாபநட்டக் கணக்கு

(ix) 2011 இன் 10 ஆம் இலக்க தேசத்தைக் கட்டியெழுப்புதல் வரி (திருத்திய) அதிகாரச்சட்டத்தின் 4 ஆம் பிரிவின் பிரகாரம் அந்தந்த மாதத்தில் சேகரிக்கப்பட்ட தேசத்தைக் கட்டியெழுப்புதல் வரி தொடர்ந்துவரும் மாதத்தின் 20 ஆந் திகதிக்கு முன்னர் உள்நாட்டு இறைவரி ஆணையாளருக்கு அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும். அவ்வாறு சேகரிக்கப்பட்ட ரூபா 4,788,722 வரித் தொகை 08 முதல் 163 நாட்கள் வரையான காலதாமதத்தின் பின்னர் அனுப்பி வைக்கப்பட்டிருந்தது.

### 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

#### (அ) வருடாந்த பொருள் மெய்மையாய்வை நடாத்துதல்

கடற் படையின் சகல நிறுவனங்கள், கப்பல்களிற்குரிய எல்லாப் பிரிவுகள் மற்றும் கணிப்பீட்டுப் பிரிவுகளை உள்ளடக்கிய விதத்தில் அந்தந்த கட்டளைப் பிரிவுகளினால்

2013 திசெம்பர் 05 ஆந் திகதி மெய்மையாய்வுச் சபையொன்று நியமிக்கப்பட்டு வருடாந்த பொருள் மெய்மையாய்வு நடாத்தப்பட்டதாக 2014 மார்ச் 25 ஆந் திகதிய SSO(SM) 03/2014 ஆம் இலக்க கடிதத்தினால் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அறிவிக்கப்பட்டிருந்தது. 2010 திசெம்பர் 17 ஆந் திகதிய பீஎவ்/மெய்மையாய்வுச் சபை/01 ஆம் இலக்க நிதிப் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தினால் திருத்தப்பட்ட 2009 திசெம்பர் 09 ஆந் திகதிய 441 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் 2013 ஆம் ஆண்டின் வருடாந்த மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டு 2014 மார்ச் 31 ஆந் திகதிக்கு முன்னர் அந்த அறிக்கையினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்க வேண்டிய போதிலும், இலங்கை கடற் படையினால் 2014 நவம்பர் 30 ஆந் திகதி வரை அவ்வறிக்கை கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) வெளித் தரப்பினர்களிற்கு வழங்கப்பட்டுள்ள சொத்துக்கள்**

இலங்கை கடற் படையினால் பின்வரும் வாகனங்கள் முறையற்ற விதத்தில் வெளித் தரப்பினர்களிற்கு விடுவிக்கப்பட்டிருந்தன.

| வெளித் தரப்பு | சொத்துக்களின் வகை | எண்ணிக்கை |
|---|---|---|
| சனாதிபதி செயலகம் | வாகனம் | 02 |
| அமைச்சர் ஒருவருக்கு | வாகனம் | 01 |
| ஓய்வுபெற்ற இரண்டு கடற்படை தளபதிகளிற்கு | இரண்டு வாகனங்களும் மோட்டார் சைக்கிளொன்றும் | 03 |
| பாதுகாப்புச் செயலாளரின் ஒருங்கிணைப்புச் செயலாளர் | வாகனம் | 01 |
| ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் | வாகனம் | 01 |
| பாதுகாப்புச் சேவைகள் கல்லூரி | வாகனம் | 01 |
| பாதுகாப்பு அமைச்சின் ஊடக நிலையத்திற்கு | வாகனம் | 01 |

**3.5 இணக்கமின்மைகள்**

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மை**

தெரிவுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றின் ஏற்பாடுகளுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் பகுப்பாய்வுசெய்து கீழே தரப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களிற்கான தொடர்பு | பெறுமதி | இணக்கமின்மை |
|---|---|---|
| | ரூபா | |
| **இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணங்கள் கோவை** | | |
| (i) நிதிப் பிரமாணம் 210(1) | 853,353 | கழிவொன்றைப் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த எல்லா சந்தர்ப்பங்களிலும் அக் கழிவினை பெற்றுக்கொள்ளக் கூடிய விதத்தில் நீர்ப் பட்டியல்கள் செலுத்தப்பட்டிருக்கவில்லை. |
| (ii) நிதிப்பிரமாணம் 1645 | - | குழாம் வாகனங்களின் நாளாந்த ஓட்டக் குறிப்புகளின் பிரதிகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |

**3.6 முறையற்ற கொடுக்கல்வாங்கல்கள்**

இலங்கை கடற்படையால் மேற்கொள்ளப்பட்டிருந்த சில கொடுக்கல்வாங்கல்கள் முறையற்றவையாகும். அவதானிக்கப்பட்ட அவ்வாறான சந்தர்ப்பங்களில் சில கீழே காட்டப்பட்டுள்ளன.

(அ) அரசாங்க கொள்வனவு வழிகாட்டல்கள் நடைமுறையிலிருந்து விலகுதல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) அரசாங்க கொள்வனவு வழிகாட்டல்கள் கையேட்டின் 6.3.1 (அ) ஆம் வழிகாட்டல் மற்றும் இலங்கை கடற்படையின் விலை கோரல் பதிவேட்டிலுள்ள பிரமாணங்களுக்கு முரணாக தொலைநகல் மூலம் அனுப்பிவைக்கப்பட்டிருந்த கூறு விலைகளின் படி ரூபா 262,752 பெறுமதியுடைய ஒட்டும் பசை போத்தல்கள், வாடகை அடிப்படையில் வாகனங்கள் மற்றும் ரூபா 656,560 பெறுமதியான மர இருப்புக்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன.

(ii) அரசாங்க கொள்வனவு வழிகாட்டல்கள் கையேட்டின் 5.3.11 (ஆ) iii ஆம் வழிகாட்டலின் படி ஒப்பந்தம் கையளிக்கப்படுமாயின் வழங்கல் மறுக்கப்படுவதனை தவிர்ப்பதற்காக விலை மனுக்களின் செல்லுபடியாகும் காலத்தை உள்ளடக்கி விலைமனு தாரரிடமிருந்து பிணைமுறி பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய போதிலும், ரூபா 20,373,849 பெறுமதியான பொருட்களைக் கொள்வனவு செய்கையில் விலைமனு முறி பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(iii) அரசாங்க கொள்வனவு வழிகாட்டல்கள் கையேட்டின் 5.4.10 ஆம் வழிகாட்டலின் படி ஒப்பந்தங்களைக் கையளிக்கையில் செயலாற்றல் பிணைமுறி பெற்றுக் கொள்ளப்பட வேண்டிய போதிலும், ரூபா 10,361,473 மற்றும் ரூபா 8,109,477 பெறுமதிகள் கொண்ட ஒப்பந்தங்களைக் கையளிக்கையில் செயலாற்றல் பிணைமுறி பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(iv) அரசாங்க கொள்வனவு வழிகாட்டல்கள் கையேட்டின் 2.5.1(அ) ஆம் வழிகாட்டலுக்கு முரணாக இலங்கை கடற் படைக்காக ரூபா 1,729,858 பெறுமதியான குளியலறை உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. 2012 ஒக்தோபர் 06 ஆந் திகதி தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு வழங்கிய பரிந்துரைகளின் படி 2013 ஏப்ரல் 09 ஆந் திகதி கட்டளை சமர்ப்பிக்கப்பட்டிருந்தமையால் 2014 ஏப்ரல் வரை வழங்குனரால் பொருட்கள் வழங்கப்பட்டிருக்கவில்லை.

(v) அரசாங்க கொள்வனவு வழிகாட்டல்கள் கையேட்டின் 3.4.1(அ) ஆம் வழிகாட்டலின் பிரகாரம் அழைப்புவிடுக்கப்பட்ட சில விலை மனு தாரரிடமிருந்து பெறப்பட்ட கூறு விலைகள் ஒப்பிடப்பட்டு குறித்த வழங்குனர் தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய போதிலும், இலங்கை கடற் படையால் ரூபா 1,025,949 பெறுமதியான மருத்துவ உபகரணங்களிற்காக கிடைத்திருந்த ஒரேயொரு கூறு வியின் அடிப்படையில் கொள்வனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(vi) அரசாங்க கொள்வனவு வழிகாட்டல்கள் கையேட்டின் 8.9.1(ஆ) ஆம் வழிகாட்டலின் படி ரூபா 500,000 இனை விஞ்சுகின்ற பொருட்கள் அல்லது சேவைகளின் ஒப்பந்தங்களிற்காக முறைப்படியான உடன்படிக்கையொன்றில் கைச்சாத்திடப்பட வேண்டிய போதிலும், இலங்கை கடற் படைக்காக வாடகை அடிப்படையில் வாகனங்களைப் பெற்றுக் கொள்கையில் அதன் படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) அதிகாரமின்றிய கொடுக்கல்வாங்கல்கள்

----------------------------------------------------------------------

2009 சனவரி 23 ஆந் திகதிய MOD/FD/IA/5/3/(2) ஆம் இலக்க அமைச்சரவை விஞ்ஞாபனத்தின் படி 2009 பெப்ரவரி 03 ஆந் திகதி அதிமேதகு சனாதிபதி அவர்களால் வெளித்தரப்பினர்களிடமிருந்து கிடைக்கின்ற வருமானங்களை நிதியத்திற்கு செலவு வைப்பதற்கு மறுக்கப்பட்டிருந்ததுடன் பாதுகாப்பு அமைச்சு செயலாளரின் FD/IA/05/03/02 ஆம் இலக்க 2009 நவம்பர் 11 ஆந் திகதிய கடிதத்தினாலும் இந்த வருமானங்கள் அனைத்தையும் நிதியத்தின் கணக்குகளிற்கு செலவு வைக்காது திரட்டிய நிதியத்திற்கு செலவு வைத்தல் வேண்டுமென சுட்டிக் காட்டப்பட்டிருந்தது. அத்துடன், தாபன பணிப்பாளர் நாயகத்தின் 2003 திசெம்பர் 09 ஆந் திகதிய ஆ/IV/5/4-11 ஆம் இலக்க பாதுகாப்புச் செயலாளருக்கு முகவரியிடப்பட்ட கடிதத்தின் பிரகாரமும் அரசாங்க நிதிப் பணிப்பாளர் நாயகத்தின் 2008 யூன் 23 ஆந் திகதிய PF/PS/01 ஆம் இலக்க பாதுகாப்புச் செயலாளருக்கு முகவரியிடப்பட்ட கடிதத்தின் பிரகாரமும் முப்படைகளினால் வெளித்தரப்பினர்களிடமிருந்து ஈட்டப்படுகின்ற வருமானங்களை அரசாங்க திரட்டிய நிதியத்திற்கு செலவு வைத்தல் வேண்டுமென குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், அதன்படி நடவடிக்கை எடுக்காது, இலங்கை கடற்படையினால் உழைக்கப்பட்ட வருமானங்கள் பல்வேறு நிதியக் கணக்குகளிற்கு செலவு வைக்கப்பட்டு அதிகாரமின்றி செலவு செய்யப்பட்டிருந்தது. பல்வேறுபட்ட வழிகளினூடாக இவ்வாறான வருமானங்கள் ஈட்டப்படுவதுடன் அவற்றிற்காக வெவ்வேறான கணக்குகள் பேணப்பட்டு வருகின்றமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட போதிலும், அந்த வருமானங்கள் தொடர்பான எவ்வித தகவல்களும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

## 3.7 நட்டங்களும் சேதங்களும்

----------------------------------------------

தெரிவுக் கணக்காய்வுப் பரிசொதனையில் வெளிப்பட்ட நட்டங்கள் மற்றும் சேதங்கள் தொடர்பான அவதானிப்புகள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

(அ) இலங்கை கடற் படைக்கு கியர் பொக்ஸ் உதிரிப் பாகங்களைக் கொள்வனவு செய்கையில் ஆரம்பத்தில் கிடைத்திருந்த கூறு விலைகளை தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவுக்கு அனுப்பிவைத்து மதிப்பீட்டைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்காது மீண்டும் கூறு விலைகள் கோரப்பட்டு கொள்வனவு செய்யப்பட்டிருந்தமையால் திரட்டிய நிதியத்திலிருந்து ரூபா 853,444 தொகை மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) இலங்கை கடற்படைக்குத் தேவையான 137 பிளைவூட் கதவுகளை கொள்வனவு செய்கையில் உடன்படிக்கையில் கைச்சாத்திட்டிருந்த வழங்குனரிடமிருந்து

பொருட்களை கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமை காரணமாக திரட்டிய நிதியத்திலிருந்து ரூபா 159,662 தொகை மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

(இ) உடன்படிக்கையில் கைச்சாத்திட்டிருந்த வழங்குனரிடமிருந்து கொள்வனவு செய்யாது பராக்கிரம முகாமுக்கு வழங்கப்பட்டிருந்த சில்லறைக் காசு கட்டுநிதியிலிருந்து 2013 சனவரி முதல் 2013 யூலை வரையான காலத்தில் ரூபா 2,348,699 பெறுமதியான எழுதுகருவிகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தமையால் ரூபா 595,758 கூடுதலாகச் செலுத்தப்பட்டிருந்தது.

(ஈ) இலங்கை கடற்படையினால் பொருட்களை கொள்வனவு செய்வதற்காக கூறு வலைகள் கோரப்பட்ட பின்னர் அக் கூறு விலைகளின் செல்லுபடியான காலத்தில் கட்டளையினை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிராமை காரணமாக அதிகளவில் கூடிய விலைகளைச் செலுத்தவேண்டி ஏற்பட்டிருந்த சந்தர்ப்பங்கள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

(உ) இலங்கை கடற்படைக்குச் சொந்தமான 2 வாகனங்களை திருத்துவதற்காக ஒப்படைக்கப்பட்டிருந்த நிறுவனத்திலேயே அந்த வாகனங்கள் துருப்பிடித்த நிலையில் வைத்திருக்கப்பட்டிருந்ததுடன் அந்த நட்டத்தினை ஒப்பந்தக்காரரிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.8 சிக்கனமற்ற கொடுக்கல்வாங்கல்கள்

மின்சார பட்டியல்களிற்கு உரிய திகதிகளில் பணம் செலுத்தப்படாமை காரணமாக இலங்கை மின்சார சபைக்கு ரூபா 8,341,685 தண்டப்பண வட்டியாக செலுத்தப்பட்டிருந்தமை கணக்காய்வுத் தெரிவுப் பரிசோதனையில் வெளிப்பட்டது.

### 3.9 முகாமைத்துவ பலவீனங்கள்

இபலோகம இல் நிர்மாணிக்கப்பட்ட கடைத் தொகுதிக்கு ரோலர் சடர் கதவுகளை கொள்வனவு செய்கையில் பொருட்களை வழங்குவதற்கு முன்னர் வழங்குனருக்கு பணம் செலுத்தப்பட்டிருந்தமையால் உரிய தொகையினைக் காட்டிலும் ரூபா 189,868 தொகை வழங்குனருக்குச் செலுத்தப்பட்டிருந்தது. அத் தொகை வழங்குனரால் 5 மாத காலம் பயன்படுத்தப்பட்ட பின்னர் இலங்கை கடற்படைக்கு திருப்பிச் செலுத்தப்பட்டிருந்தமை கணக்காய்வுத் தெரிவுப் பரிசோதனையில் வெளிப்பட்டது.

## 4. தலைப்பு 224 – இலங்கை விமானப் படை

### 4.1 கணக்காய்வின் நோக்கெல்லை

இலங்கை வான்படையின் 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், இணக்கக் கூற்றுக்கள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு, இணக்க கூற்றுக்கள் என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2014 ஒக்தோபர் 09 ஆந் திகதி விமானப்படைத் தளபதிக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல் மாதிரிகள் மீதான தெரிவுச் செவ்வை பார்த்தல் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அம் மீளாய்வினதும் செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லை, பரப்பு என்பன எனக்கு கிடைக்கப்பெற்றுள்ள பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வினை மேற்கொள்ளக் கூடிய வகையில் தயாரிக்கப்பட்டதாகும்.

### 4.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்

ஒதுக்கீட்டுக் கணக்கு, வருமானக் கணக்கு, இணக்கக் கூற்றுக்கள் என்பவற்றை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், பொது நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல், நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் / கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகளையும் இணக்கக் கூற்றுக்களையும் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், அமுலாக்குதல், செயற்படுத்துதல் என்பன இந்த பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

### 4.3 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் பிரகாரம் இலங்கை வான்படையின் ஒதுக்கீட்டுக் கணக்கு, வருமானக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் இவ்வறிக்கையின் (அ) தொடக்கம் (எ) வரையான பொது அவதானிப்புக்கள் மற்றும் 4.4 இலிருந்து 4.10 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு

அவதானிப்புக்களைத் தவிர்த்து திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது அவதானிக்கப்பட்டது.

**(அ) ஏடுகள் மற்றும் பதிவேடுகள் பேணப்பட்டிருக்காமை**

இலங்கை விமானப்படையால் பின்வரும் பதிவேடுகள் பேணப்பட்டிருக்காமை தெரிவுப் பரிசோதனைகளில் அவதானிக்கப்பட்டன.

| பதிவேட்டின் வகை | தொடர்புடைய பிரமாணம் |
|---|---|
| நிலையான சொத்துக்கள் பதிவேடு | 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை |
| கணனிகள், துணைப்பாகங்கள் தொடர்பான சொத்துக்கள் பதிவேடு | 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை |
| பொறுப்புக்கள் பதிவேடு | நிதிப்பிரமாணம் 214 |

**(ஆ) கணக்காய்விற்கான சான்றின்மை**

ஒதுக்கீட்டுக் கணக்கில் உள்ளடக்கப்பட்டிருந்த ரூபா 4,278,066,950 பொறுப்புக்கள் அவற்றுக்குரிய பட்டியல் இலக்கங்களிற்கு தொடர்புகளை காண்பிக்கும் பதிவேடொன்று சமர்ப்பிக்கப்பட்டிருக்காமையால் அவற்றின் சரியான தன்மையினை உறுதிப்படுத்த முடியாதிருந்தது.

**(இ) பாதீட்டு முரண்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 12 செலவின விடயங்களிற்கான தேறிய ஏற்பாடு ரூபா 15,829,125,000 ஆகக் காணப்பட்டது. அதில் மீளாய்வாண்டில் ரூபா 5,495,088,697 பயன்படுத்தப் பட்டிருந்ததுடன் ரூபா 10,334,036,303 ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. MI -17 விமானத்தைக் கொள்வனவு செய்வதற்காக செலவிடப்பட்டிருந்த ரூபா 8,156,669,135 செலவினம் 224-1-3-2502 ஆம் செலவின விடயத்தின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருக்காமை காரணமாக அச்சேமிப்பு ஏற்பாட்டில் உள்ளடக்கப்பட்டிருந்தது.

(ii) 07 செலவின விடயங்களிற்காக குறைநிரப்பு ஒதுக்கீட்டினால் ரூபா 2,972,600,000 ஏற்பாடு பெற்றுக்கொள்ளப்பட்டிருந்ததுடன் அதில் ரூபா 241,248,978 மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதற்கிணங்க ரூபா 2,731,351,022 ஆன ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. அந்த சேமிக்கப்பட்ட ஏற்பாட்டில் 04 சந்தர்ப்பங்களில் குறைநிரப்பு மதிப்பீட்டு ஒதுக்கீட்டின் கீழ் பெற்றுக்கொண்டிருந்த ரூபா 2,702,600,000 ஆன ஏற்பாடு குறித்த கருமங்களிற்காக பயன்படுத்தப்படாது ஏற்பாடு முழுவதும் சேமிக்கப்பட்டிருந்தது.

(iii) 29 செலவின விடயங்களிற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 1,113,650,801 ஏற்பாடு மீளாய்வாண்டில் நிதிப்பிரமாணம் 66 இன் பிரகாரம் ஏனைய 06 செலவின விடயங்களிற்கு மாற்றப்பட்டிருந்தது. அவ்வாறு மாற்றப்பட்டவைகளிலிருந்து கட்டிட நிர்மாணத்திற்கான 224-1-3-2104 செலவின விடயத்திற்கு ரூபா 100,000,000 ஆன ஏற்பாடு மாற்றப்பட்டிருந்த போதிலும், அதிலிருந்து எவ்வித பயன்படுத்தல்களும் மீளாய்வாண்டில் இடம்பெற்றிருக்கவில்லை.

(iv) விமானப் படையினால் தயாரிக்கப்பட்டிருந்த 2012-2015 காலப்பகுதிக்குரிய கூட்டிணைந்த திட்டம் 2013 ஆம் ஆண்டில் திருத்தப்பட்டிருக்கவில்லை. அதனை அடிப்படையாகக் கொண்டு வருடாந்த பாதீட்டு மதிப்பீடு தயாரிக்கப்படாதிருந்ததுடன் வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டின் எதிர்வுகூறல்களுடன் இணங்கும் வகையில் செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. அத்துடன், செயல்நடவடிக்கைத் திட்டத்திலுள்ள இலக்குகள் அடையப்படுவதனை உறுதிப்படுத்துவதற்காக செயன்முன்னேற்ற அறிக்கை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஈ) கட்டுநிதிக் கணக்கு**

2014 ஏப்ரல் 30 ஆந் திகதியளவில் இலங்கை வான்படையால் தீர்க்கப்படாதிருந்த கட்டுநிதி மீதிகளின் மொத்தம் ரூபா 2,047,167 ஆகும். அதில் ரூபா 574,452 தொகை 2001 ஆம் ஆண்டு முதல் திறைசேரிக்கு தீர்க்கப்படாது நிலவி வந்திருந்தது. அத்துடன் தீர்க்கப்படாதுள்ள கட்டு மீதி உருவாகியுள்ள முறை தொடர்பான தகவல்கள் ஒதுக்கீட்டுக் கணக்கில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

**(உ) பொது வைப்புக் கணக்கு**

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2 ஆண்டுகளைத் தாண்டிய ரூபா 3,916,564 தொகையான 06 வைப்புக்கள் தொடர்பில் நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) 2013 திசெம்பர் 31 ஆந் திகதி வரை வழங்கப்பட்டிருந்த போதிலும், வங்கிக்குச் சமர்ப்பிக்கப்படாதிருந்த காலங்கடந்த ரூபா 1,331,571 பெறுமதியான 15 காசோலைகள் தொடர்பில் நிதிப்பிரமாணம் 396(ஈ) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டு அரசாங்க வருமானத்திற்கு செலவு வைக்காது வைப்புக் கணக்கில் வைக்கப்பட்டிருந்தது.

**(ஊ) வருமானக் கணக்குகள்**

---

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) விமானங்களின் வாடகை வருமானச் சேகரிப்புகளிற்கான வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தர் என்ற வகையில் விமானப் படை தளபதியின் நேரடிக் கண்காணிப்பின் கீழ் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்குப் பதிலாக 2010 யூன் மாதத்தில் ஆரம்பிக்கப்பட்டிருந்த தனியார் கம்பனியொன்றினால் விமானச் சேவை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தமையாலும், அதற்குரிய அறிக்கைகளைத் தயாரித்தல் மற்றும் சமர்ப்பித்தல் அரசாங்கத்தினால் வெளியிடப்பட்டுள்ள சுற்றறிக்கைளிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் மேற்கொள்ளப்பட்டிருக்காமையாலும், அக் கம்பனியினால் மேற்கொள்ளப்படுகின்ற செயற்பாட்டு நடவடிக்கைகள் தொடர்பான பதிவேடுகள் மற்றும் செயலாற்றல் அறிக்கைகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் இடைக்கால கணக்காய்வு நடவடிக்கைகளிற்காக சமர்ப்பிக்கப்பட்டிராமையினாலும் கணக்காய்வின் நோக்கெல்லை வரையறுக்கப்பட்டிருந்தது.

(ii) பயணிகள் மற்றும் பொருட்களை போக்குவரத்துச் செய்வதற்காக விமானங்களை ஒதுக்கிக் கொள்வதற்கு இணைய தளத்தின் ஊடாக கடன் அட்டைகளைப் பயன்படுத்தி மேற்கொள்கையில் மேற்குறிப்பிட்ட தனியார் கம்பனியின் கணக்கு பயன்படுத்திக் கொள்ளப்பட்டிருந்ததுடன் அந்த வங்கிக் கணக்கு தொடர்பான விபரங்கள் மற்றும் சேகரிக்கப்பட்ட வாடகை வருமானங்களுடன் தொடர்புடைய மூல ஆவணங்களும் ஏனைய ஆவணச் சான்றுகளும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. அதன் படி

சேகரிக்கப்பட்ட வருமானங்கள் மற்றும் நிலுவை வருமானங்கள் என முறையே ரூபா 202,791,651 மற்றும் 28,985,823 வருமானங்கள் கணக்குகளில் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், அவற்றின் சரியான தன்மையினை கணக்காய்வில் உறுதிப்படுத்த முடிந்திருக்கவில்லை.

(iii) 2002 யூலை 17 ஆந் திகதிய 01/2002 ஆம் இலக்க பொது நிதிக் கொள்கை மற்றும் பொருளாதார அலுவல்கள் சுற்றறிக்கையின் 4(இ) பந்தி மற்றும் 2009 பெப்ரவரி 03 ஆந் திகதிய MOD/FD/IA/5/3/(2) ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானம் என்பவற்றின் பிரகாரம் விமானப் படையின் பௌதீக மற்றும் மனித வளங்களை ஈடுபடுத்தி உழைக்கப்பட்ட சகல வருமானமும் திரட்டிய நிதியத்திற்குச் செலவு வைக்கப்படுதல் வேண்டும். இருப்பினும், அரச பாதுகாப்பு, பொது மக்கள் பாதுகாப்பு, சட்டம் மற்றும் ஒழுங்கு தொடர்பான அமைச்சின் 2009 யூலை 16 ஆந் திகதிய MLO/MOD/22/2 ஆம் இலக்க கடிதத்தினால் வழங்கப்பட்டிருந்த அங்கீகாரத்தின் மீது விமானங்கள் வாடகை வருமானத்தில் ரூபா 13,999,792 அரசாங்க கணக்கு அல்லாத விமானப் படையின் உள்ளக நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்டிருந்தமை கம்பனியினால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த அறிக்கையிலிருந்து கண்டறியப்பட்டது.

(iv) 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான நிலுவை வருமானம், வருமானக் கணக்கின் படி ரூபா 28,985,823 ஆகக் காணப்பட்டதுடன் நிலுவை வருமான அறிக்கையின் படி ரூபா 20,622,723 ஆகக் காணப்பட்டது. அதற்கமைய வேறுபாடு ரூபா 8,363,100 ஆகும்.

(v) 2001 ஆம் ஆண்டிலிருந்து 2006 ஆம் ஆண்டு வரையான காலத்தினுள் மேற்கொள்ளப்பட்ட விமானப் பிரயாணங்கள் தொடர்பில் பல்வேறு நிறுவனங்களிடமிருந்தும் அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 3,666,688 வருமானம் 07 ஆண்டுகளிற்கு மேற்பட்ட காலமாக நிலுவையாக காணப்பட்டிருந்ததுடன் அது தொடர்பில் நிதிப்பிரமாணம் 175(2) இன் படி நடவடிக்கை எடுப்பதற்கு இலங்கை விமானப் படை தவறியிருந்தது.

**(எ) அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக் கூற்று**

---

22401 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர் முற்பணங்கள் தொடர்பான 2013 திசெம்பர் 31 இல் உள்ளபடியான இணக்கக்கூற்று சம்பந்தமாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) கட்டுப்பாட்டுக் கணக்கு (கணக்கு இல. 03) இன் படி 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஒவ்வொரு விமானப் படை முகாமிலிருந்தும் அறவிடப்பட வேண்டிய மீதிகளின் மொத்தத்திற்கும் அது தொடர்பில் காண்பிக்கப்பட்டிருந்த மொத்தத் தொகைக்குமிடையே ரூபா 16,184,507 வேறுபாடு காணப்பட்டது. தியதலாவ முகாமில் சேவையில் ஈடுபட்டுள்ள இரண்டு சிவில் உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 327,122 ஆதனக் கடன் இணக்கக் கூற்றில் காட்டப்பட்டிருக்கவில்லை.

(ii) 1981 ஆம் ஆண்டிலிருந்து இலங்கை விமானப் படையின் பதவியணியினருக்கான 22401 ஆம் விடய இலக்க முற்பண நடவடிக்கை வருடாந்த பாதீட்டு மதிப்பீடுகளில் காண்பிக்கப்பட்டிருந்தது. இருப்பினும், அதற்கு முந்திய காலங்களில் இலங்கை விமானப் படைக்காக 0017 ஆம் விடய இலக்க முற்பண நடவடிக்கை பேணிவரப்பட்டிருந்தது. அந்த விடய இலக்கத்தின் கீழ் ரூபா 550,769 கடன் மீதிகள் காணப்பட்டதுடன் அந்த மீதி 22401 ஆம் விடய இலக்க முற்பணக் கணக்கு நடவடிக்கைக்கு கையேற்கப்பட்டிராமை காரணமாக அந்த நிலுவைக் கடன்களை தொடர்புடைய உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அதற்கமைய, 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட வேண்டியுள்ள கடன் மீதி ரூபா 550,769 இனால் குறைத்து இணக்கக்கூற்றில் காட்டப்பட்டிருந்தது.

(iii) 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு விமானப் படையின் சேவைகள் மற்றும் சிவில் பிரிவின் ஓய்வுபெற்ற, மரணித்த, பதவி வறிதாக்கப்பட்ட, பதவி இடைநிறுத்தம் செய்யப்பட்ட மற்றும் இடமாற்றம் பெற்றுச்சென்ற உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டியதாகக் காணப்பட்ட கடன்கள் தொடர்பான காலப் பகுப்பாய்வின் படி பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

- சிவில் உத்தியோகத்தர்களிடமிருந்து முன்னைய ஆண்டின் இறுதியில் அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 17,624,415 கடன் மீதி மீளாய்வாண்டின் இறுதியளவில் ரூபா 21,040,923 வரை 19 சதவீதத்தால் அதிகரித்திருந்தது.
- சேவைகள் பிரிவுக்குரிய ஓய்வுபெற்ற மற்றும் மரணித்த ஊழியர்களிடமிருந்தும் பதவி வறிதாக்கப்பட்ட ஊழியர்களிடமிருந்தும் அறவிடப்பட வேண்டியிருந்த மீதி ரூபா 1,995,753 ஆகக் காணப்பட்டதுடன் அதில் ரூபா 489,560 அல்லது 25 சதவீதம் 05

ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலத்திலிருந்து நிலவிவருகின்ற நிலுவையாகவுள்ள மீதியாகும். சிவில் பிரிவிலிருந்து ஓய்வுபெற்ற, மரணித்த, பதவி வறிதாக்கப்பட்ட உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய கடன் மீதி ரூபா 20,279,609 ஆகக் காணப்பட்டதுடன் அதில் ரூபா 7,784,954 அல்லது 38 சதவீதமானவை 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலத்திலிருந்து நிலவிவருகின்ற நிலுவையாகவுள்ள மீதியாகும். முன்னைய ஆண்டின் இறுதியில் அது ரூபா 6,298,254 ஆகக் காணப்பட்டதுடன் மீளாய்வாண்டின் இறுதியளவில் ரூபா 7,784,654 வரை 23.6 சதவீதத்தால் அதிகரித்திருந்தது.

## 4.4 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

### 4.4.1 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவினை செயற்படுத்தல்

விமானப் படையின் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்களில் நிதி முகாமைத்துவம் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட பின்வரும் தீர்மானங்கள் 2014 செப்தெம்பர் 30 ஆந் திகதி வரை அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

| கூட்டத் திகதி | தீர்மானம் | அமுல்படுத்தலின் செயன்முன்னேற்றம் |
|---|---|---|
| 2012 யூன் 12 | நிலையான சொத்துக்கள் பதிவேட்டை முறைப்படியாக பேணுதல் | 2014 ஆகஸ்ட் 31 ஆந் திகதி வரையிலும் விமானப் படையினால் மேற்படி தீர்மானங்களின் பிரகாரம் குறித்த பதிவேடுகள் சரியான விதத்தில் நாளதுவரையாக்கப் பட்டிருக்கவில்லை. |
| | பொறுப்புக்கள் பதிவேட்டை பேணுதல் | |
| | கணனி வன்பாக மற்றும் மென்பாக அறிக்கையினை பேணுதல் | |
| | விமானப் படையின் நிலையான சொத்துக்களின் பெறுமதிகளை ஒதுக்கீட்டுக் கணக்கில் சரியான விதத்தில் வெளிப்படுத்தல் | |
| | முகாம்களில் பயன்படுத்தப்படுகின்ற சொத்துக்கள் தொடர்பில் வருடாந்த | அந்த சுயாதீன பரிசோதனை அறிக்கையின் பிரதிகள் |

| | |
|---|---|
| சுயாதீன பரிசோதனை அறிக்கையினை கணக்காய்விற்குச் சமர்ப்பித்தல் | கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |

## 4.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

விமானப் படையின் சொத்துக்கள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுப் பரிசோதனையில் பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த நடைமுறையல்லாத சொத்துக்களின் மொத்தப் பெறுமதி நடைமுறையல்லாச் சொத்துக்களின் அசைவு அறிக்கையில் ரூபா 9,770,982,543 எனக் காண்பிக்கப்பட்டிருந்தது. இருப்பினும், ஒதுக்கீட்டுக் கணக்கின் டீஜீஎஸ்ஏ – 4 ஆம் படிவத்தில் அது ரூபா 1,206,367,300 எனக் காண்பிக்கப்பட்டிருந்தது. 2008 ஆம் ஆண்டிலிருந்தே ஒதுக்கீட்டுக் கணக்கில் இவ்வாறான வேறுபாடுகள் காணப்பட்டதுடன் அவற்றை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) தீர்க்கப்படாத பொறுப்புக்கள் தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) ஒதுக்கீட்டுக் கணக்கின் படி விமானப் படையின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான தீர்க்கப்படாதுள்ள பொறுப்புக்களின் பெறுமதி ரூபா 4,278,066,949 ஆகக் காணப்பட்டதுடன் அது தொடர்பில் காலப்பகுப்பாய்வு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) இலங்கை விமானப் படையால் நிதிப்பிரமாணம் 214 இன் பிரகாரம் பொறுப்புக்கள் பதிவேடு நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை. நிதிப்பிரமாணம் 94 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளிற்கு முரணாக மீளாய்வாண்டிற்கான 19 செலவின விடயங்களிற்கு ரூபா 1,118,001,000 கூட்டுத்தொகையான ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டில் பயன்படுத்தப்பட்ட மற்றும் ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட பொறுப்புக்கள் ரூபா 1,505,596,485 கூட்டுத்தொகையாகக் காணப்பட்டது. அதற்கிணங்க மீளாய்வாண்டிற்குரிய ஏற்பாட்டினை ரூபா 387,595,485 ஆல் மிகைத்து பொறுப்புக்கள் ஏற்படுத்திக் கொள்ளப்பட்டிருந்தன. 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இலங்கை புகையிரத திணைக்களத்திற்கு கட்டணமற்ற புகையிரத பிரயாண அனுமதிப்பத்திரத்திற்காக ரூபா 19,488,877 தொகை செலுத்தப்படுதல்

வேண்டுமென ஒதுக்கீட்டுக் கணக்கில் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், புகையிர சீட்டுக்களை தீர்க்கும் பதிவேட்டின் படி அது ரூபா 44,287,212 எனக் காண்பிக்கப்பட்டிருந்தமையால் அப் பதிவேடுகளிடையே ரூபா 24,798,335 வேறுபாடு அவதானிக்கப்பட்டது. இலங்கைச் சுங்கத்திற்கு தீர்க்கப்பட வேண்டியிருந்த ரூபா 38,122,031 மொத்த வரித் தொகையும், 2013 ஆம் ஆண்டிற்காக 2014 இன் முதல் இரு மாதங்களிலும் செலவிடப்பட்டிருந்த ரூபா 16,482,474 தொகையும், 2013 ஆம் ஆண்டின் ஒதுக்கீட்டுக் கணக்கின் டீஜீஎஸ்ஏ 8 பொறுப்புக்கள் கூற்றில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) திறைசேரியுடன் 2013 செப்தெம்பர் 27 ஆந் திகதி இடம்பெற்ற கலந்துரையாடலின் பின்னர் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்குச் செலுத்தப்பட வேண்டிய தொகை ரூபா 1,690,467,889 என இணங்கப்பட்டிருந்ததுடன் திறைசேரி பிணைமுறிகள் மூலமாக அத் தொகை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு தீர்க்கப்பட்டிருந்தது. ஒதுக்கீட்டுக் கணக்கில் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலுத்தப்பட வேண்டிய மீதியென ரூபா 1,690,467,889 மாத்திரம் காட்டப்பட்டிருந்தது. பிணைமுறிகள் வழங்கப்பட்டு செலுத்தப்பட்டிருந்த தொகையின் சரியான தன்மையினை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு சான்றுகள் காணப்படாதிருந்ததுடன் ஒதுக்கீட்டுக் கணக்கில் அது வெளிக்காட்டப்பட்டிருக்கவுமில்லை. 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பொறுப்புக்களை உறுதிப்படுத்துவதற்கான சான்றுகளின்றி ரூபா 204,548,463 தொகை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்குச் செலுத்தப்பட வேண்டிய தொகையாக காண்பிக்கப்பட்டிருந்தது.

## 4.6 இணக்கமின்மைகள்

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மை**

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களிற்கான தொடர்பு | பெறுமதி<br>ரூபா | இணக்கமின்மை |
|---|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் 177 (4) | கணப்பீடு செய்ய முடியவில்லை | விமானப் படையால் வாகனங்களை ஏலத்தில் விற்பனை செய்தல் உள்ளிட்ட சொத்துக்களின் கைதவிர்ப்பினால் சேகரிக்கப்பட்ட வருமானங்கள் தொடர்பான தகவல்களை உள்ளடக்கிய மாதாந்த அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (ஆ) 2004 ஒக்தோபர் 18 ஆந் திகதிய 174 ஆம் இலக்க அரசாங்க கணக்குகள் சுற்றறிக்கையின் 2 ஆம் பந்தி | -மேற்படி- | 2004 சனவரி 01 ஆந் திகதியின் பின்னர் கொள்வனவு செய்யப்பட்டிருந்த நடைமுறையல்லாத சொத்துக்கள் தொடர்பான தகவல்களை உள்ளடக்கிய அரையாண்டு அறிக்கைகள் தயாரிக்கப்பட்டு அரசாங்க கணக்குகள் திணைக்களத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |

### 4.7 செயலாற்றல்

அரசாங்கத்தினால் நிர்மாண மற்றும் சுற்றுலாத் துறை தொடர்பாக மேற்கொள்ளப்படுகின்ற துரித அபிவிருத்தி நடவடிக்கைகளிற்காக விமானப் படையால் அவசர மற்றும் அத்தியாவசிய கொள்வனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. அதற்குத் தேவையான ஏற்பாடுகள் தேவைக்கேற்ப கிடைக்காத சந்தர்ப்பங்களில் விமானப் படையால் பேணிவரப்படுகின்ற நிறைவேற்று நலன்புரி நிதியத்திலிருந்து தேவையான நிதி பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. அவ்வாறு பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த ரூபா 169,463,018 நிதி விமானப் படையால் 2013 சனவரி முதல் ஒக்தோபர் வரையான காலத்தில் குறித்த நிதியத்திற்கு மீளளிக்கப்பட்டிருந்தது.

### 4.8 வங்கிக் கணக்குகளை செயற்படுத்துவதிலுள்ள குறைபாடுகள்

வங்கிக் கணக்கில் 2011, 2012 மற்றும் 2013 ஆகிய 03 ஆண்டுகள் தொடர்பில் காணப்பட்டு வருகின்ற ரூபா 216,257 தொகையான இனங்காணப்படாத பெறுவனவுகள் மற்றும் 2011 ஆம் ஆண்டிலிருந்து நிலவி வருகின்ற ரூபா 5,000 இனங்காணப்படாத கொடுப்பனவுகள் 2013 திசெம்பர் 31 வரை தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

### 4.9 முறையற்ற கொடுக்கல்வாங்கல்கள்

இலங்கை விமானப்படையால் மேற்கொள்ளப்பட்டிருந்த சில கொடுக்கல்வாங்கல்கள் முறையற்றதாக காணப்பட்டன. அவதானிக்கப்பட்ட அவ்வாறான சில சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

(அ) உள்ளக வீதிகளை நிர்மாணித்தல் - குவன்புர விமானத்தளம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) உள்ளக வீதி நிர்மாண ஒப்பந்தத்தின் கூறு விலைகளைச் சமர்ப்பிப்பதற்காக அரசாங்க கொள்வனவு வழிகாட்டல்கள் கோவையின் 6.2.2 வழிகாட்டலின் பிரகாரம் 14 நாட்கள் வழங்கப்பட வேண்டிய போதிலும், அதற்காக 05 நாட்கள் மாத்திரம் வழங்கப்பட்டிருந்தது. ஒரு விலை மனுதாரர் மாத்திரம் கூறு விலைகளைச் சமர்ப்பித்திருந்ததுடன் 7.12.1 ஆம் வழிகாட்டலின் பிரகாரம் கூறு

விலையினை நிராகரித்திருக்க வேண்டிய போதிலும், விலைமனுதாரரின் கூறு விலையினை ஏற்றுக்கொண்டு ரூபா 4,018,200 தொகைக்கு ஒப்பந்தம் கையளிக்கப்பட்டிருந்தது.

(ii) அரசாங்க கொள்வனவு வழிகாட்டல்கள் கோவையின் 7.12.4 ஆம் வழிகாட்டலின் பிரகாரம் விலைமனு தாரருடன் புரிந்துணர்வு உடன்படிக்கையொன்றில் கைச்சாத்திட வேண்டிய போதிலும், அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) அரசாங்க கொள்வனவு வழிகாட்டல்கள் கோவையின் 5.4.8 ஆம் வழிகாட்டல் மற்றும் இணைந்த வழிகாட்டல் கையேடு என்பவற்றின் பிரகாரம் ஒப்பந்தக் காரரால் ஒப்பந்த உடன்படிக்கை மீறப்படுமாயின் கொள்வனவு நட்டத்தை பாதுகாப்பதற்காக மதிப்பீட்டுப் பெறுமதியில் 5 சதவீதத்திற்கு குறையாத செயலாற்றல் பிணைமுறியொன்று பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(iv) வேலை ஆரம்பித்தல் முற்பணமாக பிணை முறியொன்றின் மீது மேற்படி ஒப்பந்த காரருக்குச் செலுத்தக் கூடியதாகவுள்ள அதிகூடிய முற்பணத் தொகை ரூபா 803,640 ஆக காணப்பட்ட போதிலும், அவ்வாறான பிணைமுறியொன்று இன்றி வழங்குனருக்கு முற்பணமாக ரூபா 3,375,288 செலுத்தப்பட்டிருந்தது. அந்த முற்பணத் தொகை பெறுமதிசேர் வரியினையும் கருத்திலெடுக்கையில் ஒப்பந்த பெறுமதியில் 75 சதவீதத்திற்கு சமமான தொகையில் காணப்பட்டது.

(v) திறைசேரியிலிருந்து தேவையான ஏற்பாடுகள் கிடைக்கப்பெறாமையால் நிர்மாண நடவடிக்கைகளை துரிதப்படுத்தவதற்காக ஆரம்பத்தில் நிறைவேற்று நலன்புரி நிதியத்திலிருந்து கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் பின்னர் அரசாங்க நிதிகளிலிருந்து அத் தொகை நலன்புரி நிதியத்திற்கு மீளளிக்கப்பட்டிருந்தது.

(ஆ) வாகன கட்டுப்பாடு மற்றும் கைதவிர்ப்பு

---

வாகன கட்டுப்பாடு மற்றும் கைதவிர்ப்பு தொடர்பில் பின்வரும் குறைபாடுகள் வெளிப்படுத்தப்பட்டன.

(i) விமானப் படைக்குச் சொந்தமான 192 வாகனங்களின் என்ஜின் இலக்கங்கள் மற்றும் செஸி இலக்கங்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) விமானப் படைக்கு உரித்தற்ற 2 வாகனங்கள் 2013 ஆம் ஆண்டில் விமானப் படையால் ஏலத்தில் விற்பனை செய்யப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 4.10 தீர்வுகாணப்பட்டிருக்காத கணக்காய்வுப் பந்திகள்

கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்டிருந்த கணக்காய்வுப் பந்திகள் அரசாங்க கணக்குகள் குழுவால் பரிசோதிக்கப்பட்டு பணிப்புரைகள் வழங்கப்பட்டிருந்த போதிலும், 2013 திசெம்பர் 31 ஆந் திகதி வரை அப் பணிப்புரைகளிற்கமைய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

| அரசாங்க கணக்குகள் குழுக் கூட்டம் இடம்பெற்ற திகதி | பணிப்புரை இல. | கணக்காய்வுப் பந்தி |
|---|---|---|
| (i) 2011 யூன் 23 | 10 | அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பணங்கள் கணக்கில் காணப்படுகின்ற பழைய நிலுவைகளை தீர்த்தல் |
| (ii) 2011 யூன் 23 | 18(II) | விளையாட்டு மைதானத்தை வாடகைக்கு வழங்கி பெற்ற வருமானம் மற்றும் ஏனைய சேகரிப்புக்களை திரட்டிய நிதியத்திற்கு செலவு வைத்தல் |
| (iii) 2011 யூன் 23 | 16 | ஒதுக்கீட்டுக் கணக்கில் காட்டப்படுகின்ற பெறுமதிகளை உறுதிப்படுத்திக்கொள்ளக்கூடிய வகையில் நிலையான சொத்துக்கள் பதிவேட்டை நாளதுவரையாக்கல் |

## 5. தலைப்பு 225 – பொலிஸ் திணைக்களம்

### 5.1 கணக்காய்வின் நோக்கெல்லை

பொலிஸ் திணைக்களத்தின் 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், இணக்கக் கூற்றுக்கள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2014 யூன் 16 ஆந் திகதி பொலிஸ்மா அதிபருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் காண்புகள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல் மாதிரிகள் மீதான தெரிவுச் செவ்வை பார்த்தல் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அம் மீளாய்வினதும் செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லை, பரப்பு என்பன எனக்கு கிடைக்கப்பெற்றுள்ள பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வினை மேற்கொள்ளக் கூடிய வகையில் தயாரிக்கப்பட்டதாகும்.

### 5.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்

ஒதுக்கீட்டுக் கணக்கு, இணக்கக் கூற்றுக்கள் என்பவற்றை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், பொது நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல், நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகளையும் இணக்கக் கூற்றுக்களையும் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், அமுலாக்குதல், செயற்படுத்துதல் என்பன இந்த பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

## 5.3 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் பிரகாரம் பொலிஸ் திணைக்களத்தின் ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்று இவ்வறிக்கையின் (அ) தொடக்கம் (இ) வரையான பொது அவதானிப்புக்கள் மற்றும் 5.4 இலிருந்து 5.11 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புக்களைத் தவிர்த்து திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது அவதானிக்கப்பட்டது.

### (அ) பாதீட்டு முரண்

07 செலவின விடயங்களுக்கு ரூபா 729,608,000 கூட்டுத்தொகையான மிகை நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டமையினால் ரூபா 556,789,621 நிதியேற்பாட்டைப் பயன்படுத்தியதன் பின்னர் சேமிப்பின் கூட்டுத்தொகை ரூபா 172,818,621 ஆக இருந்தது. அந்த சேமிப்பு ஒதுக்கப்பட்ட தேறிய ஏற்பாட்டில் 7 சதவீதத்திற்கும் 52 சதவீதத்திற்கும் இடையிலான சதவீதத்தைக் கொண்டிருந்தது.

### (ஆ) பொது வைப்புக் கணக்கு

2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு 6000/0/0/0015/0016 ஆம் இலக்க பொது வைப்புக் கணக்கின் மீதி ரூபா 237,991,086 ஆகும். 02 வருடங்களை விஞ்சிய ரூபா 19,292,111 தொகையான 160 வைப்புக்கள் தொடர்பில் நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### (இ) அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக் கூற்று

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 22501 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பாக 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இணக்கக்கூற்றில் காண்பிக்கப்பட்ட மரணமடைந்த மற்றும் ஓய்வு பெற்ற உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 33,152,939 கூட்டுத்தொகையான கடன் மீதி தொடர்பாக தாபன விதிக் கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 4.2.3, 4.2.4 மற்றும் 4.2.5 ஆம் பிரிவுகளின் பிரகாரம் கடன் தொகையை அறவிடுதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை.

(ii) வேலை நீக்கஞ்செய்யப்பட்ட மற்றும் சேவையை கைவிட்டுச்சென்ற உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிட வேண்டிய கடன் மீதிகளின் பெறுமதி ரூபா 89,605,810 ஆக இருந்ததுடன் அந்த கடன் மீதிகளை தாபன விதிக் கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 4.5 ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து அறவிடப்பட்டிருக்கவில்லை.

(iii) ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களுக்கு இடமாற்றம் பெற்றுச்சென்ற உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 3,065,964 கூட்டுத்தொகை 2009 ஒக்தோபர் 11 ஆந் திகதிய 118 ஆம் இலக்க தேசிய பாதீட்டுச் சுற்றுநிருபத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து அறவிடுவதற்கு 2013 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 5.4 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

### 5.4.1 வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்

மீளாய்வாண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டம் 2013 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 5.4.2 வருடாந்த கொள்வனவுத் திட்டம்

2006 மார்ச் 24 ஆந் திகதிய 128 ஆம் இலக்க தேசிய பாதீட்டுச் சுற்றுநிருபத்தின் பிரகாரம் வருடாந்த கொள்வனவுத் திட்டம் 2013 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 5.4.3 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவினை அமுல்படுத்துதல்

மீளாய்வாண்டின் போது பொலிஸ் திணைக்களத்தில் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டம் நடாத்தப்பட்டிருக்கவில்லை.

**5.5 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**வருடாந்த பொருள் மெய்மையாய்வை நடாத்துதல்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2012 ஆம் ஆண்டிற்கான மெய்மையாய்வு அறிக்கைளினால் சுட்டிக்காட்டப்பட்டிருந்த மிகைகள் மற்றும் பற்றாக்குறைகள் தொடர்பில் நிதிப்பிரமாணம் 757(2) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) 2010 திசெம்பர் 17 ஆந் திகதிய பீஎப்/மெய்மையாய்வுச் சபை/01 ஆம் இலக்க அரசாங்க நிதிப் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் மூலம் திருத்தப்பட்ட 2009 திசெம்பர் 09 ஆந் திகதிய 441 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றுநிருபத்தின் பிரகாரம் 2013 இன் வருடாந்த பொருள் மெய்மையாய்வு 2014 மார்ச் 31 ஆந் திகதிக்கு முன் மேற்கொள்ளப்பட்டு அவ்வறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் பொலிஸ் அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**5.6 செயற்திட்டங்களை பூர்த்திசெய்யாது கைவிடல்**

பொலிஸ் திணைக்களத்தினால் பின்வரும் நிர்மாண செயற்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்ட போதும் அந்த செயற்திட்டங்கள் பூர்த்திசெய்யாது கைவிடப்பட்டிருந்தன.

| | செயற்திட்டம் | மதிப்பீட்டுக் கிரயம் | ஆரம்பிக்கப் பட்ட திகதி | பூர்த்தி செய்ய வேண்டிய திகதி | 2013.12.31 ஆந் திகதி வரையில் செலவினம் | கைவிடப்பட்டமைக்கான காரணம் |
|---|---|---|---|---|---|---|
| | | | | | ரூபா | |
| (i) | இங்கினியாகல பொலிஸ் நிலையத்தில் தனித்தனி வீடுகள் நிர்மாணம் | 999,940 | 1998.10.20 | 1999.01.31 | 863,948 | ஒப்பந்தக்காரர் நிர்மாண செயற்பாடுகளை உரிய பிரகாரம் மேற்கொள்ளாமை |
| (ii) | தமன பொலிஸ் நிலையத்தில் தனித்தனி வீடுகள் நிர்மாணம் | 997,052 | 1998.10.20 | 1999.01.31 | 861,452 | ஒப்பந்தக்காரர் நிர்மாண செயற்பாடுகளை உரிய பிரகாரம் மேற்கொள்ளாமை |
| (iii) | எல்ல பொலிஸ் நிலையத்தில் கட்டிட நிர்மாணம் | 16,382,487 | 2007.04.26 | 2008.02.27 | 5,331,930 | ஒப்பந்தக் கம்பனி மூடப்பட்டமையின் காரணமாக நிர்மாணம் உரிய பிரகாரம் மேற்கொள்ளாமை |
| (iv) | வலஸ்முல்ல பொலிஸ் நிலையத்தில் கட்டிட நிர்மாணம் | 20,985,104 | 2007.09.17 | 2008.06.28 | 10,832,376 | ஒப்பந்தக்காரரினால் நிர்மாண செயற்பாடுகள் உரிய நியமங்களின் பிரகாரம் மேற்கொள்ளாமை |
| (v) | சீதுவ பொலிஸ் நிலையத்தில் கட்டிட நிர்மாணம் | 9,928,123 | 2007.08.27 | 2008.01.10 | 6,783,588 | ஒப்பந்தக்காரரினால் நிர்மாண செயற்பாடுகள் நிறுத்தப்பட்டமை |

நிர்மாணம் தொடர்பாக செயல்முன்னேற்ற அறிக்கை தயாரிக்காமை மற்றும் அது தொடர்பாக பின்தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்படாமையின் அடிப்படையில் நிர்மாணம் தொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பான விபரங்களை கணக்காய்விற்கு வெளிப்படுத்த முடியாதிருந்தது.

### 5.7 செயலாற்றல்

----------------------

இலங்கையினுள் 2012 மற்றும் 2013 ஆண்டுகளில் பதிவாகிய குற்றங்கள் (உடல் குற்றங்கள் மற்றும் ஆதன குற்றங்கள்) சம்பந்தமான மீளாய்வு கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | குற்றங்கள் | 2013 ------- | | | 2012 ------- | | |
|---|---|---|---|---|---|---|---|
| | --------------- | ஆறிக்கையிடப்பட்ட எண்ணிக்கை ------- | தீர்த்து வைக்கப்பட்டவை ----- | தீர்த்து வைக்கப்பட்ட வீதம் ------- | ஆறிக்கையிடப்பட்ட எண்ணிக்கை ------- | தீர்த்து வைக்கப்பட்டவை ------- | தீர்த்து வைக்கப்பட்ட வீதம் -------- |
| | **உடல் குற்றங்கள்** | | | | | | |
| 01 | பறிமுதல் செய்தல் ∴ கடத்துதல் | 1075 | 887 | 82.51 | 1240 | 1061 | 85.5 |
| 02 | கடுமையாக காயப்படுத்துதல் | 1414 | 1330 | 94.05 | 1727 | 1636 | 94.7 |
| 03 | கத்தி போன்றவற்றினால் காயப்படுத்தல் | 2683 | 2466 | 91.91 | 2870 | 2750 | 95.8 |
| 04 | மனித படுகொலை∴ தற்கொலைக்கு உதவுதல் | 586 | 522 | 89.08 | 646 | 577 | 89.3 |
| 05 | மனித படுகொலைக்கு முயற்சித்தல் | 209 | 191 | 91.38 | 227 | 204 | 89.8 |
| 06 | பெண் கற்பழிப்பு ∴ வயது குறைந்த பெண் குழந்தைகளுடன் உடலுறவு கொள்ளல். | 2193 | 2051 | 93.52 | 2212 | 2139 | 96.6 |
| 07 | இயல்புக்கு மாறான குற்றங்கள் ∴ ஆண்களுக்கிடையில் பாரிய ஒழுக்கமற்ற செயல்கள் | 614 | 555 | 90.39 | 576 | 555 | 96.3 |
| 08 | குழந்தைகளை கொடிய முறையில் நடாத்துதல் மற்றும் குழந்தைகளை தவறான காம இச்சைகளுக்கு பயன்படுத்துதல். | 395 | 370 | 93.67 | 398 | 384 | 96.4 |
| 09 | உடலுறவுக்காக பெண்∵பெண்பிள்ளையை வழங்குதல் மற்றும் வியாபாரம். | 09 | 08 | 88.88 | 31 | 30 | 96.7 |
| | **மொத்தம்** | 9178 | 8380 | 91.30 | 9927 | 9336 | 94.04 |
| | **ஆதன குற்றங்கள்** | | | | | | |
| 01 | தீவைத்தல் | 444 | 286 | 64.41 | 585 | 368 | 62.9 |
| 02 | ரூபா. 5000 இற்கு கூடுதலாக நட்டம் ஏற்படும் வகையில் புரியப்படும் முறையற்ற செயல். | 1025 | 809 | 78.92 | 1096 | 856 | 78.1 |
| 03 | வீடுகளை உடைத்தல் மற்றும் திருட்டு | 16123 | 6116 | 37.93 | 16763 | 6346 | 37.85 |
| 04 | கலவரம் | 07 | 06 | 85.71 | 18 | 15 | 83.33 |
| 05 | கொள்ளையடித்தல் | 4748 | 2573 | 54.19 | 6552 | 3472 | 52.99 |
| 06 | பலாத்காரமாக கடத்துதல் | 140 | 111 | 79.28 | 138 | 113 | 81.88 |
| 07 | ஏமாற்றுதல் ∴ மோசடியாக கையொப்பத்தை பெறுதல் ரூபா. 100,000 இற்கும் கூடிய பெறுமதியுடைய நம்பிக்கையை முறியடித்தல் | 10421 | 6010 | 57.67 | 8820 | 5630 | 63.83 |
| 08 | பெருந்தோட்டப் பொருட்கள் உட்பட ரூ. 5000 இற்கும் கூடிய ஆதன திருட்டு மற்றும் எவ்வாறான பெறுமதியைக் கொண்டதுமான சைக்கிள் மற்றும் கால்நடைத் திருட்டு. | 11436 | 6748 | 59.00 | 11704 | 6483 | 55.39 |
| 09 | போலியான பண நோட்டுக்களை அச்சிடுதல். | 59 | 50 | 84.74 | 45 | 45 | 100.0 |
| 10 | அரசாங்கத்துக்கு எதிராக நடாத்தப்படுகின்ற குற்றங்கள். | 01 | 01 | 100.0 | 05 | 02 | 40.0 |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 11 | கொடிய ஆயுத சட்டமூலத்திற்கு உட்படும் குற்றங்கள் | 125 | 111 | 88.80 | 162 | 138 | 85.1 |
| 12 | தன்னிச்சை அல்லது ரிப்பிட்டர் ரவை துப்பாக்கிகளை தன்வசம் வைத்திருத்தல் | 33 | 32 | 96.96 | 32 | 28 | 87.5 |
| 13 | ஹெரோயின், கொக்கேன், மோபீன் ஏதேனும் அளவு தயாரித்தல், விற்பனை செய்தல், இறக்குமதி செய்தல் அல்லது ஏற்றுமதி செய்தல் அல்லது ஹெரோயின் 02 கிராம் அல்லது அதற்கு கூடுதலாக ஒபியம் கிராம் 500 அல்லது அதற்கு கூடுதலாக கஞ்சா கிலோ கிராம் 05 அல்லது அதற்கு கூடுதலாக மற்றும் ஹசீஸ் கிலோ கிராம் 01 அளவு அபாயகரமான போதைப்பொருட்களை தம்வசம் வைத்திருத்தல். | 1604 | 1594 | 99.37 | 1315 | 1300 | 98.85 |
| | மொத்தம் | 46166 | 24447 | 52.95 | 47235 | 24796 | 52.49 |
| | **மொத்த கூட்டுத்தொகை** | **55344** | **32827** | **59.31** | **57162** | **34132** | **59.71** |

அந்தந்த வருடங்களில் தீர்வு காணப்படாத முறைப்பாடுகள் தொடர்பான தகவல்களை முன்கொண்டுவரும் முறைமையொன்று காணப்படாமையினால் 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு உள்ளபடியாக தீர்க்கப்படாத முறைப்பாடுகளின் எண்ணிக்கையை பெறமுடியாதிருந்தது. தீர்வுகாணப்படாத குற்றங்கள் தொடர்பாகவும் குற்றத் தீர்வுகளின் தரத்தினை முன்னேற்றுவதற்காகவும் பிற்புலனாய்வு செயற்பாடுகளை வலுப்படுத்துவதற்கு கவனம் செலுத்தப்பட வேண்டும்.

## 5.8 வங்கிக் கணக்கு

### சீராக்கப்பட வேண்டிய மீதி

திணைக்களத்தினால் 2013 திசெம்பர் மாதத்திற்காக தயாரிக்கப்பட்ட வங்கிக்கணக்கிணக்கக் கூற்றின் பிரகாரம் வைப்புச் செய்யப்பட்டிருந்தும் தேறாத ரூபா 28,000 தொகையான வைப்புக்கள் தொடர்பாக நிதிப் பிரமாணம் 189 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 5.9 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

### வெளிநாட்டுக் கம்பனியொன்றிடமிருந்து 21 குதிரைகளை கொள்வனவு செய்தல்

மீளாய்வாண்டின் போது பொலிஸ் திணைக்களம் ரூபா 57,188,819 தொகை செலவிட்டு உள்நாட்டு முகவர் நிறுவனத்துடன் தொடர்புடைய நெதர்லாந்து வெளிநாட்டுக் கம்பனியொன்றிடமிருந்து 21 குதிரைகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. இந்த

குதிரைகளுக்கிடையே ரூபா 8,169,831 பெறுமதியான மூன்று குதிரைகள் 03 மாதம், 06 மாதம் மற்றும் 12 மாதங்கள் என்ற மிகவும் குறுகிய காலத்தில் மரணமடைந்த காரணத்தினால் கொள்வனவு செய்யப்பட்ட குதிரைகளின் சுகாதார நிலை தொடர்பாக கவனத்தில் கொள்ளப்பட்டதா என்பது தொடர்பில் சர்ச்சைக்குரியதாக இருந்தது.

## 5.10 நட்டமும் இழப்பும்

ஒதுக்கீட்டுக் கணக்கில் காண்பிக்கப்பட்ட ரூபா 289,227,523 கூட்டுத்தொகையான 948 நட்டஇழப்புகள் தொடர்பாக நிதிப் பிரமாணம் 109 இன் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்கோ அல்லது புத்தகங்களில் இருந்து பதிவழிப்பதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 5.11 மனிதவள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட மட்டம் | 736 | 443 | 293 |
| (ii) | மூன்றாம் மட்டம் | 3,209 | 3,150 | 59 |
| (iii) | இரண்டாம் மட்டம் | 82,685 | 70,202 | 12,483 |
| (iv) | ஆரம்ப மட்டம் | 2,992 | 2,955 | 37 |
| | மொத்தம் | 89,622 | 76,750 | 12,872 |

மீளாய்வாண்டின் இறுதி வரை 12,872 வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 6. தலைப்பு 226 – குடிவரவு குடியகல்வுத் திணைக்களம்

### 6.1 கணக்காய்வின் நோக்கெல்லை

குடிவரவு குடியகல்வுத் திணைக்களத்தின் 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், இணக்கக் கூற்றுக்கள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு, வருமானக் கணக்கு என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2014 யூலை 14 ஆந் திகதி கட்டுப்பாட்டு நாயகத்திற்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல் மாதிரிகள் மீதான தெரிவுச் செவ்வை பார்த்தல் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அம் மீளாய்வினதும் செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லை, பரப்பு என்பன எனக்கு கிடைக்கப்பெற்றுள்ள பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வினை மேற்கொள்ளக் கூடிய வகையில் தயாரிக்கப்பட்டதாகும்.

### 6.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்

ஒதுக்கீட்டுக் கணக்கு, வருமானக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பவற்றை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், பொது நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல், நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகளையும் இணக்கக் கூற்றுக்களையும் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், அமுலாக்குதல், செயற்படுத்துதல் என்பன இந்த பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

### 6.3 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் பிரகாரம் குடிவரவு குடியகல்வுத் திணைக்களத்தின் ஒதுக்கீட்டுக் கணக்கு, வருமானக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பன இவ்வறிக்கையின் (அ) முதல் (ஆ) வரை காட்டப்பட்டுள்ள பொது அவதானிப்பு மற்றும் 6.4 இலிருந்து 6.6 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான

கணக்காய்வு அவதானிப்புக்களைத் தவிர்த்து திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது அவதானிக்கப்பட்டது.

**(அ) பாதீட்டு முரண்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) நான்கு செலவின விடயங்களிற்காக மிகை ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தமையால் ஏற்பாடுகளைப் பயன்படுத்திய பின்னரான சேமிப்பு அச் செலவின விடயங்களிற்குரிய தேறிய ஏற்பாடுகளில் 28 சதவீதத்திற்கும் 81 சதவீதத்திற்கும் இடைப்பட்ட வீச்சில் காணப்பட்டன.

(ii) மீளாய்வாண்டில் ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த செலவின விடயமொன்றின் கீழ் ரூபா 1,858,676 பொறுப்புக்கள் ஏற்படுத்திக் கொள்ளப்பட்டிருந்தன.

(iii) 2013 ஆம் ஆண்டில் செலுத்தப்பட வேண்டிய ரூபா 6,309,022 ஆன பொறுப்புக்கள் 2014 ஆம் ஆண்டில் செலுத்தப்பட்டிருந்த போதிலும், அப் பொறுப்புக்கள் 2013 ஆம் ஆண்டின் ஒதுக்கீட்டுக் கணக்கில் காட்டப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக் கூற்று**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) திணைக்களத்தினால் கடன்களைச் செலுத்துகையில் பின்பற்றப்பட வேண்டிய நடைமுறைகளைப் பின்பற்றாது ரூபா 6,204,517 கடன்கள் செலுத்தப்பட்டிருந்தது.

(ii) திணைக்களத்தினால் தனிப்பட்டோர் கணக்கு மீதி பட்டியலின் மொத்தம் கட்டுப்பாட்டுக் கணக்கு மீதியுடன் கணக்கிணக்கம் செய்யப்பட்டிருக்கவில்லை. கட்டுப்பாட்டுக் கணக்கின் மீதி ரூபா 126,540,485 ஆகக் காணப்பட்டதுடன் தனிப்பட்டோர் மீதிகளது பட்டியலின் மொத்தம் ரூபா 126,459,768 ஆகக் காணப்பட்டது.

## 6.4 இணக்கமின்மைகள்

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலிவற்றுடனான இணக்கமின்மை**

மூன்று செலவின விடயங்களுக்கு மேற்கொள்ளப்பட்டிருந்த ஏற்பாடுகளைப் பயன்படுத்திய பின்னரான சேமிப்பு ரூபா 258,529 ஆகக் காணப்பட்டிருந்த போதிலும், நிதிப்பிரமாணம் 94(i)

இற்கு முரணாக அச் சேமிப்பினை ரூபா 7,841,021 ஆல் மிகைத்து ரூபா 8,099,550 பொறுப்புக்கள் ஏற்படுத்திக் கொள்ளப்பட்டிருந்தன.

## 6.5 முகாமைத்துவ பலவீனங்கள்

கணக்காய்வுத் தெரிவுப் பரிசோதனைகளில் பின்வரும் பலவீனங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) திணைக்களத்தின் கணனி முறைமைத் தகவல்களின் படி 2005 சனவரி 01 முதல் 2013 திசெம்பர் 31 வரை இலங்கைக்கு வருகை தந்திருந்த 15,282 வெளிநாட்டவர்கள் வீசா இன்றி நாட்டில் தங்கியிருக்கின்றமை சுட்டிக்காட்டப்பட்டிருந்தது. அவர்களிடையே 2013 சனவரி 01 ஆந் திகதி முதல் 2013 திசெம்பர் 31 ஆந் திகதி வரை இலங்கைக்கு வருகை தந்திருந்த 7,119 வெளிநாட்டவர்களும் காணப்பட்டனர். திணைக்களத்தின் புலனாய்வு, விசேட புலனாய்வு மற்றும் உளவுக் கண்காணிப்பு போன்ற பிரிவுகளால் 955 நபர்கள் குறித்து மாத்திரம் விசாரணைகள் நடாத்தப்பட்டிருந்ததுடன் அவர்களில் 721 நபர்களை நாடு கடத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

(ஆ) நேர காலத்துடன் வீசா பெற்றுக்கொள்ளாது நாட்டுக்கு வருகை தருகின்ற வெளிநாட்டவர்களிற்கு வீசா வழங்குகின்ற செயற்பாட்டில் திணைக்கள உத்தியோகத்தர்கள் முறையற்ற விதத்தில் வெளிநாட்டவர்களிடமிருந்து பணம் பெறுவதாக அரசாங்க கணக்காய்வுப் பிரிவுக்குக் கிடைத்திருந்த முறைப்பாடுகளிலிருந்து தெளிவானது. அது தொடர்பில் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்ட பரிசோதனைகளில் விமான நிலையத்தில் வீசா விடுவித்தல் சம்பந்தமாக திணைக்கள உத்தியோகத்தர்கள் பின்பற்ற வேண்டிய ஒழுங்குவிதிகள் குறித்த ஆலோசனைகளை உள்ளடக்கிய எவ்வித சுற்றறிக்கையும் 2014 யூலை 23 ஆந் திகதி வரை வெளியிடப்பட்டிருக்கவில்லை என்பதும் அதன்படி திணைக்கள உத்தியோகத்தர்களிற்கு முறைகேடான நிதி கையாடலுக்கு வசதி வாய்ப்புக்கள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டிருந்தமையும் அவதானிக்கப்பட்டது.

(இ) குடிப்பெயர்வுகளிற்கான இலத்திரனியல் அங்கீகாரமளித்தல் முறைமையினை தாபித்தல் தொடர்பான உடன்படிக்கையிலுள்ள ஏற்பாடுகளின் படி குறித்த இணைய தளத்தின் வடிவமைப்பாளருக்கு அந்த இணைய தளத்தில் தனிப்பட்ட பிரச்சாரத்திற்காக அனுமதி வழங்கப்பட்டிருக்கவில்லை. இருப்பினும், இலங்கையில் செயற்படுகின்ற தனியார் தொலைபேசிக் கம்பனியொன்று அந்த இணையதளத்தில் அதனது உத்தியோகபூர்வ இலச்சினையை காட்சிப்படுத்தியிருந்தது. இது தொடர்பில் அரசாங்க கணக்காய்வுப் பிரிவினால் மேற்கொள்ளப்பட்ட சுட்டிக் காட்டலுக்கான பிரதிபலிப்பாக பாதுகாப்பு அமைச்சின் செயலாளருக்கு முகவரியிடப்பட்ட இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவர் நிலையத்தின் 2013 திசெம்பர் 09 ஆந் திகதிய

கடிதத்தின் படி குறித்த பிரச்சாரத்தினை மேற்கொள்வதற்கு சந்தர்ப்பம் வழங்குவதற்காக கேள்வி கோரப்படுதல் வேண்டுமெனக் குறிப்பிடப்பட்டிருந்தது. அதற்கமைய அது தொடர்பான வரைபு கேள்விப்பத்திரங்களை தயாரித்து சமர்ப்பிக்குமாறு 2014 மார்ச் 25 ஆந் திகதி பாதுகாப்பு செயலாளரினால் திணைக்களத்தின் கட்டுப்பாட்டு நாயகத்திற்கு அறிவிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், குறித்த தனியார் தொலைபேசிக் கம்பனி தனது பெயரையும் இலச்சினையையும் 2014 ஆகஸ்ட் 31 வரை திணைக்களத்தின் இணைய தளத்தில் பிரச்சாரம் செய்து வந்திருந்தது.

(ஈ) இலங்கையில் செயற்பட்டுவருகின்ற தனியார் தொலைபேசிக் கம்பனியொன்று தனது தொலைபேசி சிம் அட்டைகளை குடிவரவு கருமபீடத்தில் திணைக்கள உத்தியோகத்தர்களைக் கொண்டு வெளிநாட்டவர்களுக்கு வழங்குகின்ற வேலைத்திட்டமொன்றை திணைக்களத்தின் நலன்புரிச் சங்கத்தின் ஊடாக செயற்படுத்தியிருந்தது. வெளிநாட்டவர்களின் கடவுச்சீட்டு இலக்கத்தினை கம்பனியின் தொலைபேசி வலைப்பினலுக்கு உட்படுத்துவதன் மூலம் இந்த சிம் அட்டைகள் செயல்வலுப்படுத்தப்பட்டிருந்தன. இப் பணிக்கு திணைக்கள உத்தியோகத்தர்களின் உத்தியோகபூர்வ கடமைக் காலம் தனியார் கம்பனியின் மேம்படுத்தல் நடவடிக்கைக்காக பயன்படுத்திக் கொள்ளப்பட்டிருந்தமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது. அத்துடன், இலங்கைக்கு வருகை தருகின்ற வெளிநாட்டவர்களின் தகவல்கள் குடிவரவு உத்தியோகத்தர்களின் ஊடாக அவர்களது நலன்புரிச் சங்கத்தின் மூலம் தனியார் கம்பனிக்கு வழங்கப்பட்டிருந்தமையும் அவதானிக்கப்பட்டது.

(உ) இரட்டை பிரசாவுரிமை சான்றிதழ் வழங்குதல் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டிருக்கையில் திணைக்களத்திற்குக் கிடைத்திருந்த 162 விண்ணப்பங்களிற்காக 2013 ஆம் ஆண்டில் இரட்டை பிரசாவுரிமை சான்றிதழ்கள் வழங்கப்பட்டிருந்தமையும் அதிலிருந்து ரூபா 22,950,000 வருமானம் திணைக்களத்திற்கு கிடைத்திருந்தமையும் கணனி முறைமை தரவுகளின் படி அவதானிக்கப்பட்டது.

(ஊ) விமான நிலையத்தின் ஊடாக நாட்டிலிருந்து புறப்பட்டுச் செல்கின்ற சில பயணிகளின் கடவுச்சீட்டுக்களில் இலங்கையிலிருந்து புறப்பட்டுச் சென்றது என்பதற்கான புறப்படுதல் குறிப்பு இடப்பட்டிருக்காத சந்தர்ப்பங்கள் காணப்பட்டமை அது தொடர்பில் விமானத்தள கட்டுப்பாட்டு முறைமையில் பதிவுகள் இடம்பெற்றிருந்தமைக்கான சான்றுகள், இலங்கையிலிருந்து திருப்பி அனுப்பி வைக்கப்பட்டிருந்த சில பயணிகளின் கடவுச்சீட்டுக்கள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையிலிருந்து அவதானிக்கப்பட்டது.

(எ) விமான நிலையத்தில் போதைப்பொருள் அல்லது சட்டவிரோதமான பொருட்கள் போக்குவரத்துச் செய்யப்படுதல் போன்ற விடயங்கள் தொடர்பில் பிடித்துவைக்கப்படுகின்ற விசேட கவனத்திற்கு உட்படுத்தப்பட வேண்டிய பயணிகளிற்காக கட்டுநாயக்கா விமான நிலையத்தின் குடிவரவு மற்றும் குடியகழ்வுப் பிரிவில் அதற்குப் பொருத்தமான விசேட இடமொன்று அமைக்கப்பட்டிருக்கவில்லை. அதன் காரணமாக தொடர்புடைய குடிவரவு மற்றும் குடியகழ்வு சட்டங்களை நடைமுறைப்படுத்தவதற்கு முடியாத சந்தர்ப்பம் காணப்பட்டமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

(ஏ) திணைக்களத்தின் உத்தியோகத்தர்களிற்கு எதிரான ஒழுங்கீனம் தொடர்பான குற்றச்சாட்டுக்கள் சம்பந்தமாக ஆரம்பிக்கப்பட்டிருந்த ஒழுக்காற்று விசாரணைகள் துரிதமாக மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. அதன் காரணமாக திணைக்கள உத்தியோகத்தர்கள் வெளிநாட்டவர்களுடன் இணைந்து முறைகேடான கொடுக்கல்வாங்கல்களில் ஈடுபடுகின்றமை தொடர்பில் கிடைத்துள்ள முறைப்பாடுகளை விரைவாக விசாரித்து சட்டரீதியான நடவடிக்கைகளை எடுத்தல் தாமதமடைந்திருந்தமையால் அவ்வாறான முறைகேடான நடவடிக்கைகள் தொடர்ந்தும் இடம்பெறுவதற்கு வாய்ப்பு ஏற்படுத்திக்கொள்ளப்பட்டிருந்தமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

## 6.6 மனிதவள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட மட்டம் | 60 | 47 | 13 |
| (ii) | மூன்றாம் மட்டம் | 02 | 02 | - |
| (iii) | இரண்டாம் மட்டம் | 821 | 742 | 79 |
| (iv) | ஆரம்ப மட்டம் | 133 | 119 | 14 |
| (v) | ஏனையோர் | - | 02 | - |
| | மொத்தம் | 1,016 | 912 | 106 |

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் 106 வெற்றிடங்களை நிரப்புவதற்கு திணைக்களம் தவறியிருந்தது.

## 7. தலைப்பு 227 – ஆட்பதிவுத் திணைக்களம்

### 7.1 கணக்காய்வின் நோக்கெல்லை.

ஆட்பதிவுத் திணைக்களத்தின் 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிஅறிக்கைகள், இணக்க கூற்றுக்கள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு, வருமானக் கணக்கு என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2014 யூலை 14 ஆந் திகதி ஆணையாளர் நாயகத்திற்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல் மாதிரிகள் மீதான தெரிவுச் செவ்வை பார்த்தல் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அம் மீளாய்வினதும் செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லை, பரப்பு என்பன எனக்குகிடைக்கப் பெற்றுள்ள பதவியணியினர் ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வினை மேற்கொள்ளக் கூடிய வகையில் தயாரிக்கப்பட்டிருந்தன.

### 7.2 கணக்குகள் மற்றும் இணக்க கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்த மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

ஒதுக்கீட்டுக் கணக்கு, வருமானக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், பொது நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல், நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகளையும் இணக்கக் கூற்றுக்களையும் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், அமுலாக்குதல், செயற்படுத்துதல் என்பன இந்த பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

### 7.3 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் பிரகாரம் ஆட்பதிவுத் திணைக்களத்தின் ஒதுக்கீட்டுக் கணக்கு, வருமானக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் இவ்வறிக்கையின் (அ) தொடக்கம் (ஆ) வரையான பொது அவதானிப்புக்கள் மற்றும் 7.4 இலிருந்து 7.6 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு

அவதானிப்புக்களைத் தவிர்த்து திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது அவதானிக்கப்பட்டது.

**(அ) பாதீட்டு முரண்**

நான்கு செலவு விடயங்களுக்கு மிகை ஏற்பாடு செய்யப்பட்டதன் காரணமாக நிதி ஏற்பாட்டினைப் பயன்படுத்தியதன் பின்னர் சேமிப்பானது தொடர்புடைய தேறிய ஏற்பாட்டின் 52 சதவீதத்திற்கும் 91 சதவீதத்திற்கும் இடைப்பட்ட வீச்சில் காணப்பட்டது.

**(ஆ) அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக் கூற்று**

22701 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக் கூற்றின் பிரகாரம் 2013 திசெம்பர் 31 இல் அறவீடு நிலுவையாகக் காணப்பட்ட மீதிகள் ரூபா 704,429 கூட்டுமொத்தமாக இருந்தது. அந்நிலுவை மீதியில் ரூபா 43,958 தொகையினை அறவிடுவதற்கு 2014 திசெம்பர் மாதம் வரை தவறியிருந்தது.

## 7.4 இணக்கமின்மைகள்

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலிவற்றுடனான இணக்கமின்மை**

ஐந்து செலவின விடயங்களுக்கு மேற்கொள்ளப்பட்டிருந்த ஏற்பாடுகளைப் பயன்படுத்திய பின்னரான சேமிப்பு ரூபா 268,623 ஆகக் காணப்பட்டது. நிதிப்பிரமாணம் 94(i) இற்கு முரணாக அச் சேமிப்பினை ரூபா 1,860,726 ஆல் மிகைத்து ரூபா 2,129,349 பொறுப்புக்கள் ஏற்படுத்திக் கொள்ளப்பட்டிருந்தன.

## 7.5 முகாமைத்துவ பலவீனங்கள்

திணைக்களத்தினால் இலங்கை பிரசைகளிற்கான இலத்திரனியல் அடையாள அட்டைகளை விநியோகிப்பதற்காக இலங்கை அரசாங்க ஏற்பாட்டிலிருந்து விசேட செயற்திட்டமொன்று செயற்படுத்தப்பட்டிருந்தது. இச்செயற்திட்ட நடவடிக்கைகள் 2007 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும், 2009 செப்தெம்பர் 09 ஆந் திகதி இடம்பெற்ற அமைச்சரவை தீர்மானத்தின் அடிப்படையில் குறித்த கொள்வனவுகள் இரத்துச் செய்யப்பட்டமையால் செயற்திட்ட நடவடிக்கைகள் இடைநிறுத்தப்பட்டிருந்தன. இருப்பினும், 2011 ஆகஸ்ட் 17 ஆந் திகதிய அமைச்சரவை தீர்மானத்தின் படி செயற்திட்ட நடவடிக்கைகள் 2012 ஆம் ஆண்டில் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டிருந்தன.

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2010 ஆம் ஆண்டில் செயற்திட்ட நடவடிக்கைகள் இடைநிறுத்தப்பட்டிருந்த சந்தர்ப்பத்தில் செயற்திட்டத்திற்காக ரூபா 314,199,087 மொத்தமான தொகை செலவிடப்பட்டிருந்தது. மேலும், 2012 ஆம் ஆண்டிலும் 2013 ஆம் ஆண்டிலும் செயற்திட்ட நடவடிக்கைகளிற்காக ரூபா 153,634,785 செலவிடப்பட்டிருந்தது.

(ஆ) 2014 மே 26 ஆந் திகதிய ஆட்பதிதி/நிதி/09/நானாவித/02/2014 ஆம் இலக்க ஆட்பதிவு ஆணையாளர் நாயகத்தின் கடிதத்தின் பிரகாரம் 2016 ஆம் ஆண்டில் இலத்திரணியல் தேசிய அடையாள அட்டை விநியோக நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படுதல் வேண்டும். இருப்பினும், செயற்திட்ட நடவடிக்கைகளிற்காக வழங்குனர் ஒருவர் 2013 ஆம் ஆண்டின் இறுதியில் தெரிவுசெய்யப்பட்டிருந்தமை மற்றும் 2014 ஆம் ஆண்டின் முதலாம் அரையாண்டில் மேற்கொள்ளப்பட வேண்டுமென திட்டமிடப்பட்டிருந்த தனிப்பட்ட தகவல்களையும் உயிரோட்டத் தகவல்களையும் சேகரித்தல் நடவடிக்கைகள் 2014 யூன் 30 ஆந் திகதி வரை நிறைவேற்றப்பட்டிருக்காமை என்பன காரணமாக எதிர்பார்த்த விதத்தில் இலத்திரணியல் தேசிய அடையாள அட்டைகளை விநியோகித்தல் முடியாது போயிருந்தது. இது சம்பந்தமாக ஆணையாளர் நாயகத்தினால் செயற்திட்ட நடவடிக்கை திட்டம் மாற்றப்பட்டுள்ளது என்றும், தனிப்பட்ட தகவல்கள் மற்றும் உயிரோட்டத் தகவல்களை சேகரித்தல் நடவடிக்கைகள் பரீட்சார்த்த செயற்திட்டமொன்றாக தென் மாகாணத்திலுள்ள 15 பிரதேச செயலகப் பிரிவுகளில் 2014 செப்தெம்பர் மாதத்தில் ஆரம்பிக்கப்பட்டன என்றும், அதன் பின்னர் ஆறு மாத காலப்பகுதியில் நாடு முழுவதிலும் இத் தகவல் சேகரிப்பு மேற்கொள்ளப்பட்டு முடிவுக்கு கொண்டுவரப்படும் என்றும் கணக்காய்விற்கு அறிவிக்கப்பட்டிருந்தது.

(இ) திணைக்களத்தின் 2013 ஆம் ஆண்டின் செயலாற்றல் அறிக்கையின் படி பின்வரும் சந்தர்ப்பங்களில் இலத்திரணியல் அடையாள அட்டை செயற்திட்டத்தின் செயற்பாடுகளை நிறைவேற்றுவதன் செயன்முன்னேற்றம் போதியளவில் அடையப்பட்டிருக்கவில்லை.

(i) செயற்திட்டத்தின் பிரதான தரவுக் களஞ்சியத்தை தாபிப்பதற்காக மீளாய்வாண்டில் ரூபா 3.5 மில்லியன் நிதியேற்பாடு செய்யப்பட்டிருந்த போதிலும், அதிலிருந்து எவ்வித பயன்படுத்தலும் இடம்பெற்றிருக்காததுடன் பிரதான அலுவலக வளவில் பிரதான தரவுக் களஞ்சியத்தை தாபிப்பதற்கான திட்டமிடல் மாத்திரம் இடம்பெற்றிருந்தது.

(ii) அனர்த்த மறுசீரமைப்பு நிலையத்தினை தாபிப்பதற்காக ரூபா 20 மில்லியன் நிதியேற்பாடு செய்யப்பட்டிருந்த போதிலும், அதில் ரூபா 0.0114 மில்லியன்

மாத்திரம் செலவிடப்பட்டு சூரியவெவ தொழில்நுட்ப பூங்காவில் காணியொன்று கையேற்கப்பட்டிருந்தது. அதற்கான திட்டத்தையும் நிர்மாண நடவடிக்கைகளையும் நிர்மாண பொறியியல் உசாத்துணை பணியகத்திற்கு (CECB) வழங்குவதற்காக அமைச்சரவையின் அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

(iii) மனித உழைப்பை பயன்படுத்தி தரவுகளைச் சேகரித்தல், அதற்குத் தேவையான தொடர்பாடல் பொருட்கள் மற்றும் உபகரணங்களை வழங்குவதற்காக ரூபா 171.7 மில்லியன் நிதியேற்பாடு செய்யப்பட்டிருந்தது. அதிலிருந்து ரூபா 1.74 மில்லியன் பயன்படுத்தப்பட்டு கைவிரல் அடையாளத்தைப் பெற்றுக்கொள்வதற்குத் தேவையான உபகரணங்களை கொள்வனவு செய்வதற்காக மாத்திரம் கூறுவிலைப் பத்திரங்கள் வழங்கப்பட்டிருந்தன.

(iv) செயற்திட்டத்திற்காக 2012 ஆம் ஆண்டில் ரூபா 748,852 மொத்தமான தொகை செலவிடப்பட்டு 4 புரஜெக்டர்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதிலும், அவைகளில் இரண்டு காணாமல் போயிருந்தன. அது தொடர்பில் விசாரணை நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன.

(v) அரசாங்க கொள்வனவு வழிகாட்டல்கள் கோவையின் 6.2.2 ஆம் வழிகாட்டலின் படி கேள்விகளை சமர்ப்பிப்பதற்காக கேள்விதாரர்களிற்கு குறைந்தபட்சம் 21 நாட்கள் கால அவகாசம் வழங்கப்பட்ட வேண்டிய போதிலும், இலத்திரணியல் தேசிய அடையாள அட்டைகளை வழங்குவதற்கான விண்ணப்பப் படிவங்களை அச்சிடுவதற்கு வழங்குனர் ஒருவரை தெரிவுசெய்வதற்காக 15 நாட்கள் மாத்திரம் கால அவகாசம் வழங்கப்பட்டிருந்தது. இதன் காரணமாக 04 கேள்விதாரர்கள் மாத்திரம் இதற்காக கேள்விப்பத்திரங்களை சமர்ப்பித்திருந்தனர். உரிய கால அவகாசம் வழங்கப்பட்டிருக்காமை காரணமாக போட்டிமிக்க கேள்விதாரர்கள் பங்குபற்றுவதற்கு இருந்த சந்தர்ப்பம் இழக்கப்பட்டிருந்தமையால் அரசாங்கத்திற்குக் கிடைக்கக் கூடியதாகவிருந்த பொருளாதார நலன் இழக்கப்பட்டிருந்தது. 13 அச்சகங்களிலிருந்து கேள்விப்பத்திரங்கள் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த போதிலும் அதற்காக 04 கேள்விதாரர்கள் மாத்திரம் முன்வந்திருந்தனர். அவ்வாறே இதற்குத் தேவையான அச்சிடல் இயந்திரங்கள் மற்றும் தேவையான இயலளவு அநேக நிறுவனங்களில் காணப்படாமையால் 04 கேள்விதாரர்கள் மாத்திரம் முன்வந்திருந்தனர்.

(vi) செயற்திட்ட நடவடிக்கைகளிற்காக பிரதேச செயலகங்களிற்கு தளபாடங்களை கொள்வனவு செய்வதற்கான கூறு விலைகள் கோரப்பட்டதன் பின்னர் 2013 ஒக்தோபர் 15 ஆந் திகதி தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் பரிந்துரையின் பிரகாரம் கூறு விலைகளை அனுப்பிவைத்திருந்த நிறுவனங்களில் தெரிவுப் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருந்தது. அதற்கமைய அவற்றின் தகைமை குறித்து திருப்திப்பட முடிந்திருந்தது என கோவைகளில் குறிப்பிடப்பட்டிருந்தது. இருப்பினும், குறித்த தளபாடங்களை தெரிவுப் பரிசோதனை செய்வதற்கான உபகரணங்களை 2013 நவம்பர் 28 ஆந் திகதிக்கு முன்னர் தலைமை அலுவலகத்திற்கு எடுத்துவருமாறு கேள்விதாரர்களிற்கு கடிதங்கள் அனுப்பிவைக்கப்பட்டிருந்த போதிலும், மேற்படி தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் பரிந்துரைகள் 2013 ஒக்தோபர் 15 ஆந் திகதிக்கு பின்னரே மேற்கொள்ளப்பட்டிருந்தன. 2013 நவம்பர் 28 ஆந் திகதிக்கு முன்னர் குறித்த தெரிவுப் பரிசோதனைகளை மேற்கொள்வதற்காக உபகரணங்களை அனுப்பி வைக்குமாறு கடிதங்கள் அனுப்பிவைக்கப்பட்டிருக்கையில், 2013 ஒக்தோபர் 15 ஆந் திகதி அத் தெரிவுகளுக்குரிய பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்டு கேள்விச் சபையின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. இது தொடர்பில் ஆணையாளர் நாயகத்தின் விளக்கமளித்தல்களின் படி ரூபா 4,489,353 சேமிப்பை மேற்கொள்வதற்கு முடிந்திருந்த போதிலும், தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் பரிந்துரைகள் மற்றும் முந்திய பரிசோதனைகளில் பொருத்தமற்றவை என தீர்மானிக்கப்பட்டிருந்த பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன.

(vii) செயற்திட்டத்தின் கீழ் உத்தியோகத்தர்களை பயிற்றுவிப்பதற்கு கைவிரல் அடையாள சின்னங்களை பெற்றுக்கொள்ளும் 100 உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன், கூறுவிலைகளைக் கோருகையில் அந்த உபகரணம் 10x20 செ.மீ. அளவில் காணப்படுதல் வேண்டுமென குறிப்பிடப்பட்டிருந்தது. இருப்பினும், அரசாங்க நிறுவனமொன்றிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்டிருந்த உபகரணத்தின் அளவு 12 x 6 செ.மீ. அளவில் காணப்பட்டதுடன் அதன்படி அவை குறித்துரைப்புக்களிற்கு அமைவாக காணப்படவில்லை.

(viii) அத்துடன் 15-17 செ.மீ. x 7-9 செ.மீ. x ½ செ.மீ. அளவுடைய கைவிரல் அடையாள மைபெட்டிகளும் Ridge builder/ Enhancer வகை மையும் பெற்றுக்கொள்ளப்படுதல் வேண்டுமென தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு அறிவித்திருந்ததுடன் அதற்கமைய குறித்த பொருட்கள் தனியார் கம்பனியொன்றினூடாக நேரடியாக இறக்குமதி செய்யப்பட்டிருந்தன. இருப்பினும், குறித்த மை பெட்டி ஒன்றின் நீளம் 10 x 6 செ.மீ. அளவுடையதாக காணப்பட்டமை, மையானது Ridge builder/ Enhancer

வகையானதாக காணப்பட்டிருக்காமை, மையிடல் பெட்டிகள் இறக்குமதி செய்யப்பட்டிருப்பினும் திணைக்களத்திற்கு எடுத்துவரப்பட்ட பின்னர் திணைக்கள வளவில் இறக்குமதிக் கம்பனியின் பெயர், பண்டப் பெயர், வகை மற்றும் குறியீட்டு இலக்கம் என்பவற்றை உள்ளடக்கிய ஸ்ரிகர் ஒட்டப்பட்டிருந்தமை போன்ற விடயங்கள் பௌதீக கணக்காய்வில் உறுதிப்படுத்தப்பட்டது. மேலும், மையிடல் பெட்டிகளுக்கான 100 மாதிரிகள் அரசாங்க நிறுவனத்தின் மூலம் ஒரு வகை உற்பத்திப் பெயரில் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்ததுடன் 14,500 மை பெட்டிகளை பெற்றுக் கொள்கையில் வேறொரு உற்பத்திப் பெயரில் தனியார் கம்பனியொன்றிடமிருந்து கட்டளையிடப்பட்டிருந்தது.

(ix) திணைக்களத்தினால் 2014 பெப்ரவரி 28 ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்டிருந்த புதிய கணனிமயப்படுத்தப்பட்ட அடையாள அட்டைகளை வழங்கும் நடவடிக்கையும் தற்போது இடம்பெற்று வருகின்றது. சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளில் தகவல்கள் உள்ளடக்கப்பட்டுள்ள இந்த அடையாள அட்டைகளுக்கு சுய விபரத் தகவல்களை உள்ளடக்குவதன் மூலம் மேற்குறிப்பிட்ட செயற்திட்டத்தின் கீழ் வழங்குவதற்கு எதிர்பார்க்கப்படுகின்ற இலத்திரணியல் தேசிய அடையாள அட்டையினை ஒத்ததான அடையாள அட்டைகளை வழங்குவதற்கு முடியும். அதன்படி, தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்ற முறையினை மேம்படுத்துவதன் மூலம் செயற்திட்டத்திற்காகச் செலவிடப்படுகின்ற அதிகளவான பணத்தினை சேமிக்கக் கூடிய வாய்ப்பு காணப்படுகின்றமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

## 7.6 மனிதவள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மேலதிக எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட மட்டம் | 25 | 14 | 11 | - |
| (ii) | மூன்றாம் மட்டம் | 04 | 01 | 03 | - |
| (iii) | இரண்டாம் மட்டம் | 1,195 | 977 | 218 | - |
| (iv) | ஆரம்ப மட்டம் | 139 | 123 | 16 | - |
| (v) | ஏனையோர் | - | 01 | - | 01 |
| | மொத்தம் | 1,363 | 1,116 | 248 | 01 |

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

மீளாய்வாண்டின் இறுதியளவில் 248 வெற்றிடங்கள் காணப்பட்டதுடன் இந்த வெற்றிடங்களை நிரப்புவதற்குத் தேவையான பதவியணியினர் பொது நிர்வாக அமைச்சிடமிருந்தும் கணக்காளர் சேவை சபையிடமிருந்தும் கோரப்பட்டிருந்தது.

## 8. தலைப்பு 291 – கரையோரம் பேணல் திணைக்களம்

-----------------------------------------------------------------------------------------------

### 8.1 கணக்காய்வின் நோக்கெல்லை

-----------------------------------------------------

கரையோரம் பேணல் திணைக்களத்தின் 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிஅறிக்கைகள், இணக்கக் கூற்றுக்கள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2014 ஆகஸ்ட் 08 ஆந் திகதி திணைக்களத்தின் தலைவருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல் மாதிரிகள் மீதான தெரிவுச் செவ்வை பார்த்தல் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அம் மீளாய்வினதும் செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லை, பரப்பு என்பன எனக்குக் கிடைக்கப்பெற்றுள்ள பதவியணியினர் ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வினை மேற்கொள்ளக்கூடிய வகையில் தயாரிக்கப்பட்டிருந்தன.

### 8.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

-----------------------------------------------------------------------------------------------------------------------------------------

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றினை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், பொது நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல், நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகளையும் இணக்கக் கூற்றுக்களையும் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், அமுலாக்குதல், செயற்படுத்துதல் என்பன இந்த பொறுப்பில் உள்ளடங்குகின்றன

## 8.3 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் பிரகாரம் கரையோரம் பேணல் திணைக்களத்தின் ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் இவ்வறிக்கையில் (அ) தொடக்கம் (இ) வரையிலுள்ள பொது அவதானிப்புகள் மற்றும் 8.4 இலிருந்து 8.14 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புக்களைத் தவிர்த்து திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது அவதானிக்கப்பட்டது.

(அ) ஏடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்படாமை

திணைக்களத்தினால் கீழே காண்பிக்கப்படுகின்ற ஏடுகள் முறையாகவும் நாளதுவரையாகவும் பேணப்படாதிருந்தமை தெரிவுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டது.

| | ஏடுகளின் வகை | உரிய பிரமாணங்கள் |
|---|---|---|
| (i) | செலவினப் பேரேடு | நிதிப்பிரமாணம் 447 |
| (ii) | நட்டம் மற்றும் இழப்புப் பதிவேடு | நிதிப்பிரமாணம் 110 |
| (iii) | வைப்புப் பதிவேடு | நிதிப்பிரமாணம் 414 |
| (iv) | முற்பணப் பேரேடு | நிதிப்பிரமாணம் 420 |
| (v) | நிலையான சொத்துப் பதிவேடு | 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றுநிருபம் |

(ஆ) பாதீட்டு முரண்

06 செலவின விடயங்களுக்காக மிகை ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டமையின் காரணமாக நிதியேற்பாட்டைப் பயன்படுத்தியதன் பின்னர் சேமிப்பு அந்த செலவின விடயங்களுக்குரிய தேறிய நிதி ஏற்பாட்டில் 20 சதவீதம் தொடக்கம் 70 சதவீதம் வரையிலான வீச்சில் காணப்பட்டது.

(இ) அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு

29101 ஆம் விடய இலக்க முற்பணக் கணக்குகள் தொடர்பான 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான இணக்கக்கூற்றின் பிரகாரம், அத்திகதியில் உள்ளவாறு அறவீடுகள் நிலுவையாக இருந்த மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 1,485,735 ஆக இருந்தது.

**8.4 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்**

**8.4.1 வருடாந்த கொள்வனவுத் திட்டம்**

2006 மார்ச் 24 ஆந் திகதிய 128 ஆம் இலக்க தேசிய பாதீட்டுச் சுற்றுநிருபத்தின் பிரகாரம் வருடாந்த கொள்வனவுத் திட்டம் 2014 யூலை 31 ஆந் திகதி வரையிலும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**8.4.2 உள்ளகக் கணக்காய்வு**

திணைக்களத்தில் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு ஸ்தாபிக்கப்பட்டிராததுடன் திணைக்களத்தின் உள்ளகக் கணக்காய்வு நடவடிக்கைகள் அமைச்சின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவின் மூலமேனும் நிறைவேற்றுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**8.4.3 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவினை அமுல்படுத்துதல்**

2009 யூன் 09 ஆந் திகதிய டீஎம்ஏ/2009(1) ஆம் இலக்க முகாமைத்துவக் கணக்காய்வு சுற்றுநிருபத்தின் பிரகாரம் 2013 ஆம் ஆண்டின் போது திணைக்களத்தினால் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டம் நடாத்தப்பட்டிருக்கவில்லை.

**8.5 சொத்துக்கள் முகாமைத்துவம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) செயற்பாடற்ற மற்றும் குறைவான பயன்பாடுடைய சொத்துக்கள்

கீழே விபரிக்கப்பட்டதன் பிரகாரம் சில சொத்துக்கள் செயற்பாடற்ற அல்லது குறைவான பயன்பாட்டுடன் காணப்படுகின்றமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டது.

| | சொத்து வகை | அலகுகளின் எண்ணிக்கை | செயற்பாடற்று அல்லது குறைவான பயன்பாட்டுடன் காணப்பட்ட காலம் |
|---|---|---|---|
| (i) | வாகனம் | 05 | 04 வருடங்கள் |
| (ii) | வாகனம் - டிபர் வாகனம் | 03 | 03 வருடங்கள் |
| (iii) | இயந்திர சூத்திரம் | 02 | 04 வருடங்கள் |
| (iv) | கேபியன் பிளாஸ்டிக் வலை | 236 | 06 வருடங்கள் |
| (v) | கிறீன் நெற் | 220 மீற்றர் | 03 மாதங்கள் |

(ஆ) வருடாந்த பொருள் மெய்மையாய்வை நடாத்துதல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2010 திசெம்பர் 17 ஆந் திகதிய பீஎப்/மெய்மையாய்வுச் சபை/01 ஆம் இலக்க அரசாங்க நிதிப் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தினால் திருத்தப்பட்ட 2009 திசெம்பர் 09 ஆந் திகதிய 441 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றுநிருபத்தின் பிரகாரம் 2013 இன் வருடாந்த பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டு அவ்வறிக்கை 2014 மார்ச் 31 ஆந் திகதிக்கு கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் திணைக்களம் அந்த அறிக்கையை 2014 மே 07 ஆந் திகதி சமர்ப்பித்திருந்தது.

(ii) 2013 ஆம் ஆண்டிற்குரிய மெய்மையாய்வு அறிக்கையின் மூலம் காண்பிக்கப்பட்ட மிகை, பற்றாக்குறை மற்றும் ஏனைய சிபார்சுகள் தொடர்பாக நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) தீர்க்கப்படாத பொறுப்புக்கள்

திணைக்களத்தினால் 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு தீர்க்கப்படாத பொறுப்புக்கள் ரூபா 639,518,227 ஆக இருந்ததுடன் அப்பொறுப்புக்கள் 01 வருடத்திற்குக் குறைவான காலமாக இருந்துவரும் மீதியாகும். நிதிப்பிரமாணம் 94 இற்கு முரணாக நான்கு மீண்டெழும் செலவின விடயங்களின் சேமிப்பு ரூபா 44,376 இனை விஞ்சி ரூபா 3,456,538 தொகையும், இரண்டு மூலதன செலவின விடயங்களின் சேமிப்பு ரூபா 380,742 தொகையை விஞ்சி ரூபா 258,251 தொகையுமாக ரூபா 3,714,789 கூட்டுத்தொகையான பொறுப்புக்கள் ஏற்பட்டிருந்தன.

## 8.6 இணக்கமின்மைகள்

### சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மை

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களின் ஏற்பாடுகளுக்கு இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து தரப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலிவற்றுடனான தொடர்பு | பெறுமதி | இணக்கமின்மை |
|---|---|---|
| | ரூபா | |
| (அ) 1981 இன் 57 ஆம் இலக்க கரையோரப் பேணல் அதிகாரச்சட்டத்தின் 31(1), 31(2) மற்றும் 31(4) ஆம் பிரிவுகள் | 5,991,496 | 2013 ஆம் ஆண்டின் போது 326 உடைத்து அகற்றும் கட்டளை விநியோகிக்கப்பட்டிருந்த போதிலும், 2013 இன் செயல்முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம் எந்த உடைத்து அகற்றல்களும் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. எவ்வாறாயினும் இதற்காக ரூபா 5,991,496 தொகை செலவிடப்பட்டிருந்தது. |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் 137 மற்றும் 138 | 825,000 | திணைக்களத்தின் பிரதேச அலுவலகத்தை யாழ்ப்பாணத்தில் ஸ்தாபிக்கும் நோக்கத்தில் யாழ்ப்பாண மாவட்ட செயலகக் கட்டிடத்தில் ஒரு பகுதியை ஒதுக்குவதற்காக மாவட்டச் செயலாளருடன் 2013 செப்தெம்பர் 12 ஆந் |

திகதி உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்ததுடன் அந்த உடன்படிக்கை கைச்சாத்திடப்படுவதற்கு முன்னர் அதாவது 2013 மார்ச் 20 ஆந் திகதி இச் செயற்பாட்டிற்காக யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்திற்கு ரூபா 825,000 தொகை செலுத்தப்பட்டிருந்தது. எனினும் உடன்படிக்கையின் பிரகாரம் உரிய அலுவலகத்திற்காக கட்டிடத்தின் ஒரு பகுதியை வேறுபடுத்தி அமைக்கும் ஒப்பந்தம் 2013 ஒக்தோபர் 31 ஆந் திகதி பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்த போதிலும் 2014 யூலை 18 வரையிலும் அச்செயற்பாடு பூர்த்திசெய்யப்பட்டிருக்கவில்லை.

**8.7 செயற்திட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதம்**

---

மாரவில – தலவில அலை தாங்கியை நிர்மாணிக்கும் 03 ஒப்பந்தங்கள் தொடர்பாக பின்வரும் விடயங்கள் கண்டறியப்பட்டன.

(அ) மதிப்பீட்டுக் கிரயம் ரூபா 107,530,000 தொகையான இந்த நிர்மாணங்களுக்காக 2012 மார்ச் 02 ஆந் திகதி உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்ததுடன் 2012 யூன் 02 ஆந் திகதி வேலை பூர்த்திசெய்யப்பட வேண்டியிருந்தது. 2013 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் ரூபா 52,589,405 தொகை செலவிடப்பட்டிருந்த போதும் ஒப்பந்தக்காரரின் நலிவான செயலாற்றல் மற்றும் உடன்படிக்கையின் பிரகாரம் வேலை பூர்த்தி செய்யப்படாமையின் அடிப்படையில் 2014 பெப்ரவரி 25 ஆந் திகதி வரையிலும் வேலை பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) இந்த ஒப்பந்த உடன்படிக்கையின் பிரகாரம், வேலை பூர்த்தி செய்யப்படாமையினால் அவ்வவ்போது ஒப்பந்தக் காலம் நீடிக்கப்பட்டிருந்த போதிலும் உடன்படிக்கையின் பிரகாரம் செயற்படாமையினாலும் ஏற்றுக்கொள்ளக்கூடிய வகையில் நிர்மாணிப்பதற்கு தவறியிருந்தமையினாலும் 2013 யூலை 10 ஆந் திகதி தொடக்கம் அமுலாகும் வகையில் ஒப்பந்தக்காரர் நீக்கப்பட்டிருந்தார். எவ்வாறாயினும் அரசாங்க கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 8.11.5 வழிகாட்டியின் பிரகாரம் உரிய நிறுவனம் கறுப்புப் பட்டியலில் இடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) குறிப்பிட்ட திகதியில் உள்ளவாறு வேலை பூர்த்தி செய்யப்படாமையின் காரணமாக மேற்கூறப்பட்ட உடன்படிக்கையின் 49(1) மற்றும் 50(1) ஆம் பிரிவின் பிரகாரம் ஒப்பந்தப் பெறுமதியில் 0.05 சதவீதம் அதாவது ரூபா 10,753,000 தாமதக்கட்டணம் அறவிடப்பட வேண்டியிருந்த போதிலும் 2014 யூலை 31 ஆந் திகதி வரையிலும் அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) இந்த அலை தாங்கிக்காக ஒப்பந்தக்காரரினால் ஈடுபடுத்தப்பட்டவைகள் உரிய வகையில் செயற்படாமை மற்றும் இடர்களுக்கு உள்ளாகியுள்ள மிதவைகளுக்காக உரிய அங்கீகாரமின்றி 2013 பெப்ரவரி 14 ஆந் திகதி ரூபா 04 மில்லியன் உடன்படிக்கை செய்யப்பட்ட பணத்திற்கு மேலதிகமாகக் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. இந்த மிதவைகள் விபத்துக்களுக்குட்படுத்தப்பட்டு செயற்பாடற்றிருந்ததுடன் 2014 பெப்ரவரி 25 ஆந் திகதி வரையிலும் ஒப்பந்தக்காரரினால் அவைகள் அகற்றப்படாமையினால் கடலில் அமிழ்ந்த நிலையில் காணப்பட்டது.

## 8.8 செயலாற்றல்

2013 இன் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் திணைக்களத்தின் செயல்முன்னேற்றம் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

(அ) போதியளவில் நிறைவேற்றப்படாத பிரதான செயற்பாடுகள்

திணைக்களத்தினால் பிரதான செயற்பாடுகள் போதியளவில் நிறைவேற்றப்படாதிருந்ததுடன் அவ்வாறு அவதானிக்கப்பட்ட சில சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | **நிர்மாண செயற்திட்டம்** | **நிதியேற்பாடு** | **பயன்பாடு** | **2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு நிர்மாணித்தல் நிலைமை** |
|---|---|---|---|---|
| | | **ரூபா. மில்லியன்** | **ரூபா. மில்லியன்** | |
| (i) | உல்ஹிட்டிய – தெற்கு 80 மீற்றர் அலை தாங்கி | 15.0 | 15.81 | நிர்மாணச் செயற்பாடுகளில் 60 சதவீதம் பூர்த்திசெய்யப்பட்டிருந்தது. |
| (ii) | உஸ் வெட்டகெய்யாவ | 15.0 | 15.09 | நிர்மாணச் செயற்பாடுகள் 20 சதவீதம் செயல்முன்னேற்றத்தைக் |

| | | | | |
|---|---|---|---|---|
| | 03 – நீர் பிரித்தல் | | | கொண்டிருந்தது. |
| (iii) | கொக்கல 90 மீற்றர் நீளம் - மரத்தாலான கடலரிப்புத் தடுப்பு அரண் | 10.0 | 20.18 | நிதியேற்பாடு செய்யப்பட்ட செலவினத்தைப் போல இருமடங்கு செலவினம் செய்யப்பட்டிருந்த போதிலும் 50 சதவீத நிர்மாணிப்புகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்தன. |
| (iv) | மெடில்ல தங்காலை (எஸ்பீடபிள்யூ 1) 120 மீற்றர் நீளம் அலை தாங்கி | 60.0 | 16.88 | வழிப்பாதையில் 17 சதவீதம் பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. |
| (v) | மெடில்ல தங்காலை (எஸ்பீடபிள்யூ 2) 80 மீற்றர் நீளம் அலை தாங்கி | 40.0 | 8.69 | வழிப்பாதையில் 31 சதவீதம் பூர்த்திசெய்யப்பட்டிருந்தது. |
| (vi) | அவசர கரையோரப் பாதுகாப்பு நிர்மாணம் | 50.0 | 41.23 | நிர்மாணங்களில் 82 சதவீதம் பூர்த்திசெய்யப்பட்டிருந்தது. |
| (vii) | கரையோரங்களை அபிவிருத்தி செய்யும் செயற்திட்டம் | 200.0 | 8.23 | அபிவிருத்தி நடவடிக்கைகள் 4 சதவீதம் பூர்த்திசெய்யப்பட்டிருந்தது. |
| (viii) | கரையோர பொறியியல் புலனாய்வு | 10.0 | 6.71 | 67 சதவீதம் செயல்முன்னேற்றம் |
| (ix) | அனுமதிப்பத்திரம் விநியோகித்தல் | 0.4 | 0.36 | 25 சதவீதம் செயல்முன்னேற்றம் |

**8.9 வங்கிக் கணக்குச் செயற்பாடுகளில் குறைபாடு**

கல்கிஸ்ஸ கரையோரப்பகுதியை கடலுடன் வேறாக்குவதற்காக அறவிடப்பட்ட அரசாங்கத்தின் கட்டணம் ரூபா 30,000 தொகைக்காகப் பெறப்பட்ட தனியார் காசோலை மதிப்பிழந்திருந்த போதிலும் அப்பணம் 2014 யூலை 31 ஆந் திகதி வரையிலும் அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 8.10 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

---

திக்ஓவிட்ட மீன்பிடித்துறைமுக செயற்திட்டம் முடிவடைந்ததன் பின்னர் அந்த செயற்திட்டத்திற்குப் பயன்படுத்தப்பட்ட 3 டிபர் வாகனங்கள் மற்றும் ஒரு லொறி என்பன 2011 திசெம்பர் 27 ஆந் திகதி திணைக்களத்திற்கு வழங்கப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இந்த வாகனங்களைக் கையேற்கும் போது வரியாக ரூபா 4,055,764 தொகை 2011 நவம்பர் 16 ஆந் திகதி இலங்கை சுங்கத்திற்குச் செலுத்தப்பட்டிருந்ததுடன் திணைக்களத்திற்கு 2012 சனவரி 10 ஆந் திகதி கையளிக்கப்பட்டிருந்தது.

(ஆ) இந்த நான்கு வாகனங்களையும் கையேற்பதற்கு முன்னர் மோட்டார் வாகன பொறியியலாளரைக் கொண்டு பரிசோதனை அறிக்கை பெறப்படாதிருந்ததுடன் நான்கு வாகனங்களையும் பரீட்சிப்பதற்காக 2012 பெப்ரவரி 06 ஆந் திகதி நியமிக்கப்பட்ட குழுவின் அறிக்கையின் பிரகாரம் கையேற்கும் சந்தர்ப்பம் வரையிலும் ஓட்டத்திற்கு பொருத்தமான நிலையில் இல்லாதிருந்தமை காண்பிக்கப்பட்டிருந்தது. திணைக்களத்திற்கு சொத்துக்களை கையேற்கும் போது உரிய முறைமையொன்று பின்பற்றப்படாமையினால் அந்த வாகனத்திற்கான வரி மற்றும் ஏனைய செலவினங்களுக்காக செலவிடப்பட்ட ரூபா 4,092,264 தொகையான செலவினம் பயன்பாடற்றிருந்தது.

(இ) நான்கு வாகனங்களையும் கையேற்ற திகதி முதல் ஓட்டத்தில் ஈடுபடுத்தாதிருந்ததுடன் அதற்காக நாளாந்த ஓட்ட அட்டவணை மற்றும் சம்பவத்திரட்டுப் புத்தகம் என்பன பேணப்பட்டிருக்கவில்லை. இந்த வாகனங்கள் பாவனைக்கு தகுதியற்றவை எனவும் ஏலத்தில் விற்பனை செய்யப்பட வேண்டியவை எனவும் வருடாந்த பொருள் மெய்மையாய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டிருந்த போதிலும் 2014 யூலை 31 ஆந் திகதி வரையிலும் எந்த நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) ஒரு வாகனத்தை பழுதுபார்ப்பதற்காக ரூபா 1,324,656 தொகையான மதிப்பீடு பெறப்பட்டு சேவையினைப் பெறுவதற்கு முன்னர் மதிப்பீட்டுத் தொகையில் ரூபா 500,000 செலுத்தப்பட்டிருந்தது. இச் சேவை பெறப்படாதிருந்ததுடன் 2014 யூலை 31 வரையிலும் அப்பணத்தை மீள அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**8.11 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

---

கரையோர வலயங்களில் ஆரம்பிக்கப்பட்ட மூடுபயிர்ச் செய்கை நிகழ்ச்சித்திட்டம், உரிய வகையில் பராமரிக்கும் முறைமையொன்று காணப்படாமையினால் 2013 ஆம் ஆண்டின் திணைக்களத்தின் செயல்முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம் அந்த நிகழ்ச்சித்திட்டத்திற்காக ரூபா 962,150 தொகை செலவிடப்பட்டிருந்ததுடன் அதன் பௌதீக செயல்முன்னேற்றம் காணப்படவில்லை. அதன் பிரகாரம் செலவிட்ட தொகை பயனற்றதாக இருந்தது.

**8.12 தீர்வு காணப்படாத கணக்காய்வுப் பந்திகள்**

---

திணைக்களத்திற்குரிய கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கையில் உள்ளடங்கியிருந்த கணக்காய்வு பந்திகளின் பின்தொடர் நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்படாதிருந்த பந்திகளுடனான தொடர்பு கீழே காண்பிக்கப்படுகின்றது.

| கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கையுடனான தொடர்பு | | தொடர்புடைய விடயம் |
|---|---|---|
| ஆண்டு | பந்தி இலக்கம் | |
| 2011 | 1.3(ஈ) | கொள்வனவுத் திட்டம் தயாரிக்கப்படாமை |
| 2012 | 1.4.2 | |
| 2011 | 1.3(எ) | கட்டுப்பாட்டுக் கணக்குகளுக்கும் தனிப்பட்ட கணக்கு மீதிப் பதிவேடுகளுக்குமிடையிலான ரூபா 1,902 வேறுபாட்டினை தீர்ப்பதற்கான நடவடிக்கை எடுக்காமை |
| 2012 | 1.3(எ)(ii) | |
| 2012 | 1.4.3 | உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு ஸ்தாபிக்கப்படாமை |
| 2012 | 1.4.4 | கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு அமுல்படுத்தப்படாமை |
| 2012 | 1.7 | நிதிப் பிரமாணம் 169(2) இன் |

ஏற்பாடுகளுக்கு முரணாக தனியார் நிறுவனத்திலிருந்து கிடைத்த காசோலை தேறுவதற்கு முன்னர் சேவை வழங்கியமையும் அக்காசோலை மதிப்பிழந்திருந்த போதிலும் அதற்காக பணம் அறவிடப்படாமையும்

## 8.13 முகாமைத்துவ நலிவுகள்

-------------------------------------------

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது பின்வரும் நலிவுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) கரையோரம் பேணல் நிகழ்ச்சித்திட்டம்

-----------------------------------------------------------------

கரையோரம் பேணல் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் கடற்கரையில் ஏதாவது இடத்தில் கரையோரம் பாதிப்பிற்குள்ளான அபாயம் இனங்காணப்பட்டதன் பின்னர் அதனைக் குறைத்தல் திணைக்களத்தின் நோக்கமாகும். அதற்காக ஈடுபடுத்தப்படுகின்ற செயற்பாடுகள் அல்லது எடுக்கப்படுகின்ற நடவடிக்கைகள் தொடர்பாக ஆரம்ப ஆய்வினைச் செய்து எவ்வாறான செயற்பாடுகள் தேவையானது என கண்டறிந்து நடவடிக்கை எடுத்தல் திணைக்களத்தின் எதிர்பார்ப்பாகும். எவ்வாறாயினும், எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களை நிறைவேற்றாத சந்தர்ப்பம் மற்றும் அந்த நோக்கங்களை அடைந்து கொள்வதற்கு அங்கீகரிக்கப்பட்ட செயற்திட்டத்தில் மாற்றத்தை ஏற்படுத்துதல், ஒன்றுசேர்த்தல் மற்றும் கைவிடப்படுவதற்கு ஏற்பட்ட சந்தர்ப்பங்களில் சில கீழே காண்பிக்கப்படுகின்றன.

(i) நீர்கொழும்பு துன்கல்பிட்டியவில் 220 மீற்றர் நீளத்தில் அணைச்சுவர் (Revetment) திட்டமிடப்பட்டிருந்த போதிலும் 06 மரத்தாலான கடலரிப்புத் தடுப்பு அரண் (Groyner) நிர்மாணிக்கப்பட்டிருந்தது.

(ii) 2011 ஆம் ஆண்டின் போது ரூபா 25.87 மில்லியன் செலவிடப்பட்டு 270 மீற்றர் நீளத்தில் கெபுன்கொடை அலை தாங்கி மற்றும் 75 மீற்றர் நீளத்தில் மரத்தாலான கடலரிப்புத் தடுப்பு அரண் நிர்மாணிக்கப்பட்டிருந்த போதிலும் மணல்நிறைத்தல் மற்றும் எதிர்பார்த்த நோக்கமான படகுகளை நிறுத்த முடியாதிருந்தமையினால் அலை தாங்கியில் 110 மீற்றரை அகற்றுவதற்கு 2013 ஆம் ஆண்டின் போது தீர்மானிக்கப்பட்டிருந்தது. இந்த நிர்மாணங்களுக்காக செலவிடப்பட்ட பணம் ரூபா 19,578,933 ஆக இருந்ததுடன் உடைத்து

அகற்றுவதற்காக ரூபா 6,202,332 செலவிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் திணைக்களத்திற்கு ஏற்பட்ட நட்டம் ரூபா 25,781,265 ஆகும்.

(iii) பொறியியல் மதிப்பீடு மற்றும் திட்டமிடல்களின் படி, உனவட்டுன- அலை தாங்கி நிர்மாணிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்ததுடன் நிர்மாணிக்கும் வசதிக்காக நீர்மட்டத்திலிருந்து 2.5 மீற்றர் உயரத்தில் நிர்மாணிக்கப்பட்டிருந்தது. நீர் மட்டத்திற்கு மேல் நிர்மாணிக்கப்பட்ட அளவை அகற்றிக்கொண்டிருந்த அச்செயற்பாட்டை நிறுத்துவதற்கு 2013 மே 08 ஆந் திகதி கொள்வனவுக் குழு தீர்மானித்திருந்தது. அதில் ஒரு பகுதியை அகற்றுவதற்காக ஏற்பட்ட செலவினம் ரூபா 1,462,200 ஆனமையால் அது திணைக்களத்தினால் செய்யப்பட்ட பயனற்ற செலவினமாக இருந்தது. மேலும் அலை தாங்கியின் வெற்றி நிலைக்காக நீர்மட்டத்திலிருந்து 2.5 மீற்றர் உயரத்தில் நிர்மாணிக்கப்பட்ட அளவு அகற்றப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு அகற்றாமையினால் அந்த நிர்மாணங்களுக்கு அண்மித்த கடல் பாதிப்பிற்குள்ளாகிக் காணப்பட்டது.

(iv) அலை தாங்கி நிர்மாணிப்பதால் மணல் கரையில் நிறுத்தி வைப்பதற்கு உதவியாக இருந்ததுடன் மணல் குவிப்பொன்றை ஏற்படுத்த வேண்டுமாயின் அதற்கு முன்னர் அந்த பிரதேசத்தில் அலை தாங்கி நிர்மாணங்களைச் செய்யவேண்டியிருந்தது. இருந்த போதிலும் மணல் குவிப்பு ஏற்படுத்துவதற்கு முன்னர் நிர்மாணிப்பதற்கு திட்டமிடப்பட்ட அலை தாங்கி நிர்மாணம் தாமதமாகியமையால் ரூபா 134.7 மில்லியன் செலவிடப்பட்ட மணல் குவிப்பு செயற்திட்டங்கள் வெற்றியடைந்திருக்கவில்லை.

(ஆ) அனுமதிப்பத்திரம் விநியோகித்தல்

---------------------------------------------------------

அனுமதிப்பத்திரம் விநியோகித்தல் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுப் பரிசோதனையின் போது பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) நிர்மாணிப்பதற்காக அனுமதிப்பத்திரம் விநியோகிக்கும் போது பின்பற்றப்பட வேண்டிய பொதுவான நடைமுறைகளுக்குப் புறம்பாக ஆலோசனைச் சபையின் மேவுகை அங்கீகாரத்தின் கீழ் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. அவ்வாறு வழங்கப்பட்ட மேவுகை அங்கீகாரம் ஆலோசனைச் சபையின் முறையான அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) கரையோர வலயத்தின் அபிவிருத்திச் செயற்பாடுகளுக்காக அனுமதிப்பத்திரம் விநியோகிக்கும் போது நிர்மாணங்கள் கரையோரம் பேணல் வலயத்திலிருந்து எவ்வளவு துாரத்தில் நிர்மாணிக்கப்பட வேண்டும் என அனுமதிப்பத்திரத்தில் குறிப்பிடப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு குறிப்பிடப்படாமல் நீர்கொழும்பு கரையோர வலயத்தின் அபிவிருத்திச் செயற்பாடுகளுக்காக அனுமதிப்பத்திரம் விநியோகிக்கப்பட்ட சந்தர்ப்பங்கள் காணப்பட்டன.

(iii) குறிப்பிட்ட எல்லைக்குப் புறம்பாக (கரையோர எல்லையினைக் கவனத்திற்கொள்ளாது) நிர்மாண அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டமையினால் கரையோர எல்லைக்கு சேதம் ஏற்பட்ட சந்தர்ப்பங்கள் காணப்பட்டன.

* மொரகல்லையில் அமைந்துள்ள ஹொட்டெல் கரையோரம் பேணல் பிரதேசத்திலிருந்து 40 மீற்றர் எல்லைக்குள் நிர்மாணிக்க முடியாதிருந்த போதிலும் அந்த ஹொட்டெலின் பின்புறத்தில் 200 அடி நீளத்தில் கொங்கிரீட் அணை நிர்மாணிக்கப்பட்டிருந்தது. அதனால் கரையோர எல்லையைக் காணமுடியவில்லை.

* மொரகல்லையில் அமைந்துள்ள இன்னுமொரு ஹொட்டெல் கரையோரம் பேணல் எல்லையைக் கவனத்திற்கொள்ளாது 170 மீற்றர் நீளத்தில் ‘‘கேபியன்’’ கட்டு நிர்மாணிக்கப்பட்டிருந்ததுடன் ஹொட்டெலிலிருந்து அகற்றப்படுகின்ற கழிவுப்பொருட்கள் கடலுடன் சேர்க்கப்பட்டிருந்தன.

* பேருவலை நகரத்தில் நிர்மாணிக்கப்பட்ட மீன்பிடி விற்பனைக் கூடங்களுக்கு அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்ட இடத்திலிருந்து 50 மீற்றர் அளவான தொலைவில் வேறொரு இடத்தில் கரையோர எல்லையில் நிர்மாணிக்கப்பட்டிருந்தன.

(iv) உடைத்து அகற்றுதல் கட்டளை விநியோகித்தல் மற்றும் செயற்திட்டத்தை பூர்த்தி செய்தல் தொடர்பான பின்தொடர் நடவடிக்கை இன்மையினால் செயற்திட்டங்களில் திணைக்களத்தின் நோக்கம் நிறைவேற்றப்படாத சந்தர்ப்பங்கள் காணப்பட்டன.

* குறிப்பிட்ட ஹொட்டெலை உடைத்து அகற்றும் கட்டளை விநியோகிக்கப்பட்டிருந்த போதிலும் 2014 பெப்ரவரி 21 ஆந் திகதி

வரையிலும் உடைத்து அகற்றுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

* காலியில் நிர்மாணிக்கப்பட்ட தகவல் நிலையக் கட்டிடத்தில் தனியார் சிற்றுண்டிச்சாலை நடாத்தப்பட்டிருந்தது.

(இ) அனுமதியற்ற நிர்மாணங்களை உடைத்து அகற்றுவதற்கான கட்டளை விநியோகித்தல்

2013 ஆம் ஆண்டில் வெள்ளவத்தை, கல்கிஸ்ஸ, தெஹிவளை மற்றும் பம்பலப்பிட்டி போன்ற பிரதேசங்களில் 139 அனுமதியற்ற நிர்மாணங்கள் இனங்காணப்பட்டிருந்த போதிலும் அவற்றிற்காக உடைத்து அகற்றும் கட்டளை விநியோகிக்கப்பட்டமைக்கான சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 8.14 மனித வள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 37 | 18 | 19 |
| (ii) | மூன்றாம் நிலை | 04 | 01 | 03 |
| (iii) | இரண்டாம் நிலை | 332 | 201 | 131 |
| (iv) | ஆரம்ப நிலை | 174 | 73 | 101 |
| | மொத்தம் | 547 | 293 | 254 |

மீளாய்வாண்டின் இறுதியளவில் 254 வெற்றிடங்களை நிரப்புவதற்கு திணைக்களத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 9. தலைப்பு 320 – சிவில் பாதுகாப்புத் திணைக்களம்

---

### 9.1 கணக்காய்வின் நோக்கெல்லை

---

சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தின் 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிஅறிக்கைகள், இணக்க கூற்றுக்கள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2014 ஒக்தோபர் 09 ஆந் திகதி பணிப்பாளர் நாயகத்திற்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல் மாதிரிகள் மீதான தெரிவுச் செவ்வை பார்த்தல் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அம் மீளாய்வினதும் செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லை, பரப்பு என்பன எனக்குக் கிடைக்கப்பெற்றுள்ள பதவியணியினர் ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வினை மேற்கொள்ளக்கூடிய வகையில் தயாரிக்கப்பட்டிருந்தன.

### 9.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

---

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றினை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், பொது நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல், நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகளையும் இணக்கக் கூற்றுக்களையும் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், அமுலாக்குதல், செயற்படுத்துதல் என்பன இந்த பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

## 9.3 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் பிரகாரம் சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தின் ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் இவ்வறிக்கையில் (அ) மற்றும் (ஆ) இல் உள்ள பொது அவதானிப்புகள் மற்றும் 9.4 இலிருந்து 9.7 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புக்களைத் தவிர்த்து திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது அவதானிக்கப்பட்டது.

### (அ) பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்படாமை

சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தினால் பின்வரும் பதிவேடுகள் முறையாகவும் நாளதுவரையாகவும் பேணப்படாதிருந்தமை தெரிவுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டது.

| பதிவேட்டின் வகை | உரிய பிரமாணம் |
|---|---|
| பொறுப்புப் பதிவேடு | நிதிப் பிரமாணம் 214 |
| நிலையான சொத்துக்கள் பதிவேடு | 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை |
| கணனி, உப பாகங்கள் மற்றும் மென்பொருட்கள் தொடர்பான பதிவேடு | 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை |

### (ஆ) கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் போன்ற தேவையான சான்றுகள் திணைக்களத்தில் காணப்படாமையினால் ரூபா 379,250 கூட்டுத்தொகையான தொகைக்குரிய கொடுக்கல்

வாங்கல்களை கணக்காய்வின் போது திருப்திகரமானதாக சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

## 9.4 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

### 9.4.1 வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்

2010 மார்ச் 10 ஆந் திகதிய பீஎப்/ஆர்/2/2/3/5(4) ஆம் இலக்க அரச நிதிப்பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் 1.4.1 ஆம் பந்தியின் பிரகாரம் திணைக்களத்தினால் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டிற்கான வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம் 2013 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 9.4.2 வருடாந்த கொள்வனவுத் திட்டம்

2006 மார்ச் 24 ஆந் திகதிய 128 ஆம் இலக்க தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கையின் பிரகாரம் வருடாந்த கொள்வனவுத் திட்டம் 2013 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 9.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

### தீர்க்கப்படாத பொறுப்புக்கள்

சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தின் 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு தீர்க்கப்படாத பொறுப்புக்கள் ரூபா 101,951,447 ஆக இருந்ததுடன், அப்பொறுப்புக்கள் ஒரு வருடத்திற்குக் குறைவான காலத்திலிருந்து கொண்டுவரப்படுகின்ற மீதியாகும்.

## 9.6 இணக்கமின்மைகள்

### சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மை

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றின் ஏற்பாடுகளுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து காண்பிக்கப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் முதலியவற்றுடனான தொடர்பு | | பெறுமதி | இணக்கமின்மை |
|---|---|---|---|
| ------------------------------------------ | | ------------- | ------------------------------------------ |
| | | ரூபா | |
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் --------------------------------------- | | |
| (i) | நிதிப்பிரமாணம் 94 | 97,924,615 | மீளாய்வாண்டின் போது 18 செலவின விடயங்களில் ஏற்பாட்டை விஞ்சி பொறுப்புக்கள் ஏற்படுத்தப்பட்டிருந்தன. |
| (ii) | நிதிப்பிரமாணம் 103(1) மற்றும் 104(1) | - | மீளாய்வாண்டின் போது ஏற்பட்ட 13 திடீர் விபத்துக்கள் தொடர்பான நட்ட இழப்பின் பெறுமதி கணிப்பிடப்பட்டு நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (iii) | நிதிப்பிரமாணம் 237(ஆ) | 349,840 | பொருட்கள் கொள்வனவு செய்வதற்காக வழங்கப்பட்ட முற்பணங்கள் தீர்க்கப்படாது வழங்குனர்களுக்கு 06 சந்தர்ப்பங்களின் போது மேலும் ரூபா 29,229,290 தொகை செலுத்தப்பட்டிருந்தது. |
| (ஆ) | பொது நிருவாகச் சுற்றுநிருபம் ---------------------------------- | | |
| (i) | 1998 ஏப்ரல் 03 ஆந் | 14,841 | சுற்றுநிருப ஏற்பாடுகளுக்கு முரணாக |

| | | | |
|---|---|---|---|
| | திகதிய 12/98 ஆம் இலக்க சுற்றுநிருபம் | | நேர்முகப்பரீட்சைப் படி மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது. |
| (ii) | 1990 ஒக்தோபர் 10 ஆந் திகதிய 41/90 ஆம் இலக்க சுற்றுநிருபம் | 467,455 | 07 வாகனங்களை பழுதுபார்ப்பதற்காக கொடுப்பனவுகளைச் செய்வதற்கு முன்னர் பழுதுபார்த்தல் வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டமைக்கு தகைமையுள்ள இயந்திரப் பொறியியலாளரின் அறிக்கை பெறப்பட்டிருக்கவில்லை. |

## 9.7 மனிதவள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மிகைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 15 | 09 | 06 | - |
| (ii) | மூன்றாம் நிலை | 15 | 10 | 05 | - |
| (iii) | இரண்டாம் நிலை | 21 | 12 | 09 | - |
| (iv) | ஆரம்ப நிலை | 30 | 26 | 04 | - |
| (v) | ஏனையவை(அமைய/தற்காலிக/ ஒப்பந்த அடிப்படை) | 30 | 33 | - | 03 |
| (vi) | சிவில் பாதுகாப்பு படையணி | 40,000 | 37,975 | 2,025 | - |
| | மொத்தம் | 40,111 | 38,065 | 2,049 | 03 |

மீளாய்வாண்டின் இறுதியளவில் 2,049 வெற்றிடங்களை நிரப்புவதற்கு திணைக்களம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## 10. தலைப்பு 325 – இலங்கை கடற்கரை பாதுகாப்புத் திணைக்களம்

---

### 10.1 கணக்காய்வின் நோக்கெல்லை

---

இலங்கை கடற்கரை பாதுகாப்புத் திணைக்களத்தின் 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், இணக்கக் கூற்றுக்கள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2014 திசெம்பர் 04 ஆந் திகதி பணிப்பாளர் நாயகத்திற்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல் மாதிரிகள் மீதான தெரிவுச் செவ்வை பார்த்தல் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அம் மீளாய்வினதும் செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லை, பரப்பு என்பன எனக்கு கிடைக்கப்பெற்றுள்ள பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வினை மேற்கொள்ளக் கூடிய வகையில் தயாரிக்கப்பட்டதாகும்.

### 10.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்

---

ஒதுக்கீட்டுக் கணக்கு, இணக்கக் கூற்றுக்கள் என்பவற்றை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், பொது நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல், நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகளையும் இணக்கக் கூற்றுக்களையும் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், அமுலாக்குதல், செயற்படுத்துதல் என்பன இந்த பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

**10.3 கணக்காய்வு அவதானிப்புக்கள்**

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் பிரகாரம் இலங்கை கடற்கரைப் பாதுகாப்புத் திணைக்களத்தின் ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்று இவ்வறிக்கையின் (அ) முதல் (ஈ) வரையான பொது அவதானிப்புகள் மற்றும் 10.4 இலிருந்து 10.8 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புக்களைத் தவிர்த்து திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது அவதானிக்கப்பட்டது.

**(அ) கணக்கேடுகள் மற்றும் பதிவேடுகளைப் பேணியிருக்காமை**

இலங்கை கடற்கரைப் பாதுகாப்புத் திணைக்களத்தினால் கீழே காட்டப்பட்டள்ள பதிவேடுகள் பேணிவரப்பட்டிருக்காததுடன் சில பதிவேடுகள் முறையாகவும் நாளதுவரையாகவும பேணப்பட்டிருக்காமை கணக்காய்வுத் தெரிவுப் பரிசோதனைகளில் அவதானிக்கப்பட்டது.

| பதிவேட்டின் வகை | தொடர்புடைய பிரமாணம் | அவதானிப்பு |
|---|---|---|
| பொறுப்புக்கள் பதிவேடு | நிதிப்பிரமாணம் 214 | பேணப்பட்டிருக்கவில்லை |
| நிலையான சொத்துக்கள் பதிவேடு | 1978 ஆம் ஆண்டின் திசெம்பர் 19 ஆம் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | நாளதுவரையாகவும பேணப்பட்டிருக்கவில்லை |
| கணனி துணைச்சாதனங்கள் மற்றும் மென்பாகங்கள் தொடர்பான நிலையான சொத்துக்கள் பதிவேடு | 2002 நவம்பர் 28 ஆந் திகதிய IAI/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | நாளதுவரையாக்கப் பட்டிருக்கவில்லை. |

**(ஆ) பாதீட்டு முரண்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 02 செலவின விடயங்களிற்காக மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 390,000 தேறிய ஏற்பாடுகள் முழுவதும் சேமிக்கப்பட்டிருந்தன.

(ii) 07 செலவின விடயங்களுக்கு கூடுதலாக ஏற்பாடு செய்யப்பட்டதன் காரணமாக நிதி ஏற்பாட்டினைப் பயன்படுத்தியதன் பின்னர் சேமிப்பானது தொடர்புடைய

தேறிய ஏற்பாட்டின் 55 சதவீதத்திற்கும் 93 சதவீதத்திற்கும் இடைப்பட்ட வீச்சில் காணப்பட்டது.

**(இ) கட்டுநிதிக் கணக்கு**

திணைக்களத்தில் 2013 திசெம்பர் 31 ஆந் திகதியன்று 7002/0000/00/0409/0013/000 ஆம் இலக்க கணக்கில் ரூபா 248,939 கட்டுநிதி மீதியொன்று காணப்பட்டது. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) இரண்டு உத்தியோகத்தர்களினால் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த குறித்த நோக்க உப கட்டுநிதிகள் முறையே ரூபா 11,025 மற்றும் ரூபா 4,000 தொகைகளினால் தீர்க்கப்பட வேண்டிய போதிலும், நிதிப்பிரமாணம் 371 இற்கு முரணாக கருமம் முடிவுற்று முறையே 75 மற்றும் 27 நாட்கள் கையில் வைத்திருக்கப்பட்டு அத் தொகைகள் தீர்க்கப்பட்டிருந்தன. அவ்வாறே மற்றுமோர் உத்தியோகத்தரினால் பெறப்பட்டிருந்த ரூபா 20,000 குறித்த நோக்க உப கட்டுநிதி 13 நாட்களாக குறித்த பணிக்காக பயன்படுத்தப்படாது வைத்துக்கொள்ளப்பட்டிருந்தது. திணைக்களத்தின் உப கட்டுநிதிகளை வழங்குதல் மற்றும் தீர்ப்பனவு செய்தல் தொடர்பில் நிதிப்பிரமாணத்திலுள்ள ஏற்பாடுகளின் படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காமையால் அரசாங்கத்துக்குச் சொந்தமான நிதிகள் துஷ்பிரயோகம் செய்யப்படுவதற்கு வாய்ப்புக் காணப்பட்டது.

(ii) 2013 நவம்பர் 18 ஆந் திகதிய 04/2013 ஆம் இலக்க திறைசேரிச் செயற்பாடுகள் சுற்றறிக்கையின் I ஆம் பந்தியின் பிரகாரம் திணைக்களத் தலைவரினால் தனது அலுவலகத்தின் கணக்குகளை தீர்ப்பனவு செய்வதற்காக பொறுப்புமிக்க பதிவிநிலை உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) பொது வைப்புக் கணக்கு**

திணைக்களத்தின் 2013 திசெம்பர் 31 ஆந் திகதியிலுள்ளவாறு 6000/0000/00/0015/0171/000 ஆம் இலக்க வைப்புக் கணக்கில் ரூபா 188,252 மீதி காணப்பட்டது. ஆந்த மீதியில் 02 ஆண்டுகளிற்கு மேற்பட்ட காலமாக நிலவி வருகின்ற ரூபா 33,675 ஆன வைப்புத் தொடர்பில் நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**10.4 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்**

**கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவினை செயற்படுத்தல்**

திணைக்களத்தினால் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு தாபிக்கப்பட்டிருக்கவில்லை.

**10.5 சொத்துக்கள் முகாமைத்துவம்**

திணைக்களத்தின் சொத்துக்கள் சம்பந்தமாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுப் பரிசோதனைகளில் பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

**(அ) குறைவாகப் பயன்படுத்திய சொத்துக்கள்**

2012 மற்றும் 2013 ஆகிய ஆண்டுகளில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 516,446 ஆன பொருட்கள் கணக்காய்வுத் திகதியான 2014 யூன் 10 ஆந் திகதி வரையிலும் விநியோகிக்கப்படாது களஞ்சியத்தில் வைத்திருக்கப்பட்டதுடன் கொள்வனவு செய்யப்பட்டு 02 ஆண்டுகளைத் தாண்டிய பற்றரி சார்ஜர் ஒன்றும் அவற்றில் காணப்பட்டது.

**(ஆ) வாகனங்கள் தொடர்பில் வருடாந்த மெய்மையாய்வை மேற்கொள்ளல்**

நிதிப்பிரமாணங்கள் 756, 757 மற்றும் 1647(அ) பிரகாரம் திணைக்களத்திற்குச் சொந்தமான வாகனங்கள் தொடர்பில் வருடாந்த மெய்மையாய்வை மேற்கொண்டு அந்த அறிக்கை 2014 ஏப்ரல் 30 ஆந் திகதியளவில் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**(இ) தீர்க்கப்படாத பொறுப்புக்கள்**

இலங்கை கடற்கரைப் பாதுகாப்புத் திணைக்களத்தினால் 2013 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் தீர்க்கப்படாது ஒரு வருடத்திற்கும் குறைவான காலத்தில் நிலவிய ரூபா 3,745,969 பொறுப்புக்கள் காணப்பட்டன.

**10.6 வங்கிக் கணக்குகளை செயற்படுத்துவதிலுள்ள குறைபாடுகள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) திணைக்களத்தினால் 2013 திசெம்பர் மாதத்திற்காக தயாரிக்கப்பட்டிருந்த வங்கிக் கணக்கிணக்கக் கூற்றின் படி வழங்கப்பட்டிருந்த போதிலும், காலம் கடந்திருந்த ரூபா 6,600 பெறுமதியான 03 காசோலைகள் தொடர்பில் நிதிப்பிரமாணம் 396(ஈ) பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) திணைக்களத்தினால் 2013 திசெம்பர் மாதத்திற்காக தயாரிக்கப்பட்டிருந்த வங்கிக் கணக்கிணக்கக் கூற்றின் படி காசுப் புத்தகத்தின் பிரகாரம் காண்பிக்கப்பட்டுள்ள வங்கி மீதி ரூபா 109,875 ஆக காணப்பட்டிருந்த போதிலும், அத் திகதியிலுள்ளவாறு காசுப் புத்திகத்தின் படியான மீதி ரூபா 111,439 ஆகக் காணப்பட்டது. அதற்கமைய வங்கிக் கணக்கிணக்கக் கூற்றைத் தயாரிப்பதற்கு அடிப்படையாகக் கொள்ளப்பட்டிருந்த காசு மீதி ரூபா 1,564 வேறுபாடுடையதாக காணப்பட்டது.

## 10.7 முகாமைத்துவ பலவீனங்கள்

கணக்காய்வு தெரிவுப் பரிசோதனைகளில் பின்வரும் பலவீனங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) திணைக்களத்தினால் செலவிடப்பட்டிருந்த ரூபா 549,234 தொகையான மூலதனப் பண்புடைய செலவினம், மீண்டெழும் செலவினமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) திணைக்களத்திற்கு வருகை தருகின்ற வெளிநாட்டவர்களிற்காக 12 சந்தர்ப்பங்களில் ரூபா 346,064 மொத்தப் பெறுமதியுடைய அன்பளிப்புகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதிலும், அந்த அன்பளிப்புகளிலிருந்து அதிகளவானவை தனிப்பட்ட ரீதியில் வழங்கப்பட்டிருந்தன.

(இ) திணைக்களத்தின் சாரதிகள் மற்றும் வாகனங்களுக்கு பொறுப்பாகவுள்ள உத்தியோகத்தரினால் தயாரிக்கப்பட்டிருந்த நாளாந்த ஓட்டக் குறிப்புகள் மற்றும் மாதாந்த பொழிப்பு அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்டிருந்த விடயங்களை பரிசோதிக்கையில் திருத்தங்கள் செய்யப்பட்டிருந்தமை, அழித்தல் மை பாவிக்கப்பட்டிருந்தமை, பென்சிலால் எழுதப்பட்டிருந்தமை மற்றும் வாகனத்தை பயன்படுத்திய உத்தியோத்தர் சுருக்க ஒப்பத்தினை இட்டிருக்காமை போன்ற குறைபாடுகளும் நலிவுகளும் காணப்பட்டன. நாளாந்த ஓட்டக் குறிப்புகள் மற்றும் மாதாந்த பொழிப்பு அறிக்கைகளை பிரதியுடன் தயாரித்து அதன் மூலப்பிரதி கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், திணைக்களத்தினால் மூலப்பிரதி மாத்திரம் தயாரிக்கப்பட்டிருந்ததுடன் அவை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 10.8 மனித வளங்கள் முகாமைத்துவம்

இலங்கை கடற்படையில் சேவையில் ஈடுபட்டுள்ள 61 உத்தியோகத்தர்கள் மற்றும் 914 கடற்படையினர் பதவியணியாக திணைக்களத்தில் சேவையாற்றியிருந்ததுடன் திணைக்களத்திற்கு தேவையான பதவியணியினரை திறைசேரியினால் அங்கீகரித்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.